# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



ரூபா 150 /=

ஏப்ரல் - செப்ரெம்பர் 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லெறிந்து விட்டகலும் காரியமா ?

ஹிசாலினி... உன் மரணம் நாட்டை உலுக்கியது
உன்போன்றோர் பட்டியல்கள் எம்மண்ணில் மட்டுமா
உலகெங்கும் நீள்கிறது
தேச இன மதங்கள் சாதி இன வர்க்கங்கள்
காலங்கள் கூட கடந்திங்கு நீள்கிறது

உனது துயர்நிலைக்காய் கூடிநின்று ஓர்நாள்
கல்லெறிந்து போதலும் இலகு அல்ல
ஆனாலும் உனைச் சுற்றி
என்ன நடந்தது என்ப தறியாமல்
ஊடகத்துக்கொரு செய்தி ஊர் வாய்க்கு ஒரு தீனி
என்றநிலை மாற்ற ஏற்ற செயல்வேண்டும்

விலங்குப் போட்டியே உயர் மனித விழுமியமாய்
தினம் தினம் மனதில் திணிக்கின்ற
அதிகார மையத்தின் முதலாளும் உலகமைப்பு
விலங்காக்கும் எமதரச நுகர் வமைப்பு
முன்தள்ளும் விலங்குணர்வின் விளை பயனின்
வரலாற்றுக் கொடுந்துயரில் இவையும் ஒன்று

வரலாற்றுப் புகழுரைக்கும் பழம் பெருமை
பண்பாட்டில் இவைகளுக்கு வேர்களுண்டு
போகப் பொருளாக பெண்ணைக் கருதுகின்ற
ஆணாதிக்க மனம் இன்றும் அகலவில்லை
சட்டங்களால் மட்டுமிதைச் சரிப்படுத்த முடியாது
தண்டனையாலும் இதை தணிக்க முடியாது

கூடிநின்று ஓர் நாள் கல்லெறிந்து போகாமல்
அக்கூட்டுணர்வின் கோபத்தீ ஆற்றாத தீக்கனலில்
அறிவை இட்டு ஆயுதமாய் அடித்தெடுத்துக் கூராக்கு
மானிடத்தை வேறறுக்கும் விலங்குணர்வை கீறி எறி
சமூகத்தின் அடிமைநிலை அறுவைச் சிகிச்சைக்கு
சோர்வின்றி உன் கரத்தை நாளும் சேர்



பாமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம்

ஏப்ரல் - செப்ரெம்பர் 2021

இதழ் 102

# உள்ளடக்கம்

**நூலக எரிப்பின் 40ம் ஆண்டு நினைவாக**


| | |
|---|---|
| தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ | 05 |
| க. தணிகாசலம் | 41 |
| என். செல்வராசா | 59 |


## வேலியும் பயிரும்

காலிப் பயல்கள் கடையை உடைப்பது போல்
வேலி பயிரை எல்லாம்
மேய்ந்துவிட்டுப் போயிற்றோ?
காடையர்கள் நூலகத்திற் கைவரிசை காட்டுதல் போல்
வேலி பயிரை எல்லாம்
மேய்ந்துவிட்டுப் போயிற்றோ?
கொன்று
தெருவிற் பிணங்கள் எறிவதுபோல்
வேலி பயிரை எல்லாம்
மேய்ந்துவிட்டுப் போயிற்றோ?

கவிஞர் முருகையன்

**கவிதைகள்**


| | |
|---|---|
| தம்பா | 04 |
| சிவசேகரம் | 17 |
| சந்திரலேகா கிங்ஸ்லி | 26 |
| இராசாத்தோட்டம் எஸ். இராமஜெயம் | 31 |
| த. ஜெயசீலன் | 36 |
| சி. கிருஷ்ணப்பிரியன் | 49 |
| லுணுகல ஸ்ரீ | 49 |
| சுகன்யா இராஜசூரி | 58 |


**சிறுகதைகள்**



| | |
|---|---|
| க. சிவகரன் | 12 |
| மு. அநாதரட்சகன் | 18 |
| ந. பார்த்தீபன் | 27 |
| வள்ளியம்மை சுப்பிரமணியம் | 32 |
| சிவ. இராஜேந்திரன் | 37 |
| தாட்சாயணி | 45 |
| மு. தயாளன் | 53 |


**குறுங்கதை**


| | |
|---|---|
| க. லக்ஷன் | 63 |


**கட்டுரைகள்**


| | |
|---|---|
| பி. முத்துலிங்கம் | 15 |
| நிருஜா இராசரத்தினம் | 20 |
| கலாநிதி நா. சுப்பிரமணியன் | 53 |
| இதயராசன் | 56 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

THAYAKAM

Art, Literature Social science Magazine

இதழ் 102

ஏப்ரல் - செப்ரெம்பர் 2021



பிரதம ஆசிரியர் :
க. தணிகாசலம்

நிர்வாக ஆசிரியர் :
ச. சத்தியதேவன்

ஆசிரியர் குழு :
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
சோ. தேவராஜா
சிவ. இராஜேந்திரன்
அழ. பகீரதன்
தெ. ஞா. மீநிலங்கோ
வே. தினகரன்
ஆதித்தன்

வடிவமைப்பு :
எஸ். ரி. அனுஜன்
சிவ. பரதன்

அட்டை ஓவியம் :
இணையத்திலிருந்து

உள் ஓவியங்கள் :
இணையத்திலிருந்து

அச்சுப் பதிவு :
ஜே. எஸ். பிறின்ரேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு



தொடர்பு :
ஆசிரியர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தொலைபேசி : +94 76 528 3003
மின்னஞ்சல் : thajaham@gmail.com
வலைப்பூ : thajaham.blogspot.com



விளம்பரம் :
புத்தகப் பண்பாட்டு பேரவை
ஸாரங்கசர்மா
அருந்தவராசா ஹிரித்தியா

வெளியீடு :
தேசிய கலை இலக்கியப் பேரவை
62, கொக்குவில் சந்தி
கொக்குவில்

வங்கிக்கணக்கு :
Editorial Board of thayakam
S/A no : 007236144
BOC, Chankanai




# பேரழிவுகளின் நினைவுகளும் நிமிர்வுகளும்

ஒரு பெருந்தொற்றின் பேரழிவு மனிதகுலத்தை இரண்டு ஆண்டுகளாக ஆட்டிப்படைத்து மீண்டும் மீண்டும் பல்வேறு திரிபடைந்த வடிவங்களில் உருமாறி தொடர்ந்து வருவேன் என எச்சரிக்கிறது. இலத்திரனியல் தொழில் நுட்பத்தின் உயர்நிலை வளர்ச்சியும், அறிவியல், விஞ்ஞானம், ஆன்மிகம் அனைத்தும் அதன் சக்திக்கு முன்னால் திகைத்து நிற்பதை உலக மக்கள் ஒருகணமாவது உணர்ந்துள்ளனர். 'தெய்வங்களாலையும் ஒண்டும் செய்ய முடியேல்லை, அடைபட்டுக் கிடக்குதுகள்' போன்ற பல விமர்சனக் குரல்கள், சாதாரணமாக மக்களின் வார்த்தைகளில் வெளிவருகின்றன. கைகழுவல், முகக்கவசம் அணிதல், இடை வெளியைக் கடைப்பிடித்தல், தனிமையில் இருத்தல் என தனி மனிதர்கள் தமது நலத்துடன் சமூக நலத்தையும் கருத்திற் கொண்டு செய்யும் சமூகக் கூட்டு நடத்தை அவசியமாக உள்ளது. மக்களின் 'கொவிட்' உயிர் கொல்லிக்கு எதிரான அறிவியல் பூர்வமான விழிப்புணர்வும், தடுப்பு நடவடிக் கைகளும் ஓரளவு பெருந்தொற்றின் பரவலைக் கட்டுக்குள் கொண்டுவர உலகெங்கும் உதவி வருகின்றன. இத்தகைய விழிப்புணர்வும், கட்டுக்கோப்பும், சமூகக் கூட்டு நடைமுறையும், தலையீடுகளின்றி இயல்பாகவே அனைத்துப் பாதிப்புகளுக்கும் எதிராக ஏற்பட்டால் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் பல எளிதாகத் தீர்ந்து விடும் என்பது மானுட விருப்பாக எழுவது இயல்பாகும்.

எனினும் உலகநாடுகள் பலவற்றிலும், நாளாந்த மனிதவாழ்வு முடங்கி ஒடுங்கியது. தனியார் மயத்தால் ஏற்பட்ட, ஒழுங்குபடுத்த முடியாத, மருத்துவ வசதிகளின் பற்றாக் குறைகள் பெரும் எண்ணிக்கையான மரண அவலங்களுக்கு காரணமாகின என்பது நடைமுறை உண்மையாகியது. பொருளாதார முடக்கநிலை கல்வி, கலாசார, மத நடவடிக்கைகளின் முடக்க நிலை, வேலை இன்மை, வாழ்வதற்கான வருமானம் இன்மை, நகரங்களில் பணிபுரிந்த தொழிலாளர் படையின் கிராமங்களை நோக்கிய துயர்மிகுந்த நீண்ட பயணங்கள் என எத்தனையோ மனிதத் துயர்களைத் தந்து அச்சுறுத்தி நிற்கும் பெருந் தொற்றின் தாக்கங்களில் இருந்து தொடர்ந்தும் மீள்வதற்கு, மக்கள் கடைப்பிடித்த அதே தனிமனித, சமூக விழிப்புணர்வும், கூட்டு நடவடிக்கைகளும் அவசியமாக உள்ளன.

ஆனால் இப்பெருந்தொற்று நிலைமையின் பேரிழப்புகளிலிருந்து எத்தகைய படிப்பினைகளும் இல்லாமல் கவிஞர் தாகூர் ஒரு கட்டுரையில் குறிப்பிடுவது போல மக்களை மீண்டும் அதே பழைய "மாமூல்' கிழவி அபினி கொடுத்து பாதித் தூக்கத்தில் வைத்திருப்பது" போன்ற நிலை மீள்கிறது. மக்களை இருளுக்குள் அமுக்கி வைத்து தமது நலன்களை பாதுகாக்கும், அதிகாரவர்க்க அமைப்பின் அடிமை நுகத்தடியில் நீளும் வாழ்க்கையை மக்கள் தொடர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எத்தகைய பேரழிவுகள் நடந்தாலும், எதுவும் நடவாதது போல, அவற்றில் இருந்து எதையும் கற்பதற்கு அவகாசம் இல்லாமல் நாளாந்த நுகர்வுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்குள் மக்கள் தள்ளப்படுகின்றனர். தம்மையும் தமது சந்ததிகளின் வாழ்வையும் பாதிக்கும் பெருந்தொற்றை விடக் கொடூரமான முதலாளித்துவ சமூக அமைப்பை மாற்றி அமைப்பதற்கான அரசியல் சமூக விழிப்பைப் பெறுவதிலும், ஒன்றுபடுவதிலும் இருந்து மக்கள் திட்டமிட்டு பல்வேறு வழிகளிலும் அந்நியமாக்கப்படுகின்றனர்.

அமெரிக்காவில் பெருந்தொற்றின் போது வேலை இழந்த கறுப்பினத் தொழிலாளி 'ஜோர்ஜ் பிளையிட்' கழுத்து நெரிக்கப்பட்டு கொடூரமாக கொலைசெய்யப்பட்ட நிகழ்வும், 'மூச்சுவிட முடியவில்லை' என்று இறுதியாக ஒலித்த அவரது மரண ஓலமும், 'சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாத' இக்கொடூரமான சமூக அமைப்புக்கு எதிரான, வலிமையான ஒரு படிமமாக, எதிர்ப்புக் குரலாக உலகெங்கும் ஒலித்தது. இதனால் அமெரிக்க அரசின் ஒடுக்குதல்களையும் மீறி வெள்ளை இன, கறுப்பினத் தொழிலாளர்கள் வீதிகளில் ஒன்று திரண்டனர். நிறவெறித் தலைவர்களின் சிலைகள் சந்திகளிலும், ஆறுகளிலும் இழுத்து வீசப்பட்டன. இலண்டன், பரிஸ் போன்ற மேற்கு நாட்டுத் தலைநகரங்கள் உட்பட உலகநாடுகள் பலவற்றில் இதன் உணர்வலைகள் உச்சமடைந்தன. இவற்றுடன் இணைந்து பெருந்தொற்றுக் காலத்தில் வெள்ளைமாளிகையிலும், ஏனைய இடங்களிலும் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அமெரிக்க 'அதி உயர்' ஜனநாயகத்தின் போலித் தனங்களை உலகுக்கு மேலும் அம்பலமாக்கியது.

இலங்கையில் கூட, பெருந்தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் பணியில், பேரினவாத யுத்த வெற்றியால் தேசியப் படிமங்களாக்கப்பட்ட படையினர் முதன்மைப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டனர். இதுபோன்று போர்க்கால நினைவுகளை மீட்டு, நினைவேந்தல் நிகழ்வுகளை நிகழ்த்துவதில் தமிழ் அரசியலாளர்கள் போட்டி போட்டு முன் நின்றனர். அரசு தனது நலன்களுக்கு பலம் சேர்ப்பதற்காக, அவற்றைத் தடுப்பதில் முனைந்து நின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை எட்டாது, அதனால் நிகழ்ந்த போரின் வெற்றி தோல்வியின் நினைவுகளை தொடர்வதே இலங்கையின் அரசிலாக தொடர்ந்தும் உள்ளது.

யாழ். பொது நூலக எரிப்பின் நாற்பதாவது ஆண்டு நினைவு நாட்களும் இந்த வரிசையில் வந்து நிற்கிறது. இதனையும் போரின் போது, அரசு செய்த வெட்கித் தலைகுனியக் கூடிய செய்கைகளில் ஒன்றாகக் கடந்து செல்ல முடியுமா? அல்லது அறிவியல் என்பது அதிகார வர்க்கங்களின் வலிமை மிக்க ஆயுதங்களில் ஒன்றாக உள்ளது என்ற உண்மையை வெறுமனே ஏற்று நாம் அமைதி அடைய முடியுமா? இத்தகைய கேள்விகளுக்கு விடையாக, உலகில் விடுதலையை விரும்பும் மக்களது அறிதல் முறை, அவர்களை ஒடுக்குகின்ற அதிகார வர்க்கங்களின் அறிதல் முறையைவிட வேறுபடுகிறது என்ற உண்மையை இத்தகைய எரியூட்டல் நிகழ்வுகளும், போரழிவுகளும் வரலாற்று அடிப்படையில் அமைந்த பெறுமதிமிக்க இயங்கியற் பாடமாக மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிக்கப்படவேண்டும்.

இத்தகைய விடுதலையை – சமூக மாற்றத்தை – வேண்டி நிற்கும் மக்களது அறிதல் முறையையும், அதன் உண்மை நிலையையும், நியாயத் தன்மையையும் ஏற்றுக்கொண்ட இளம் தலைமுறையினரின் எண்ணிக்கை இன்று அதிகரித்து வருகிறது. நடந்து முடிந்த போராலும், பெருந்தொற்றாலும் மாறி மாறி வரும் அரசுகள், பெற்றுவரும் கடன் சுமைகள் நாட்டு மக்களின், தலைகள் மீது சுமத்தப்படும் வரிச்சுமைகளாக மட்டுமல்ல எமது அடுத்த சந்ததிகளின் மீதும் சுமத்தப்படும் வாழ்க்கைச் சுமைகளாகவும் உணரப்படுகின்றன. 'சுதந்திரம்' அடைந்து எழுபது ஆண்டுகள் கடந்தும், தீர்க்கப்படாத தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் எதிர்நோக்கும் பொருளாதார, கல்வி, மத, பண்பாட்டுப் பிரச்சனைகளையும், நெருக்கடிகளையும் அடுத்த தலைமுறையினரிடமும் கையளிக்கும் அரசியலே இன்றும் தொடர்கிறது.

அத்துடன் கொலனித்துவ, நவகொலனித்துவ அடிமை மனப்பாங்குடன் இன்றும் இயங்கிவரும் அனைத்து இன அரசியல் தலைவர்களும், இந்நாட்டை அமெரிக்க, இந்திய, சீன உலக வல்லரசுகளின் போட்டிக் களமாக ஆக்க முற்படுகின்றனர். தேசத்தின் நிலங்களை, வளங்களை மட்டும் அல்ல இத்தேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் மக்களின் உழைப்பையும், மக்களின் இறைமையையும் இவ் வல்லரசுகளுக்கு விலைபேசி விற்க முனைகின்றனர். எனவே இத்தேசத்தின் நலனுக்காக உழைக்கும் மக்கள் விழிப்புணர்வுடன் ஒன்றுபட வேண்டிய காலம் இதுவாகும்.

இதன் கொடூர விளைவுகளை பரவலாக உணர்ந்து வரும் இத்தேசத்தின் இளம் தலைமுறையினர் உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து, நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இன்று தெருவில் இறங்குகின்றனர். இத்தகைய விடுதலை அரசியலை, அறிவியலை, பண்பாட்டை முன்னெடுக்கும், இத்தேசத்தின் வளத்துக்காக உழைக்கும் பெரும் எண்ணிக்கையான மக்களின் கரங்களை ஒன்றிணைத்துப் பலப்படுத்துவதே பேரழிவுகளிலும், பெருந்தொற்றின் பின்னரும் மக்களின் விடுதலைக்கான பாதையாக அமைய முடியும்.

O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவனை வரச்சொல்லுங்கள்

சிரிமத்தின் தூக்கத்துள் கோசம் வைத்து
ஊர்வலம் போனது யார்?
சாடிஸ்ட்டுகளின் வாடையை முகர
நடு வீதிக்கு தாவும் தலைமுடியை இழுத்து
படலைக்கு முண்டு கொடுக்கும் அம்மாவின் கரங்கள்


கடலின் காடாத்து சாம்பல் அள்ள தீ சட்டி சுமந்து
பரபரக்கும் எருது வாகனங்கள்
வேலிகளில் முளைக்கும் தலைகள்
தெற்கிலிருந்து அசுரர்கள் வந்ததாக கிசுகிசுக்கும்

நான்கு திக்கும் புகைகிளம்ப
வடக்கே எம்பியின் வீடோ கிழக்கே கட்சியின் தலைமையகமோ
தெற்கே கடைகளோ மேற்கே?
இரவெல்லாம் கூரையில் ஹனுமானின் தீப்பந்த வாலாக நீளும் பட்டிமன்றம் விடையறியா
சேவல் கூவுவதை மறந்து பதைபதைக்கும்

சோளகக்காற்று அள்ளிவந்த மண்
வீதி மறியல் செய்யும் தூங்கா மூஞ்சிகளுக்கு
'ஆசியர் கபாலத்துள் நெருப்பு வைத்து போகி கொண்டாடுகிறார்'
விம்மி காற்றில் கரையும்

மின் கம்பத்தில் தட்டிப்பறிக்க காத்திருக்கும் காக்கா
'ஒரு நூலகம் மூடப்படும் போதெல்லாம் ஆயிரம் சிறைச்சாலைகள் திறக்கப்படும்
திறக்கப்படும்
திறக்கப்படும்' சாபமிட்டு கரைய
ஊரிலிருந்த அத்தனை கைகளும் கற்களால் அபிஷேகம் செய்தன
புகை மங்கா எங்கள் ஊரில் காகம் கரைவதை நிறுத்தியதுமில்லை
எரிகட்களுக்கு தட்டுப்பாடு
வந்ததுமில்லை
மனிதர்கள் கபாலத்துள் தீச்சட்டியை சுமந்து திரிகிறார்கள்

**தம்பா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நூலக எரிப்பின் 40வது ஆண்டு நிறைவை முன்னிறுத்தி

# வரலாறும் வழித்தடமும்:

## போகாத ஊருக்குப் போய்ச்சேர முன்னர்


தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

*அறிமுகம்*

புத்தகங்களுடனான எனது காதல் மிக நீண்டதும் ஆழமானதும். அதன் நீட்சியே நூலகங்களுடனான எனது உறவு. எழுத்தென்றால் என்னவென்று தெரியாத வயதில் வீட்டு அலுமாரியை நிறைத்திருந்த புத்தகங்களின் மீது ஒரு பரவசமிருந்தது. அப்பா கொழும்பில் இருந்து வரும்போதெல்லாம் அதனுடன் உறவாடுவதைக் காண அதில் ஏதோ விசேடம் இருப்பதாக உணர்ந்ததுண்டு. அப்பா தன் சாரத்திற்குள் என்னை இருத்தியபடி நாற்சாரில் அமர்ந்து புத்தகங்களை வாசித்த நாட்கள் பல. காலம் சில கடக்க ஊரும் போர்க்களமாகி இந்தியப் படைகளின் முகாமானது எங்கள் வீடு. அப்பாவின் புத்தகங்கள், அப்பப்பாவின் சேமிப்புக்கள் என அனைத்தும் எங்கள் நாற்சார் வீட்டின் நடுமுற்றத்தில் மழைக்கு இரையானது. புத்தகங்கள் மீதான வன்முறையின் முதலாவது அனுபவம் அது. ஐந்து வயதுச் சிறுவனாய் அதை விளங்கிக் கொள்ளும் பக்குவம் எனக்கில்லை. காலங்கள் கடந்தன. இன்றுவரை அச் செயலுக்காக இந்தியாவையும் இந்தியர்களையும் என் அப்பா மன்னிப்பதாக இல்லை. முதலில் அதன் நியாயம் புரியாவிட்டாலும் பதின்ம வயதுகள் தாண்டும் போது அது புரிந்தது. அதன் வலியின் தீவிரத்தை என்னால் உணர முடிகிறது.

ஒரு தனிமனிதனின் புத்தகங்கள் அழிக்கப்பட்டதன் வலியே இவ்வளவு பெரிதாக இருக்கும்போது ஒரு சமூகத்தின் அடையாளமாய், அறிவின் ஊற்றாய், உரையாடல் களமாய், கூடலாய் இருந்த ஒன்றின் அழிப்பும் அது தன்னோடு சாம்பலாக்கிய புத்தகங்களும் ஏற்படுத்தும் வலி எவ்வளவு பெரியதாய் இருக்க முடியும். இந்தப் பின்புலத்திலேயே யாழ் நூலக எரிப்பின் நாற்பதாண்டு நிறைவில் எனது பார்வையைச் செலுத்த விரும்புகிறேன். புத்தகங்களின் மீதான வன்முறையை நாம் எல்லோரும் எமது வாழ்நாளில் நிச்சயம் கண்டிருப்போம். பாடசாலைகளில் ஆசிரியரால் சுழற்றப்படும் புத்தகங்கள் முதல் குப்பைக்கூடைகளில் கரையொதுங்கும் புத்தகங்கள் வரை புத்தகங்கள் மீதான வன்முறை வரன்முறையாக நடைபெறும் நிகழ்வாகும். இவை புத்தகங்கள் மீதான கோபத்தின் விளைவல்ல என்று நாம் அறிவோம். ஆனால் புத்தகங்கள் கையாளப்படும் முறையில் ஒரு சமூகப் பரிமாணம் இருக்கின்றது. இது சமூகங்களுக்கு சமூகம் வேறுபடுகிறது. அப்பரிமாணம் காலச்சூழலோடு மாறுகிறது.

2003ம் ஆண்டு ஈராக் மீதான அமெரிக்க முற்றுகையை தொலைக்காட்சி வழி பார்த்துக் கொண்டிருந்தபோது ஈராக்கிய தேசிய அருங்காட்சியகம் சூறையாடப்படும் காட்சிகள் ஒளிபரப்பாகின. நான் ஒருகணம் விக்கித்து நின்றுவிட்டேன். ஒரு நாகரிகத்தின் ஒட்டுமொத்த வரலாறும் சாட்சிகளும் வாழ்வும் சில மணித்துளிகளில் அடித்து நொருக்கப்பட்டு இல்லாமலாக்கப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து லோரன்ஸ் ரொத்பீல்ட் (Lawrence Rothfield) எழுதிய The Rape of Mesopotamia புத்தகத்தை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அமெரிக்க இராணுவத்தினருடன் தொடர்பிருந்த போதும் இந்த அவலத்தைத் தடுக்க முடியவில்லை என்ற குற்றவுணர்வில் அந்தப் புத்தகத்தை ரொத்பீல்ட் எழுதியிருந்தார். அதை வாசித்து முடித்த போது இவ்வாறானதொரு நூல் எனது யாழ் நூலகம் சார்ந்து வெளிவரவில்லை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. என்னைப் போன்று யாழ் நூலக எரிப்பின் பின்னர் பிறந்த தலைமுறைக்கு அந்த நூலகம் பற்றிக் கிடைக்கின்ற தகவல்கள் சொற்பமானவை. எரிக்கப்பட்ட நூலகத்தில் முக்கியமான பல நூல்கள் இருந்தன என்று சொல்லப்படுகிறது. இங்கிருந்த சில முக்கிய நூல்கள் பற்றிய குறிப்புகளை மூதறிஞர் க. சி. குலரத்தினம் தனது "யாழ்ப்பாண நூல் நிலையம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் முழுமையான விபரங்கள் இல்லை. அங்கிருந்த முக்கியமான நூல்கள் எவை, எரிக்கப்பட்ட போது நூலகத்தில் இருந்த நூல்களின் பட்டியல் போன்ற எதுவும் எமக்குத் தெரியாது. எனவே நாம் எங்கிருந்து தொடங்குவது?

### *வரலாற்றைத் திரும்பிப் பார்த்தல்*

யாழ்ப்பாண நூலகத்தின் வரலாறு மிக நீண்டது. யாழ்ப்பாண நூலகத்தின் தொடக்கம் 1842ம் ஆண்டு எப். சீ. கீரினியரால் ஆரம்பிக்கப்பட்டது. இது நீண்ட காலம் நிலைக்கவில்லை. கனகசபை முதலித்தம்பியார் செல்லப்பா என்ற தனிமனிதரின் அயராத முயற்சியால் 1933ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பொது நூல் நிலையத்துக்கான விதை அவரது லங்கா ஹோம் இல்லத்தில் தொடங்கப்பட்டது. அவரது பரந்த மனப்பாங்கும் பொது நோக்குமே அனைவருக்குமான ஒரு நூலகம் உருவாவதற்கு காரணியானது. ஆனால் காலப்போக்கில் தமிழ்ச் சமூகம் செல்லப்பாவை மறந்து போனது. இங்கு க. மு. செல்லப்பாவின் இரண்டு செயல்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

க. மு. செல்லப்பா 1933ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ம் திகதி "யாழ்ப்பாணத்திற்கு ஒரு மத்திய இலவச நூலகம்" (A Central Free Tamil Library in Jaffna) என்று தலைப்பிட்ட துண்டுப்பிரசுரங்களை அச்சடித்து நிதி கோரினார். அவர் இந்தக் கோரிக்கையை யாழ்ப்பாணத்திற்குள் மட்டுப்படுத்தவில்லை. இலங்கையின் பிற பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களையும் நிதி உதவி செய்யுமாறு வேண்டினார். அவர் தமிழ் பேசும் மக்களுக்கானதாக அந் நூலகத்தைக் கனவு கண்டார். மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து மதத்தினரையும் அன்போடு அழைத்தார். உதவி கோரினார். தாம் தமிழ் என்று குறித்துரைப்பதால் பிறமொழிகளைக் குறைத்து மதிப்பிடவில்லை எனவும் நூலகத்தில் பிற மொழி நூல்களும் அமையும் என்றும் விளக்கினார். இது அவரது சமூக நோக்கையும் தெளிவான பார்வையையும் காட்டி நின்றது.

செல்லப்பாவின் இரண்டாவது முக்கிய செயல், இந்தத் திட்டத்தைத் தனியே முன்னெடுக்காமல் கூட்டத்தைக் கூட்டி அமைப்பாக்கி அதில் தான் நடுநாயகமாக அமராமல் பிறருக்கு வழிவிட்டு கடமையே கண்ணாகச் செயற்பட்டார். இந்தக் கூட்டத்தில் செல்லப்பா ஆற்றிய தொடக்கவுரை மிகவும் முக்கியமானதும் மனங்கொள்ளத் தக்கதுமாகும். அவ்வுரையில் மூன்று முக்கிய செய்திகளை அவர் சொன்னார்.

1. கிராமங்கள் தோறும் நூலகங்கள் அமையப் பெறல் வேண்டும். அதன் நடுநாயகமாய் யாழ் நூலகம் அமைதல் வேண்டும்.
2. அமையப்பெறுகின்ற நூலகம் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களுக்கும் பயன்விளைவிப்பதாக அமைய வேண்டும்.
3. தனது தனிமுயற்சியால் உருவானபோதும் தான் இதை உள்ளுராட்சியிடம் அல்லது அரசாங்கத்திடம் ஒப்படைப்பதாகவும் இதுவரைத் சேர்த்த பணத்தையும் சேர்த்தே ஒப்படைப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ் நூலகம் தனியான சொந்தக் கட்டடத்தில் இயங்குவதைப் பார்க்கும் வாய்ப்பு செல்லப்பாவுக்குக் கிடைக்கவில்லை. 1958ம் ஆண்டு அவர் இயற்கையெய்திவிட்டார். யாழ் நூலகத்தின் எரிப்பின் அவலத்தைப் பேசுகின்ற நாங்கள் இதை உருவாக்க அடித்தளமிட்டு அதைப் பொதுநோக்கோடு அணுகியவரை நினைப்பதில்லை. சாதாரண மனிதர்கள் வரலாற்றின் கொடுங் கரங்களில் இருந்து ஒதுக்கப்பட்டபடியே இருக்கிறார்கள்.

செல்லப்பாவுக்கு அடுத்தபடியாக முக்கிய பங்களிப்பை வழங்கியவர் வணக்கத்துக்குரிய கலாநிதி ஐசாக் தம்பையா அவர்கள். 1934ம் ஆண்டு யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் செல்லப்பாவால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் ஏராளமான புத்தகங்களையும் நிதியுதவியையும் வழங்கியுள்ளார். 1938ம் ஆண்டு பண்டாரவளைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வரை காத்திரமான பங்களிப்பை அவர் வழங்கியிருந்தார். இவரதும் செல்லப்பாவினதும் முன்முயற்சிகளின் விளைவே 1934 ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி வாடகைக்குப் பெறப்பட்ட பொது இடத்தில் 844 நூல்க்ள், 36 பருவ இதழ்கள் ஆகியவற்றுடன் நூலகம் செயற்படத் தொடங்கியது. கலாநிதி ஐசாக் தம்பையாவின் துணைவியார் மங்களநாயகம் ஈழத்தின் முதலாவது பெண் நாவலாசிரியராவார். அவரது 'நொருங்குண்ட இருதயம்' நாவல் 1914ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

எரிக்கப்பட்ட நூலகத்தின் வரலாறு குறித்த முக்கியமான ஒரு புள்ளி அதன் முகப்பில் உள்ள சிலை தொடர்பானது. எரிக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் நூலக முகப்பில் கைகளில் வீணை ஏந்திய சரஸ்வதி அமர்ந்திருக்கிறார். ஆனால் நூலகம் தீக்கிரையாவதற்கு பல காலம் முன்பு எடுக்கப்பட்ட படமொன்றின் முகப்பில் தமிழ்தாய் கையில் யாழுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் சிலை காணப்படுகிறது. சிலை எப்போது மாற்றம் பெற்றது, எதற்காக மாற்றம் பெற்றது. இதன் பின்னணியில் நடைபெற்ற நிகழ்வுகள் என்ன போன்ற கேள்விகளுக்கு இறுதியானதும் உறுதியானதுமான பதிலை இன்றுவரை பெறமுடியவில்லை. இது தொடர்பில் மூன்றுவிதமான செய்திகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது தொடக்கத்தில் இருந்தது ஒரு சரஸ்வதி சிலை அது விசமிகளால் நூலகத்தில் இருந்து பெயர்க்கப்பட்டு சுப்பிர மணியம் பூங்காவில் எறியப்பட்டது. பின்னர் அங்கு அது நிலைநிறுத்தப்பட்டது. நூலகத்தில் இன்னொரு சரஸ்வதி சிலை வைக்கப்பட்டது. இது யாழ்ப்பாண நூலகத்தின் பிரதான நூலகராக எரிப்புக்கு முன்பும் பின்பும் இருந்த கலாநிதி வே. இ. பாக்கியநாதன் சொல் லும் தகவலாகும். இதை அவர் என். செல்வராஜா அவர்கள் தொகுத்து 2001ம் ஆண்டு வெளிவந்த *'யாழ்ப் பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு'* என்ற நூலுக்கு வழங்கிய கட்டுரையில் எழுதியிருக் கிறார். அதே நூலில் இடம்பெற்றுள்ள மகாலிங்கம் அருள்குமரனின் கட்டுரை நூலகம் 1959ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்ட போது யாழ் மீட்டும் தமிழ்த்தாயின் சிலை முகப்பை அலங்கரித்தது என்று இருக்கிறது. எனவே இதன்படி பின்னர் தமிழ்த்தாயின் சிலை அகற்றப்பட்டு அங்கு சரஸ்வதி குடிகொண்டாள் என்று கொள்ளவியலும்.

இவ்விரண்டிலும் மாறுபட்டு முதலில் சரஸ்வதி சிலை இருந்தது. அதை தமிழ்த்தாய் சிலை கொண்டு இடம் பெயர்த்தார்கள். பின்னர் சரஸ்வதி சிலை மீண்டும் வைக் கப்பட்டது என்று 2015ம் ஆண்டு வெளியான *யாழ்ப்பாண பொதுசன நூலகம்: எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள்* என்று சிறுநூலில் தங்க முகுந்தன் எழுதியுள்ளார். அவர் பெயர்க்கப்பட்ட தமிழ்த்தாயின் சிலை இன்னமும் சுப்பிர மணியம் பூங்காவின் தண்ணீர்த் தொட்டிக்குள் இருக் கிறது என்று சொல்கிறார். மொத்தத்தில் இந்தச் சிலை தொடர்பாக மூன்று வெவ்வேறுபட்ட கருத்துக்கள் நிலவு கின்றன. கைகளுக்கு எட்டியுள்ள இரண்டு சிலைகளின் படங்களில் ஒன்று தமிழ்த்தாயின் சிலை என்பதை உறுதி யாகச் சொல்ல முடியும். யாழ்ப்பாண சமூகம் சைவ உயர்குலத்தினரின் ஆதிக்கத்தில் நிலைப்பது என்பதை நாமறிவோம். உண்மைகளை உரத்துப் பேசும் குரல்களுக் கான வாய்ப்புக்கள் குறைவு.

கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் சில முன்முடிவுகளுக்கு வரவியலும். நூலகக் கட்டிட உருவாக்கத்தில் திராவிடச் சிந்தனையின் வகிபாகம் மிகுதியாக இருந்தது என்பதை பலரும் சுட்டியுள்ளார்கள். எனவே கட்டிடம் உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் தமிழ்த்தாயின் சிலை இருந்திருப்பதற்கான வாய்ப்புக்கள்

> *ஒரு தனிமனிதனின் புத்தகங்கள் அழிக்கப்பட்டதன் வலியே இவ் வளவு பெரிதாக இருக்கும்போது ஒரு சமூகத்தின் அடையாளமாய், அறிவின் ஊற்றாய், உரையாடல் களமாய், கூடலாய் இருந்த ஒன் றின் அழிப்பும் அது தன்னோடு சாம்பலாக்கிய புத்தகங்களும் ஏற் படுத்தும் வலி எவ்வளவு பெரிய தாய் இருக்க முடியும். இந்தப் பின்புலத்திலேயே யாழ் நூலக எரிப்பின் நாற்பதாண்டு நிறைவில் எனது பார்வையைச் செலுத்த விரும்புகிறேன்.*

அதிகம். நூலகர் கலாநிதி வே. இ. பாக்கியநாதன் சொல் வது போல நடந்திருக்கவியலும். ஏனெனில் தேடிப் பார்த்ததில் முன்னைய தமிழ்த்தாய் சிலையைப் போன்ற தொரு சிலை சுப்பிரமணியம் பூங்காவில் நிலை பெற் றுள்ளது. ஆனால் நூலகத்தில் இருந்த சிலையில் யாழ் மீட்டும் தமிழ்த்தாயோடு ஒட்டியபடி ஒரு மயில் இருக்கும். ஆனால் பூங்காவில் உள்ள சிலையில் அதைக் காணக் கிடைக்காது. நூலகர் 'தமிழ்த்தாய் சிலை யைத் தான் சரஸ்வதி சிலை என்று குறிக்கின்றாரா' என்ற கேள்வியும் எழாமல் இல்லை. அவரது கருத்துப் படி பார்த்தாலும் விசமிகள் யார். இப்படியொரு செயலை அவ்வளவு இலகுவாகச் செய்ய முடியுமா, பின்னர் ஏன் அச்சிலை சுப்பிரமணியம் பூங்காவில் நிறுத்தப்பட்டது. இவற்றுக்கான விடை இன்னமும் கிடைத்தபாடில்லை.

இந்தச் சிலையின் கதையைத் தேடிப் புறப்பட்ட வேளை எனக்குப் பல கதைகள் சொல்லப்பட்டன. அவ் வாறு சொல்லப்பட்ட கதைகளில் ஒன்று அல்பிரெட் துரையப்பா தொடர்பானது. 1959ம் ஆண்டு நூலகத்தைத் திறந்து வைத்தவர் யாழப்பாண மேயராக இருந்த துரையப்பா. நூலகத்திற்கான தமிழ்த்தாய் சிலை உருவாக் கத்திலும் அதற்கான இடம் தொடர்பிலும் அவர் முக்கிய பங்காற்றினார். கல்விக்கடவுளான சரஸ்வதி சிலையை வைக்க முடியவில்லை எனப் பலர் மனதுக்குள் வெம்பினர். துரையப்பா கிறிஸ்தவராக இருப்பதாலேயே அவர் தமிழ்த்தாய் சிலையை வைக்கிறார் எனப் பலர் நினைத்தனர். 1975ம் ஆண்டு அவரது கொலைக்குப் பிறகு தமிழ்த்தாய் சிலை அகற்றப்பட்டு சரஸ்வதி சிலை வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தர்க்கரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கதையாக இருந்தபோதும் இதன் உண்மைத் தன்மையை உறுதி செய்ய முடியவில்லை. நூலக உருவாக்கத்திற்கு துரையப் பாவும் முக்கிய பங்காற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. இதேவேளை 2012ம் ஆண்டு துரையப்பாவின் குடும்பத்தினர் யாழ்ப்பாணம் பண்ணையில் துரையப்பா ஞாபகார்த்த சுற்றுவட்டத்தை அமைத்தார்கள். அங்கு யாழ் மீட்டுகின்ற தமிழ்த்தாயின் சிலையை வைத்தார்கள். இது ஒரு புதிய புதிரைத் தொடக்கி வைத்துள்ளது. அவர்கள் ஏதோ ஒன்றை நினைவூட்ட விரும்புகிறார்களா அல்லது இது தற்செயலானதா. கதைகளுக்கும் கால் முளைக்கும், காவு கொள்ளும், காரணம் சொல்லும் என்பதை அறியாதவர்களா நாங்கள்.

சிலையை மையப்படுத்திய நிகழ்வுகளும் வரலாற்றைப் பதிதலும் ஈழத்தமிழர் வரலாறு சார்ந்தும் ஆவணமாக்கல் சார்ந்தும் ஏராளமான கேள்விகளை எழுப்புகின்றன. உண்மையான வரலாற்றை இதய சுத்தியோடு பதிவதற்கு நாம் தயாராக இருக்கிறோமா என்ற வினாவை நாம் கேட்டாக வேண்டும்.

இதேபோலவே நூலகம் எரிக்கப்பட்ட மறுநாள் அதி காலையில் யாழ் பல்கலைக்கழகத்தின் அறிவிப்புப் பலகையில் ஒரு கவிதை ஒட்டப்பட்டிருந்தது. அப்போது மக்களிடையே ஓடிய எண்ணவோட்டத்தை அக்கவிதை பிரதிபலித்தது. ஆனால் அதில் எழுதியவர் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் அக்கவிதையை வாசிக்க வரிசையில் நின்றார்கள். அக் கவிதையைச் சுற்றி நிறைய நிகழ்வுகள் நடந்தன. பல சுவையான கதைகள் உண்டு. ஆனால் நாற்பதாண்டுகள் கழிந்த பின்பும் அக்கவிதையைச் சுற்றி நிகழ்ந்தவை பதியப்படவில்லை என்பது வருத்தமே.

நூலகம் எரிக்கப்பட்டு சிலகாலத்தில் 1981 இன் ஆண் டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வந்த அமெரிக் கரான கிறிஸ் நியூபி (Chris Newby) எரியுண்ட நூலகத்தைப் பார்த்து எழுதிய கவிதையைப் பேராசிரியர் க. கைலாசபதியிடம் கொடுத்தார். அக் கவிதையை கைலாசபதி சோ. பத்மநாதனிடம் மொழிபெயர்க்கக் கொடுத்தார். கைலாசபதி 1982ல் இயற்கையெய்த 1983ல் அவருக்கு அஞ்சலியாக மொழிபெயர்ப்பை கிருதயுகம் இதழில் வெளியிட்டார் சோ. ப. மூலக்கவிதை எனக்குத் தெரிந்தவரை ஆங்கிலத்தில் பிரசுரமாகவில்லை. அந்தக் கவிதை இப்படித் தொடங்கும்:

**கற்குவியல் மீது கால் சறுக்கும் ஓசையின்றி**
**இப்போது காதில் ஏதும் விழவில்லை**
**சந்தையிரைச்சல், கோடி வாகனங்கள், சந்தடிகள்**
**வந்து முட்டி, மோதி, கலந்து, ஓய்கின்ற**
**பகுதியிது: பாழாய், சுடுகாடாய், அமைதியொன்றே**
**மிகுதியெனச் சுமந்து வீணே கிடக்கிறது!**
**புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுகின்ற ஓசையொன்றே**
**நித்தியமாய் இருந்த இடம் நீறாய்க் கிடக்கிறது!**
**நூற்றாண்டு கால முயற்சி நொடிப்பொழுதில்**
**காற்றோடு போன காரணந்தான் யாரறிவார்?**

இவை அனைத்தையும் விட மிகவும் சிக்கலான அதேவேளை முக்கியமான குழப்பம் ஒன்று இன்றுவரை நிலவுகிறது. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது 1981ம் ஆண்டு மே 31ம் திகதி இரவா அல்லது யூன் 1ம் திகதி இரவா என்பதே அந்தக் குழப்பம். பலர் மே மாதம் 31ம் இரவு என்றே குறிப்பிட்டு வருகிறார்கள். இருப்பினும் சிலரது நினைவுக்குறிப்புகள், உரைகள் 1ம் திகதி இரவு 10.00 மணியளவிலேயே நூலகத்திற்கு தீவைப்பது தொடங் கியது என்று சொல்கின்றன. அனைவரும் யாழ்ப்பாணத் தில் வன்முறைகள் 31ம் திகதி ஆரம்பித்ததை உறுதி செய்கின்றன. ஆனால் நூலக எரிப்பு மறுநாள் இரவு நடந்தது என்பதை உறுதி செய்யும் செய்திகள் ஏராளம் உண்டு. ஆனால் ஏன் மே 31ம் திகதி இரவே நூலகம் எரியூட்டப்பட்டது என்று எம் பொதுப்புத்தியில் ஏற்றப் பட்டுள்ளது.

யாழ் நூலகத்தின் வரலாறு இரண்டு பகுதிகளாகவே எம்மால் அறியப்படுகிறது. ஒன்று, 1981ல் நூலகம் எரிக்கப் பட்ட கதை, மற்றையது நூலகம் திருத்தப்பட்டு 2003ம் ஆண்டு மீளத்திறக்கப்பட்டதன் பின்னரான கதை. ஆனால் அறிய வேண்டிய கதைகள் நூலக எரிப்புக்கு முன்னும் பின்னும் உள்ளன. அவை பேசப்படுவதில்லை. யாழ்ப்பாண சமூகத்தின் உள்ளார்ந்த நெருக்கடிகளின் வெளிப்பாடுகள் அவை. அவற்றையும் மேலோட்டமாகப் பார்த்து விடலாம்.

இக் காலப்பகுதியில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் சூடுபிடித்திருந்தன. 1981ம் ஆண்டு மே 31ம் திகதி இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நாச்சிமார் கோயிலடியில் நடந்து கொண்டிருந்தது. பாதுகாப்புக் கடமைகளில் நான்கு பொலிசார் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் இருவர் சார்ஜென்டுகள் (புஞ்சிபண்டா, கனகசுந்தரம்) இருவர் கான்ஸ்டபிள்கள் (குணசிங்க, ஜனாப் உஸ்மான்) யாழ் மேயராக இருந்த இராசா விஸ்வநாதன் உரையாற்றிக் கொண்டிருந்தபோது குண்டுச் சத்தங்கள் கேட்டன. பொலிசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் புஞ்சிபண்டா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கனகசுந்தரம் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த நிகழ்வே யாழ்ப்பாணத்தை மீண்டு மொரு சுடுகாடாக்கிய (1977 கலவரத்திற்கு பிறகு) செயற்பாட்டுக்கு வித்திட்டது. இந்தத் துப்பாக்கிச் சூட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தியது யார்? இந்த வினாவுக்கான தெளிவான தீர்க்கமான பதில் இன்றுவரை கிடைக்கவில்லை. இதை சில ஆயதமேந்திய இளைஞர்கள் மேற்கொண்டார்கள் என்று பொலிசார் தெரிவித்தனர். ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இது 'பயங்கரவாதிகளின்' வேலை என்று அறிவித்தார். உயிரிழப்பதற்கு முன்னர் தன்னைச் சுட்டது ஒரு பொலிஸ்காரன் என்று தன்னிடம் தெரிவித்ததாக உயிரிழந்த கனகசுந்தரத்தின் மனைவி சாட்சியமளித்துள்ளார். இந்தப் புதிர் இன்றும் விலகாமல் இருக்கிறது.

யாழ் நூலகம் எரிக்கப்பட்ட தினம் ஏன் முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்ள மே 31ம் திகதி இரவு நடந்த நிகழ்வுகளை மீட்டுப் பார்க்க வேண்டும். அன்றிரவு பூபாலசிங்கம் புத்தகசாலை உள்ளிட்ட கடைகள் யாழ் நகரில் தீக்கிரையாக்கப்பட்டன. இவை திட்டமிட்டு நடைபெறுவது போல ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்டன. அப்போது மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான பாதுகாப்புப் பணிகளுக்காக வேறிடங்களில் இருந்து 400 பொலிசார் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார்கள் என்பது கவனிப்புக்குரியது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைச்சாமி ஜனாதிபதியைத் தொடர்புகொண்டு நிலைமையைக் கட்டுப்படுத்த உதவி கோரினார். அதன்படி இராணுவமும் கடற்படையும் யாழ்நகரில் பாதுகாப்பிலும் தீயணைப்பிலும் ஈடுபட்டன. இராணுவத்தின் வருகையால் வன்செயல்கள் நிறுத்தப்பட்டன. அமைதி நிலவியது.

ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதியாக பிரிகேடியர் வீரதுங்க சிறப்பு விமானம் மூலம் அன்றிரவே யாழ்ப்பாணம் வந்தார். மறுநாள் (யூன் 1ம் திகதி) காலை பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். ஜனாதிபதியின் பணிப்புரையின் பெயரில் அமைச்சர் காமினி திசாநாயக்க யாழ்ப்பாணம் வந்திருந்தார். இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் தரித்திருந்த போதே நூலகம் எரியூட்டப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. இது திட்டமிட்ட வகையில் முழுமையான அரசாங்க ஆதரவோடு நடாத்தப்பட்டது என்பதும் தற்செயலான வன்முறையின் விளைவல்ல என்பதையும் விளங்கிக் கொள்ள நிகழ்வுகளை சரியான திகதிவாரியாக ஒழுங்கு படுத்துவதும் பதிவதும் அவசியம்.

அதேபோலவே 1981க்கும் நூலகம் மீண்டும் முழுமையாகத் திறக்கப்பட்ட 2004ம் ஆண்டுக்கும் இடையில் நூலகம் சார்ந்து நடைபெற்றவை பதியப்பட வேண்டும். எரிக்கப்பட்ட நூலகக் கட்டிடத்தை ஒரு நினைவுச் சின்ன மாகப் பராமரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பலரால் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதைச் சுற்றி நிகழ்ந்த அரசியல்கள், தமிழ்த்தலைவர்களின் சுயநலம், சமரசம் என்பன இன்னமும் முழுமையாகப் பதியப் படவில்லை.

புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் திறப்பு விழா தொடர்பில் 2003 பெப்ரவரியில் அரங்கேறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***புத்தகங்களோடும் வாசிப்போடும் நீண்ட நெடிய உறவைக் கொண்ட தொரு சமூகம் இன்று வந்து சேர்ந்தி ருக்கும் இடம் கவலைக்குரிய ஒன்று.***

நிகழ்வுகள் சமூகத்தின் அழுக்குப் படிந்த யாழ் சாதிய சமூகத்தினை வெளியுலகுக் காட்டி நின்றது. நூலகத்தின் மீள்கட்டுமானம் முடிவடைந்த நிலையில் 2003ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 14ம் திகதி அதன் திறப்பு திட்ட மிடப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாண மாநகர மேய ராக இருந்த செல்லன் கந்தையாவின் சாதிய அடை யாளத்தை முன்னிறுத்தி விடுதலைப்புலிகளின் துணை யோடு நூலகத் திறப்பு தடுக்கப்பட்டது. இது இன்று வரைப் பேசாத மறைபொருளாக இருந்துவருகிறது. இதைப் பேசுவதை சாதியச் சகதியில் சிக்கித் தவிக்கும் யாழ்ப்பாணச் சமூகமும் விடுதலைப்புலி ஆதரவாளர் களும் விரும்புவதில்லை. இது குறித்த எந்தவொரு உரையாடலும் முழுமையான மறுப்பிலும் "துரோகி" எனப் பட்டஞ் சூட்டுவதிலும் வந்து நிற்கிறது.

2015ம் ஆண்டு இலங்கையின் வடபகுதியில் போருக்குப் பின்னரான உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான ஆய்வொன்றை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் மூலம் மேற்கொண்டிருந்தோம். அவ்வாய்வில் வடமாகாணத்தில் உள்ள ஐந்து நிர்வாக மாவட்டங் களிலும் கள ஆய்வில் ஈடுபட்டோம். இதனொரு பகு தியான முன்னாள் யாழ் மேயர் செல்லன் கந்தையனுடன் உரையாடக் கிடைத்தது. உரையாடலின் போது தனது அனுபவங்களைப் பகிர்ந்த அவர் யாழ்ப்பாண நூலகத் திறப்பு தொடர்பாகவும் பேசினார். தனது பெயர் பதிக்கப்பட்ட கல் நூலகத்தில் இருக்கக்கூடாது என் பதில் எல்லோரும் திட்டவட்டமாக இருந்தார்கள் என் றார். விடுதலைப் புலிகள் சாதிய மனப்பாங்குடனேயே நடந்து கொண்டார்கள் என்றும் தன் சாதியின் காரணமாகவே நூலகத் திறப்பு அரசியலாக்கப்பட்டது என்றும் சொன்னார். இப்போதுள்ள நூலகத்தோடு செல்லன் கந்தையனுடைய பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும். நிலைத்திருக்க வேண்டும்.

### வரலாற்றின் சவாலும் பண்பாட்டு நெருக்கடியும்

நூலகங்கள் அழிக்கப்படுவது வரலாறெங்கும் நடை பெற்று வந்திருக்கிறது. தேசியவாதத்தின் வளர்ச்சியும் தீவிர அரசியல் சித்தாந்தங்களின் எழுச்சியும் இதை சாத்தியமாக்கியிருக்கிறது. நூலக எரிப்பும் நூல்கள் அழிப்பும் ரோம சாம்ராஜ்ய காலத்திலிருந்து நடை பெறுகிறது. அதன் இன்னொரு கட்டம் அலெக்சாண் டிரியா நூலகம் எரிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. அது நாசிகள் 1933ம் ஆண்டு நூலகத் திற்கு எரியூட்டிய நிகழ்வாய் தொடர்ந்தது. இந்தத் தொடர்ச்சியின் ஒரு பகுதியே யாழ்ப்பாண நூலக எரிப்பு.

இன்று நாற்பது ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. என் முன்னே மூன்று கேள்விகள் உற்றுப் பார்த்தபடி உறுத்துகின்றன.

1. நாங்கள் எங்கள் வரலாற்றை முறைப்படி பதிவு செய்திருக்கிறோமா?
2. எங்களை நாங்கள் ஆவணப்படுத்தியிருக்கிறோமா?
3. வாசிப்பும் தேடலும் குறித்த அக்கறை எம்மிடம் இருக்கிறதா?

எரிந்தழிந்த நூலகத்தோடும் நூல்களோடும் வாசிப் பும், வாசிப்புப் பண்பாடும், ஆவணமாக்கலும் அழிந்து தொலைந்துவிட்டது. தொன்மையுமற்றுத் தொடர்ச்சி யுமன்ற ஒரு சமூகமாக நாங்கள் மாறியிருக்கிறோம். அதன் சாட்சியமே யாழ் நூலகம். வரலாறு வென்றவர் களால் தான் எழுதப்படுகிறது. ஆனால் அது என்றென் றைக்குமானதல்ல. அதை நினைவு கொள்வோம். ஆவணப்படுத்துவோம், வரலாற்றைப் பதிவோம், வர லாற்றில் வாழ்வோம். எம்மிடம் இரண்டு தெரிவுகள் உண்டு. ஒன்றில் கவிஞர் சோ. பத்மநாதனின் வரிகளில்:

**எதுக்கிப்போ இப்பேச்சை எடுக்கிறாய்?**
**காதுக்கருகில் வந்து கத்தித் தொலைக்கிறாய்?**
(எங்கள் நகரேன் எரியுண்டு போகிறது?)

என்று கேட்டுவிட்டு அப்பால் நகரப் போகிறோமா அல்லது சு. வில்வரத்தினம் கேட்பது போல:

**ஏடு தொடக்கிவைத்து என்னம்மை**
**மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த**
**விரல்முனையைத் தீயிலே தோய்த்து**
**திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேண்டும்**
**எழுகின்ற யுகத்தினோர் பாடலை**
(நெற்றிமண்)

என்று புதிய தலைமுறைக்காய் புதுப்பாட்டொன்றை நாம் பாடத்தான் போகிறோமா... அன்றொருநாள் மட்டு மல்ல, இனிவரும் அடுத்த நாளைக்கும் நம் கதைகள் சொல்லிடவே பணிசெய்யப் போகிறோமா... சமூகமாயும் தனிநபர்களாகவும் நாம் ஒவ்வொருவரும் கேட்க வேண்டிய வினாக்கள் இவை.

### நிறைவாக

ஒரு கைப்பையோடு நாம் கொழும்புக்கு வந்தோம். படுக்க, இருக்க, படிக்க சமைக்க என அனைத்துக்குமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அறையில் 18 ஆண்டுகள் வசித்தோம். அப்பா மீண்டும் புத்தகங்களைச் சேர்க்கத் தொடங்கினார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை என்று தொடங்கினார். அவற்றைப் பாடமாக்குவதோடு என் ஊடாட்டம் தொடங்கியது. அப்படியே மெதுமெதுவாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், தொல்காப்பியம் எனச் சேகரிப்பு விரிந்தது. பழைய புத்தகக் கடைகளில் புத்தகங்களை வாங்கி பக்குவமாக அவற்றைக் கட்டி (binding) பத்திரப் படுத்தினார். அப்பா எனக்குச் சேர்த்து வைத்திருக்கும் மிகப்பெரிய சொத்து இது. எந்த நாட்டுக்குப் போனாலும் புத்தகக் கடைக்குப் போய் புத்தகங்களை வாங்காமல் நான் வந்ததே இல்லை. வாசிப்பையும் ஆவணப் படுத்தலையும் நான் விரும்புகிறேன். நவீன தொழில்நுட்ப உலகம் வந்துவிட்ட போதும் நூல்களை வாங்கி அடிக் கோடிட்டு வாசிக்கவே நான் விரும்புகிறேன். கடந்த பதினைந்து ஆண்டுகளில் எனக்கான ஒரு நூலகத்தை நான் உருவாக்கியுள்ளேன். கடந்த மூன்று தசாப்தகாலமாக நூலகங்களுடனான எனது அனுபவம் எனக்கு அச்சம் தருவதாகவே உள்ளது. எனக்கான நூலகத்தை உருவாக்க நான் முடிவுசெய்ததன் காரணமும் அதுவே.

*பரந்த மனப்பாங்கும் பொது நோக்குமே அனைவருக்குமான ஒரு நூலகம் உருவாவதற்கு காரணியானது.......*

*அவர் தமிழ் பேசும் மக்களுக்கானதாக அந்நூலகத்தைக் கனவு கண்டார். மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து மதத்தினரையும் அன்போடு அழைத்தார். உதவி கோரினார். தாம் தமிழ் என்று குறித்துரைப்பதால் பிறமொழிகளைக் குறைத்து மதிப்பிடவில்லை எனவும் நூலகத்தில் பிற மொழி நூல்களும் அமையும் என்றும் விளக்கினார். இது அவரது சமூக நோக்கையும் தெளிவான பார்வையையும் காட்டி நின்றது.*


புத்தங்களோடு தினமும் உறவாடும் நான் இன்றுவரை எனது எழுத்துக்களை நூலாக்கவில்லை. அதற்கான காரணங்களில் ஒன்று என் கைகளில் இருக்கின்ற ஒரு புத்தகம். அந்தப் புத்தகத்தின் பெயர் "ஊரடங்குப் பாடல்கள்". சில்லையூர் செல்வராஜனின் கவிதை நூலது. என்னிடமிருக்கும் அந்த நூலின் பிரதியை சில்லையூர் செல்வராஜன் ஒரு இலக்கியப் படைப்பாளிக்கு அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார். அதை அதன் முதல் பக்கத்திலேயே வாழ்த்திக் கைப்படக் குறிப்பெழுதி திகதியும் கையொப்பமுமிட்டு வழங்கியிருக்கிறார். அந்தப் படைப்பாளி அதை ஒரு நூலகத்திற்குக் கொடுத்திருக்கிறார். அந்த நூலகம் காலப்போக்கில் அதை இன்னொரு நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறது. அந்த நூலகம் இடப்பற்றாக்குறை காரணமான ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் உள்ள நூல்களை நூலகத்தில் இருந்து அகற்றினார்கள். அப்போது இந்தப் புத்தகமும் அகற்றப்பட்டது. இதை நான் ஐந்து ரூபாய்க்கு வாங்கினேன். அந்த நூலின் முதற்பக்கத்தில் அனைத்து நூலகங்களின் பெயர்களும் அங்கிருந்து அகற்றப்பட்டன என்று குறிப்பிடப்பட்ட இலட்சனையும் இடம்பெற்றுள்ளது. அங்கு அகற்றப்பட்டு விற்பனையாகாது போன நூல்கள் இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டு பின்னரும் எஞ்சிய நூல்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிப்பது கடினமல்ல.

ஒரு நூலகத்தை தீயில் தொலைத்த ஒரு சமூகமா நாங்கள் என்ற கேள்வி என்னுள் அடிக்கடி எழுவதுண்டு. அதை மீண்டும் மீண்டும் கேட்கும் வகையில் நிகழ்வுகள் நடக்கின்றன. என்னுடைய நூல்களைத் திருடியவர்களை நானறிவேன். அது பெருங்குற்றமல்ல. ஆனால் தனது தனிப்பட்ட தேவைக்காக – அனேகமாகக் கற்றல் செயற்பாட்டுக்காக - குறிப்பெடுக்க விருப்பமின்றி நூலகங்களில் புத்தகங்களின் பக்கங்களைக் கிழித்துச் செல்வோர் பலர் உண்டு. இது மன்னிக்க முடியாத குற்றம். இதுவும் எமது சமூகத்தில் தான் நடந்தேறுகிறது.

புத்தகங்களோடும் வாசிப்போடும் நீண்ட நெடிய உறவைக் கொண்டதொரு சமூகம் இன்று வந்து சேர்ந்திருக்கும் இடம் கவலைக்குரிய ஒன்று. எனது அப்பா செய்ததை நான் எனது மகனுக்குச் செய்ய விரும்புகிறேன். நாம் இன்றும் வாரந்தவறாது நூலகத்திற்கு எனது மகனை அழைத்துச் செல்கிறோம். நாள்தோறும் புத்தகத்தை வாசிக்கக் கேட்டபடியே அவன் உறக்கத்துக்குப் போகிறான். நாம் பிள்ளைகளுக்குப் புத்தகங்களை நேசிக்கக் கற்றுக் கொடுப்போம். பின்னர் வாசிக்கக் கற்றுக் கொடுப்போம். இவ்விரண்டையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோமோ என அஞ்சத் தோன்றுகிறது. வாசிக்கும் முறைகளும் தேடல் முறைகளும் மாறி விட்டன. ஆனால் இன்றும் புத்தகங்களைத் தொட்டுத் தடவி பக்கங்கங்களைப் புரட்டி அதன் மணத்தை நுகரும் அனுபவம் அலாதியானது. ஒவ்வொரு நூலகத்திற்கு அதற்கேயுரிய மணமுண்டு. இதை நூல்களோடு சீவித்தவர்களாலேயே உணரமுடியும். அப்பாவுக்கு இந்தியா... எனக்கு யாரோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோளகம்

க. சிவகரன்

*என் மனதையும் குடைந்து மெல்ல கோதி விட்டுப் போ. ஆறுதலாய் இருக்கும்: கள்ளச் சோளகமாய்ப் போக்குக் காட்டாதே. வா, வந்து விர்விர் என்று வீசு. ஓ என்று ஓலமிடு. பொத்துப் பொத்தென்று தென்னை மட்டைகளை உடைத்துப் போடு.*

உங்கள் நினைவுகள் அடிக்கடி மேலேறி வரும்பொழுது அதைக் கொன்றுவிடுவேன். எப்படியும் மறந்துபோய் விடவேண்டும் என்பதுதான் என் எண்ணம். மறைவான ஓரிடத்தில் என்னில் மறைந்திருக்கும் உங்கள் நினைவுகள் மெல்ல மெல்ல அமுக்கி இதயத்தைக் கனமாக்கும். மூச்சை உள்வாங்கி, உள்வாங்கி, நெஞ்சம் வீங்கும். மெல்ல மெல்ல சலசலத்து ஓயாது போய் கிடப்பது போல் கனக்கும். சலசல என அரவம் போடும் தூரத்தே காதுகளில் கேட்கும் சோளகத்தின் ஓசை போல மெல்ல மெல்ல மனதைக் கிளறும். தென்னை ஓலைகளை ஆட்டி விங் என்று வரும் சோளகம் போல் ஓடிவரும். மெல்ல நிற்கும். பின் அரவமிடும். பின் ஓடிவரும். கிட்ட வரும். எட்டி உதைக்கும். உடைப்பெடுக்கும். என் மூச்சுப் போல ஊதும். மே மாதம் என்றவுடன் சோளகம் போல் மனது ஓய்ந்து ஓய்ந்து எழும். உங்கள் நினைவுகள் என்னை ஆட்டும். ஆட்டிப் படைக்கும்.

இந்த ஆண்டில் சோளகம் மட்டுமல்ல. பயங்காட்டுகின்றது. எப்பொழுதும் ஏங்கும் மனதில் ஒரு சோகமாக, ஏக்கமாக கொரனோ. பயம் மனதை அமுக்குகின்றது. உலகில் எங்கோ மூலையில் குடிகொண்டு மனிதச் சங்கிலிகளில் தாவித் தாவி அணை போட, அணைபோடக் கடந்து பயங்காட்டும் கொரனோ பற்றி உங்களுக்கு சொல்ல வேண்டும். அப்போ வந்த சிக்கின்குனியாவை விடவும் இது கொடியது. சோளகம் போல் அரவமின்றி அருகில் வந்து ஊளையிடும். இந்த மே மாதம் அது வீட்டில் முடக்கிவிட்டது. உங்கள் நினைவுகளை ஏதோ மனப்பயத்தைக் கலந்து தள்ளிவிட்டுள்ளது.

கொடியேற்றம் நடந்து கோயிலிலே ஆரவாரம். ஆலயமணியோசை. ஆட்கள் எல்லாம் பயத்துடன் தான் போனார்கள். எட்ட நின்று கைகூப்பி மன்றாடினார்கள். ஏனோ கிட்ட வந்த சோளகம் கொடியை ஆட்டவில்லை. கொடியேற்றிய குருக்கள் கொண்டு செல்லப்பட்டார். அவர் கொரனாவால் உயிர் போய் கொடியேற்றம் நின்று ஊரே அடங்கியது போல உங்கள் நினைவும் ஒரு பெருமூச்சில் அடங்கியது. இல்லை. அரவமிடும் சோளகம் நினைவுக் கொடியை மட்டும் மனதில் ஆட்டுகின்றது. மனதில் ஏற்றிய வெறும் கொடி மட்டும் சடசடத்து அடிக்கின்றது. பின் சோளகம் பொத்தென்று போட்டது போல் ஓய்ந்து விழுகின்றது. மீண்டும் ஒரு ஊதல். மெல்ல மனம் தாவுகின்றது. பின் ஓய்கின்றது. உங்கள் நினைவுகளைப் போல.

மஞ்சள் இப்போ இல்லை. மஞ்சளிற்குத் தட்டுப்பாடு. "மஞ்சள் பூசிக் குளிக்கையிலே மறைந்திருந்து பார்த்ததுண்டு. மற்றபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமங்கிட்ட குற்றம் ஏதும் கண்டதுண்டோ" அப்போ அடிக்கடி மனதைக் குடைந்த பாடல். அந்தக் கவிஞன் உங்களைக் காண வில்லை. கண்டிருந்தால் அப்படிப் பாடி யிருக்கமாட்டான். நீங்கள் நேரில் நின்ற பொழுதே முகம் பார்க்க மாட்டீர்கள். மறைந்திருந்து பார்க்கும் மனசு எப்படி உங்களிடம் இருக்கும். "அந்த வானத்தைப் போல மனம் படைத்த மன்னவரு" நீங்கள். ஆம் வானத்தைப் போல மனம் படைத்த உங்கள் நினைவுகள் வானத்தையும் முட்டி மேலேறி எழுவதுண்டு. வானத்தை மனதில் அடக்கலாமா. அடக்கிவிட்டேன். ஆனால் மே மாதம் வானத்தில் எங்கோ மூலையில் உரசி உரசி, கிளறிக் கிளறி, அள்ளி அள்ளி ஓடிவரும் சோளகம் போல கிட்டவந்து என் மூச்சையும் ஆட்டி வாங்கிப் போகும் என் நினைவுகளை அலசி, அலசிக் கொன்று தின்ன ஓடிவரும் சோளகம் நின்றுவிடும். பின்னர் ஓடிவரும்.

இருபது இளைஞர்கள் 'மோட்டார்' சைக்கிளில் போய் கூட்டமாக ஒரு வீட்டை அடித்து உடைத்தார்கள் என்ற செய்தி உங்களை நினைவு படுத்தும். அப்போ நீங்கள் ஒரு "சைக்கிளில்" தானே ஓடிவருவீர்கள். உங்கள் எளிமை என்னை இப்பொழுதும் வியக்க வைக்கின்றது. ஆசைகளைக் கொன்று போட்ட விழிகள் அவை. நேரே என்னைப் பார்க்க மாட்டா. நான் ஓரமாய்ப் பார்த்து வியப்பதுண்டு. நீங்கள் அணிந்திடும் செக் போட்ட சேட்டில் அயன்பெட்டி பட்டி ருக்காது. ஆனால் அழுக்கில்லை. காற்சட்டை வெளிறி இருக்கும். ஆனால் தூய்மையாக இருக்கும் உங்களை நான் அதிசயமாய்ப் பார்ப்பதுண்டு. உங்களைப் போல் ஒரு இளைஞனை நான் இனிக் காண்பது அரிதுதான்.

மாசற்ற மனம் மட்டுமல்ல. உங்கள் சட்டைப் பையும் எப்பொழுதும் காசற்று இருக்கும். என் அப்பா உங்கள் மாமா. உங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசினார். நாங்கள் வவுனியாவில் இருந்த பொழுது நீங்கள் துணுக்காயில் இருந்தீர்கள். ஒருமுறை. அப்பாவையும் அம்மாவையும் உங்கள் மாமாவையும் மாமியையுந்தான் பார்ப் பதற்கு வந்தீர்கள். பகற் பொழுது மட்டும் வீட்டில் நின்றீர்கள். நீங்கள் கழற்றிப் போட்ட சட்டைப் பையில் அப்பா பத்து ரூபாய் வைத்துள்ளார். அதை எடுத்து பக்குவமாய் மேசை மேல் வைத்துப் பாரம் வைத்துவிட்டுப் போன பின்பு அதை எடுத்து அப்பா ஏங் கினார். என்ன பழக்கம் அவரிடம் உண்டு. அவருக்கு ஏன் காசு எனப் பெருமையாகப் பேசினார்.

உங்கள் பயணப் பையில் இருந்த சீப்பை மட்டும் நான் திருடி இருந்தேன். நீங்கள் தேடவில்லை. வெளிக்கிடும் பொழுது அடர்ந்த முடியைக் கைகளால் கோதிவிட் டீர்கள். உங்கள் கூர்மூக்கு, சிறிய கண்கள். சிறுமீசை. அழகிருக்கும் பொழுது அலங் காரம் எதற்கு என எண்ணினேன். அன் றல்லப் பல பொழுதுகள். அதை வைத்து அடிக்கடி எடுத்துப் பார்ப்பேன். பின்னாளில் உங்களைப் போல அதைத்தேடி பிடிக்க முடியவில்லை. உங்களைப் போல. நினை வினை மட்டும் வாருகின்றது எப்போதாவது. ஓடி வந்து மனதுக்கு ஆறுதலாய் வருடி விட்டுப் போகின்றது.

எனது மகள் பல்கலைக்கழகத்தால் வரும் பொழுது அவள் நடையும் மிடுக்கும் உங் களை இழுக்கின்றது. உங்களைப் போல் கூர் மூக்கு. சிறிய விழிகள். அதே தலைக்கேசம். அவள் திரும்பிப்பார்க்கும பொழுது உங் களைப் போலத்தான் பார்ப்பாள். உங்களின் சாயல் அவளிடம் தொற்றி விளையாடுகின்றது.

எனது கணவரிடம் உங்களைப் பற்றி நான் சிலதடவை கூறியதுண்டு. அவர் தன் னுடைய உழைப்புச் சோலியில் அவற்றைக் கேட்பது போல் நடிப்பார். பின்விட்டு விடுவார். தொலைக்காட்சிப் பெட்டியில் ஒருமுறை ஒரு நினைவிடத்தைக் காட் டினார்கள். ஒரு ஏழைத்தாய் சிவப்பு நிற அரிசிப் பொரி உருண்டை இரண்டு, சில பூக்கள், கற்பூரம், ஊதுபத்தி இவற்றுடன் அழும் காட்சி எனது மனதை உருக்கியது. எழுந்து சென்று அழுதேன். என் மகள் என் தலையைக் கோதி அணைத்துவிட்டுப் போனாள். மனம் ஆறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே மாதம் வரும் பொழுது ஓடிவரும் சோளகம். ஆட்டிப்படைத்தாலும் ஓடிவிட முடியுமா. பரதேசம் போய் ஒளிக்க முடியுமா. நினைவுகளைக் கொன்று போட்டு வாழ முடியுமா. மெல்ல. மெல்ல. உரம் பெற்று எழ வேண்டும். உங்கள் நினைவுகளில். உரம் காணவேண்டும். உங்கள் எளிமை. உங்கள் பாசம். உங்கள் அடக்கம். எனது மனதில், எப்பொழுதும் மலைபோல எழுந்து நிற்கும் ஈரமற்ற, இரக்கமற்ற சோளகம் போகட்டும். வீசிவிட்டுப் போகட்டும் மே மாதம் போகட்டும். என்ன செய்யும் மலைபோன்ற நினைவுகளில். காலில் மண்டியிட்டு போ என்று சோளகத்தைச் சபிக்கின்றேன். வீசி வா! வந்து எம் நினைவினைச் சூடேற்று. சிலகாலம் ஆடுவாய். பின் செத்துப் போய் விடுவாய். ஏய் காற்றே என் மச்சானின் கேசத்தை நீ கோதுவது தெரிகின்றது. என் மனதையும் குடைந்து மெல்ல கோதிவிட்டுப் போ. ஆறுதலாய் இருக்கும். கள்ளச் சோளக மாய்ப் போக்குக் காட்டாதே. வா, வந்து விர்விர் என்று வீசு. ஓ என்று ஓலமிடு. பொத்துப் பொத்தென்று தென்னை மட்டைகளை உடைத்துப் போடு. தகர வேலியைத் தூக்கியடி. உள்ளிருக்கிற உன் ஈரமற்ற வீரம் எல்லாவற்றையும் காட்டும். ஆனால் நினை வினைமட்டும் உன்னால் களவாட முடியாது. தோற்றுத்தான் போய்விடுவாய்.

உங்கள் நினைவுகள் போல் சோளகமும் விலகாது. வருகிறது. போகிறது காலங்கள் கடந்தாலும் உங்களைப் போல ஓடிவரும். சுகமாக, துன்பமாக, ஆறுதலாகப் பெரு மூச்சாய், எல்லாமாய் நின்றாடும். ⊡

அஞ்சலி :

## அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளார்



கலைத்தூது அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள் தனது 81-வது வயதில் மக்களைவிட்டுப் பிரிந்துவிட்டாரெனினும் அவர் மறைய வில்லை. மக்கள் ஆளுமைகள் மக்களைவிட்டுப் பிரிந்தாலும் அவர்களுக்கு மரணமில்லை. அவர்களின் சாதனைகளின் பொறுப்புகள் அடுத்த சந்ததிக்குப் பாரப் படுத்தப்படுகின்றன.

தனிமனிதத் தோப்பாக விளங்கியவர் அடிகள். புத்தக/ அரங்கப் பண்பாட்டினை மக்கள் மத்தியில் தரமுயர்த்திப் பிரபல்யப் படுத்திய அடிகள் பல்துறை ஆற்றல் பெற்ற பன்மொழிப் பயிற்சி பெற்ற பன்மைத்துவப் பண்பாட்டாளராவார்.

இளவாலை, யாழ்ப்பாணம், கண்டி, ரோம், லண்டன், ஜேர்மனி எனக் கல்விப் புலத்தில் புடம்போடப்பட்டு 3 கலாநிதிப் பட்டங்கள் பெற்றார். 23 வயதிலேயே குருவாகி யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் பல கிராமங்களில் பங்குத் தந்தையானார்.

1965ல் திருமறைக் கலாமன்றத்தை உருவாக்கி 1988ல் Centre for Performing Arts ஆற்றுகைக் கலைகளின் மையமாக வளர்த்தெடுத்து ஆறு தசாப்தமாக எல்லை கடந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் துலங்கினார். 1965ல் 'அமைதியின் அண்ணல்' 1969ல் 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' 1973ல் 'களங்கம்' என அரங்க செயற்பாட்டில் 300க்கு மேற்பட்ட நாடகங்கள் வரை அரங்கேற்றினார். 1990ல் 'கலைமுகம்' சஞ்சிகை, Jounal of Siddhanta Studies' பருவ இதழையும், 'ஆற்றுகை' அரங்கியல் இதழையும், கலைமுகம் அரங்க வலைகள் ஆகிய அரங்கியல் ஆய்வு நூல்களையும் மொழிபெயர்ப்பு பிற 12 நாடக நூல்களையும் பிற நூல்கள் பலதையும் வெளியிட்டார். மேலும் 12 நாட்டுக் கூத்து நூல்களும் 17 வேதாகம நாடகங்களும் ஒலிநாடாக்கள் இறுவட்டுக்களும் வெளியிடப்பட்டன.

இலங்கையில் 20 பிராந்தியங்களில் மன்றங்கள் அமைக்கப்பட்டன. 1954 முதல் அருட்திரு லோங்க அடிகள் வழியில் மனிதர் நடிக்கும் தமிழில் பாஸ் நாடகங்கள் எழுதி 25க்கு மேற்பட்ட பாடுகளின் நாடகங்ள் எழுதினார். 19 தடவை புலம்பெயர் வெளிநாட்டுக்குக் கலைப் பயணங்களில் ஈடுபட்டார்.

ஒடுக்கப்பட்ட பல்லின மக்களின் தலைமகன் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளின் பிரிவுத் துக்கத்தை நாம் அனைவரும் எமது இயக்கத்தளத்தில் பலமாக மாற்றுவோம்.

**தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் தமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றன.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையில் சிந்தனையின் வகிபாகம் – ஒரு நோக்கு

பி. முத்துலிங்கம்

"சிந்தனையாளனே சான்றோன்" எனவும் வரலாறு கண்ட வீரர்கள் எல்லாம் சிந்தனையாளர்களே, சிந்தனையாளர்கள் எல்லாம் செயல்வீரர்களே என்றார்.

பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை கார்ல் மார்க்ஸ் 1883 மார்ச் 14இல் உயிர் நீத்து அவரது உடலை லாண்டன் High Gate இடுகாட்டில் அடக்கம் செய்த போது அவரது உயிர் நண்பர் பிரடெரிக் ஏங்கெல்ஸ்

"மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். சாள்ஸ் டார்வின் உயிர் நூலுக்கு சாதித்ததை மார்க்ஸ் மானிட சாஸ்திரத்திற்குச் சாதித்தார்" எனப் பேசினார்.

இவற்றிலிருந்து சிந்தித்தல், சிந்தனையின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். எதைச் சிந்திப்பது. எப்படிச் சிந்திப்பது என்பதே அடுத்த பிரச்சினையாகும். ஆதிகால மனிதர்கள், தம் புலன்களால் உணர்ந்த இயற்கை, விலங்குகள், சக மனிதர்களோடு இடைவினை செய்தார்கள். தம் புலன் நுகர்வு, புலக் காட்சியைத் தொடர்ந்து, சிந்திக்கத் தொடங்கிய மனிதர்களில் ஒரு சாரார் தமக்குப் புறமாகவுள்ள பிரபஞ்சம், இயற்கை, சடப் பொருள்களையே உண்மையென நம்பிச் சிந்திக்கத் தலைப்பட்டார்கள். இந்நிலையில் கிரேக்க சிந்தனை எழுச்சிக் காலத்தில் எபிகாட்ரஸ் (Epicutes), டெமோகிரட்டிஸ் (Democrites) என்பவர்களால் இயற்கைத் தத்துவம் தொடர்பான நூல்கள் வெளியிடப்பட்டன. மற்றும் ஒரு சாரார் பௌதிகம் கடந்த அதீத சக்திகளைத் தேடினார்கள். அவையே பின்னாளில் கடவுள், சமயம் என மனிதச் சிந்தனை, செயற்பாட்டிற்குரிய விடயங்களாயின. கௌதம புத்தர், இயேசு நாதர், முகம்மது நபி போன்ற பலரின் போதனைகள் அக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் ஆத்மீக மற்றும் சமூக விடுதலைக்கு உதவிய போதும், பிற்காலத்தில் அவை சமயங்களாக நிறுவனமயப்பட்டு ஆட்சி அதிகாரக் கட்டமைப்புக்களுடன் சேர்ந்து இயங்கின. பின்னர் சமூக அமைப்பு மாற, மாறச் சமய நிறுவனக் கட்டமைப்புகளும் உடைந்து வர்க்க ரீதியாகப்

தத்துவ ஞானம் என்றால் ஞானத்தை நாடல் அல்லது உண்மையை அறிதல் என்று பொருள்படும். ஒரு மனிதன் உண்மையை அறிந்து பயன் நிறைந்த, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படையானவை அவனது சிந்தனையும், செயற்பாடுகளுமே ஆகும். இங்கு நாம் முதலில் சிந்தித்தல் தொடர்பாகப் பார்ப்போம். மனித மூளையே சிந்தித்தல் என்னும் வேலையைச் செய்கின்றது. மனித மூளை அற்புதமானது. வயதுவந்த ஆண்களின் மூளை எடை சுமார் 1360 கிராம்கள், பெண்களின் மூளை எடை சுமார் 1250 கிராம்கள். 1400 கோடி நரம்பு செல்களால் ஆனது மூளை. கற்பனை, நுண்ணறிவு, கலையார்வம், இசையிலே நாட்டம், முப்பரிமாண உருவ உணர்வு இடது கையில் ஆதிக்கம் முதலியவற்றிற்குக் காரணமாக இருப்பது வலது அரைக்கோளம். ஊகம், அறிவியல், தேர்ச்சி, எழுத்து, கணக்கில் தேர்ச்சி, பேச்சுத்திறன், வலது கையில் ஆதிக்கம் ஆகியவற்றிற்குக் காரணமாக இருப்பது இடது அரைக் கோளம். இவ்விரு அரைக் கோளங்களுக்கும் இடையே இணைப்பு இருப்பதினால் தான் கற்பனையை எழுத்தில் வடிக்க முடிகிறது; ஓவியமாகத் தீட்டவும் முடிகிறது. நுண்ணறிவு, அறிவியல் தேர்ச்சியையும் கணக்கியல் தேர்ச்சியையும் வளர்க்கிறது. சிந்தனைத் தெளிவு பேச்சுத் திறனையும் வளர்க்கிறது.

சிந்தித்தல் தொடர்பாக ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை பல்வேறு தத்துவ ஞானிகள் வெவ்வேறு வியாக்கியானங்களைக் கூறியிருக்கின்றார்கள். 2500 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டிஸ்

"உன்னையே நீ அறிவாய்
உன்னையே நீ எண்ணிப்பார்
சிந்தி! சிந்தி பிரச்சினைகள் குறையும்" என்றார்.

மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த பிரான்ஸ் நாட்டுத் தத்துவஞானியும், கணித வியலாளருமான ரெனி டேகாட் (Rene Decartes)

"நான் சிந்திக்கின்றேன், எனவே
நான் இருக்கின்றேன்"

என்றார்.

18ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த தத்துவஞானி ரூஸோ

"சிந்திக்க தொடங்கியவன் விடவே மாட்டான்" என்றார்.

19ம் நூற்றாண்டில் ஜேர்மன் நாட்டுத் தத்துவஞானி வில்லியம் ஹெகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தத்துவ ஞானம் என்றால் ஞானத்தை நாடல் அல்லது உண்மையை அறிதல் என்று பொருள்படும். ஒரு மனிதன் உண்மையை அறிந்து பயன் நிறைந்த, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படையானவை அவனது சிந்தனையும், செயற்பாடுகளுமே ஆகும்.**

பிளவுபட்டன. இவ்வாறாக அன்றிலிருந்து இன்றுவரை எது உண்மை, எது பொய். எதனைச் சிந்திக்க வேண்டும், எதனைச் சிந்திக்கக் கூடாது என்பதை மனிதன் தேடி ஆராய்ந்து கொண்டேயிருக்கின்றான்.

இனி எப்படிச் சிந்திக்க வேண்டும் என்பதே அடுத்த கேள்வியாகும். உலகில் உள்ள அனைத்துமே தர்க்க வியல் அடிப்படையிலே இயங்குகின்றன. அந்த வகையில் யாவற்றையும் உணரும் மனித சிந்தனையும் தர்க்கவியல் அடிப்படையைக் கொண்டது. உருவமில்லாத கடவுளைப் பற்றிய மனித சிந்தனையானது அக நிலையானது, கற்பனை வளமிக்கது: அற்புதமானது. காலப்போக்கில் இக் கற்பனைவாதமே கடவுளுக்கு உருவங்களையும் வழிபாட்டு முறைகளையும் அவை சார்ந்த பண்பாடு, நாகரிகங்களையும் உருவாக்க உதவியது எனலாம். இதனால் சமயம் எனப்படுவது சிந்தனையின் விஞ்ஞானமாகக் கருதப்பட்டது. முதன் முதலாக மனித ஆத்மாவை இயக்கவியல் கண்ணோட்டத்தில் பார்த்தவர் தத்துவஞானி அரிஸ்ரோட்டில் என்பாரே. வில்லியம் ஹெகலின் புறநிலைக் கருத்து முதல்வாதம் இயங்கு- இயல் சிந்தனை முறையை வலியுறுத்துகின்றது. கருத்து, எதிர்க்கருத்து, சமரசக் கருத்து என்றவாறு இயங்கு - இயல் தர்க்க முறையில் மனிதன் சிந்திக்கின்றான் எனக் கூறப்படுகின்றது.

மனிதரின் தர்க்க ரீதியான சிந்தனையை வளர்ப்பதில் கணிதம் முக்கியப் பங்கை வகிக்கின்றது. கணிதம் என்பது நியம விஞ்ஞானமாகும். நியம விஞ்ஞானம் என்பது சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது. அனுபவம் சார்ந்தது. உதாரணமாக:-

1. ஒரு புள்ளியைச் சூழ்ந்துள்ள கோணங்களின் கூட்டுத் தொகை 360°
2. ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூட்டுத்தொகை 180°
3. செங்கோண முக்கோணத்தின் செம்பக்கத்தின் வர்க்கம், ஏனைய பக்கங்களின் வர்க்கங்களின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும்.

இவை யாவும் கேத்திர கணிதத்திலுள்ள சிந்தனை ரீதியான வெளிப்படை உண்மைகளாகும். இவ்வாறான ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்படை - உண்மைகளின் மேல் கட்டப்படுவதே கணிதமாகும். இவ்வாறாக அட்சர கணிதம் தீர்வு மூலமும்: கேத்திர கணிதம் நிறுவல்கள் மூலமும்; வகையீடு, தொகையீடு ஆகிய நுண் கணிதம் மூலமும் தர்க்க ரீதியான சிந்தனை வளர்க்கப்படுகின்றது. மேலும் இக்கணித அடிப்படை உண்மைகள் பிரபஞ்சம், இயற்கையில் உள்ள வடிவங்களைப் பிரதிபலிக்கின்றன. இவ்வடிவங்களின் நீளங்கள், பரப்புக்கள், கனவளவுகள் மற்றும் ஏனைய பரிமாணங்களை அளப்பதற்குத் தர்க்க ரீதியாகக் கணிதச் சூத்திரங்கள் கண்டறியப்பட்டன. தர்க்க ரீதியான கணிதச் சிந்தனை உண்மையைக் கண்டறிவதற்கும், ஞானத்தை நாடலுக்கும் கருவியாக அமைகின்றது எனலாம். இதனாலேயே வரலாற்றில் கணிதவியலாளர்கள் யாபேரும் தத்துவஞானிகளாக வழிகாட்டியதைப் பார்க்கின்றோம்.

அடுத்து பிரபஞ்சம், இயற்கை, சமூக நிகழ்வுகளை நாம் எல்லோரும் புலன்களால் நுகர்கின்றோம். ஆனால் ஒரு சிலர் மத்தியிலேயே அவை சிந்தனை ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தித் தேடலில் ஈடுபட்டு விதிகளைக் கண்டுபிடிக்கத் தூண்டுகின்றன. உதாரணமாக அப்பிள் பழம் கீழ் நோக்கி விழும் நிகழ்வு சேர் ஐசாக் நியூட்டனின் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்தி புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடிக்க, அவரின் சிந்தனை சக்தியே காரணமாகும். மேலும் ஒரு மனிதனின் சிந்தனையில், நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் பாலியல் பிரதான இடத்தை வகிப்பதாக உளவியலாளர் சிக்மன்ட் பிராய்ட் கூறுகின்றார். அவ்வாறே ஒரு சமூகத்தில் இருக்கின்ற உற்பத்தி சக்தி, உற்பத்தி உறவு என்கின்ற பொருளாதார முறைமை மனித சிந்தனை, நடத்தையில் பிரதான இடத்தை வகிப்பதாக தத்துவஞானி கார்ல் மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். சிந்தனைச் சுதந்திரம், மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். சில மனிதர்கள் கூடுதலாக சிந்திக்கின்றார்கள். ஆனால் செயற்பாடு போதாமல் உள்ளது. குறிக்கப்பட்ட சிலரின் சிந்தனைக்கும், செயற்பாட்டிற்கும் இடையே சமநிலையிருக்கும். சிலர் சிந்திப்பதை விட கூடுதலாக செயற்படுவார்கள். இவர்களது செயற்பாட்டைச் சில புறக் காரணிகள் தீர்மானிக்கும். இதுவே செயற்பாட்டு வாதம் என அழைக்கப்படும். ⊡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகள் இப்போது நம்மிடையே இல்லை

இனிமேல் எவரும் ஏழையில்லை
அரசியல்வாதிகட்குச் செவிமடுப்பீர்
நாம் கண்ணாடியில் நோக்குகையிலேயே சுருங்கும்
நடுத்தர வர்க்கம் பற்றி அவர்கள் இரங்குவர்

ஏலவே பேசத்தகா வார்த்தைகளாலான
மறப்பு வாளிக்குள் ஏழைகள் கழியுண்டுள்ளனர்
ஒரு காலம் தொழுநோயாளர்கட்குச் செய்தது போல,
அமைதியாக அழுகுமாறு, அவர்களை

மனதின் வலுவூட்டிய தீவுகட்குக் கப்பலேற்றியாயிற்று
வறுமை ஒரு நோயாயின், பாதிப்புற்றோரைத் தனிமைப்படுத்துக
அது சமூகப் பிரச்சனையாயின், அவர்களை
உயர் மதில்களின் பின்னாற் சிறையிடுக

அது மரபியலானதாய் இருக்கலாம்: தடுக்கக்கூடிய நோய்கள்
எளிதாக அவர்களைத் தொற்றுவதை நோக்குக
அவர்கட்குக் குப்பையை ஊட்டுக. அப்போது உங்கட்கு
அவர்களைப் பராமரிக்கும் செலவின்றி அவர்கள்

மாரடைப்பாலோ பக்கவாதத்தாலோ மரிப்பர். மலிவான
துவக்குகளை வழங்குக. உங்கள் கண்காணாமல்
அவர்கள் ஆளையாள் கொல்வர்.
சேரிகள் பொல்லாத இடங்கள்

அவர்கள் எத்தகைய முட்டாள்கள் எனக் கற்பிக்கும்
பாடசாலைகளை அவர்கட்கு வழங்குக. எனினும்
அவர்கள் போதியளவு வாங்குவதில்லை என்பதோடு
போதியளவு செலவிடுவதுமில்லை. உங்கட்கு

லஞ்சமோ நன்கொடைகளோ தருவதில்லை. அவர்களுடைய
கடன் நம்பகத்தின் நலிவால் விளம்பரங்கள் அவர்களை நோக்குவதில்லை.
வணிக நிறுவனங்கள் போல அவர்கள் நிசமான மனிதரில்லை. எனவே
அவர்கள் இல்லை எனப் பாசாங்கு பண்ணுக.

*(அமெரிக்கக் கவிஞரான மாஜ் பியேஸி மாக்ஸியவாதியும் பெண்ணியவாதியும் சமூகச் செயற்பாட்டாளருமாவர்.)*

மாஜ் பியேஸி
தமிழில் : சி. சிவசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் தொடரும் வலி

மு. அநாதரட்சகன்

"அப்பன் அமுதன்.... அமுதன்.. டேய் அமுதன்..."

சத்தமாகக் கூப்பிட்டாள் அம்மா. மேலும் ஏதோ தொண தொணப்பது காதில் அறைந்தது.

திடுக்கிட்டுப்போய் கிணற்றுக் கட்டிலிருந்து எழுந்தான்.

குரல் வந்த திசையைப் பார்த்தான் அம்மா இவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கையில் தேநீர் குவளை இருந்தது.

தேநீரை கையில் கொடுத்து விட்டு இவனை வெறித்துப் பார்த்தாள் அம்மாவின் முகத்தில் கோபம் சூடேறியிருந்தது.

சமீப நாட்களாக அம்மா இப்படித்தான் எல்லோரிலும் சீறிச்சினப்பதும், பின்னர் இணக்கத்துடன் அரவணைத்துப் போவதுமாக இருக்கிறாள்.

ஏதோ மனதில் குழப்பம்.

"எப்பவும் புத்தகத்தோடை இருந்தால் வயித்துப்பசி தீருமா.... உனக்கும் வயது வந்திட்டுது. வீட்டிலையும் இரண்டு குமருகள் இருக்குதுகள். எல்லாத்திலையும் பொறுப்பிருக்கோணும் இப்பிடியே நீ இருந்தால்...?"

அம்மாவின் தொண தொணப்பு நின்றபாடில்லை, நீண்டு கொண்டு போனது, தோப்பில் முகம்மது மீரானின் 'அஞ்சு வண்ணம் தெரு' கதையில் கட்டுண்டு போயிருந்தவனுக்கு அம்மா இப்படி வந்து கறுவிக் கொண்டிருப்பது எரிச்சலைத் தந்தது, மனம் ஒப்பாமல் மூடி வைத்து விட்டு எழுந்து கொண்டான்

"கலா அக்கா தொழுவத்தில் கட்டியிருந்த மாடுகளை அவிழ்த்து வளவுக்கு வெளியே விரட்டிக் கொண்டு போனாள். அவளுக்கும் கலியாண வயது. சூரியனும், செவ்வாயும் ஒன்றாக நின்று தடை போடுகிறார்களாம். பாவக்கிரகமும் கூட என்று சோதிடர்கள் கூறி விட்டார்கள். பாவம் அவள் வரனுக்காகக் காத்திருக்கிறாள்.

"கதைப்புத்தகம் படிச்சது போதும். மாடுகளுக்கும் தீன் இல்லை. எங்கட வயலுக்கை போய் புல்லு அறுத்துக் கொண்டு வா. பெய்யிற மழையையும் காணன். பயிர் பச்சையெல்லாம் கருகப்போகுது. இதை அம்மாளும் பாத்துக் கொண்டிருக்கிறா. கஞ்சிக்கும் வழியில்லாமல்தான் கிடக்கப்போறம்."

அம்மாவின் குரல் கம்மிப் போயிருந்தது "உன்ரை ஐயாவுக்கும் இனி ஏலாது. நோயாளியாப் போனார். தனிய இருந்து மாஞ்சது போதும். இனி நீதான் எல்லாத்தையும் பாக்கோணும்."

இதற்கு மேலும் அங்கிருக்க விரும்பாது சேட்டைக் கொழுவிக் கொண்டு புறப்பட்டான். பாரத்ததில் சைக்கிளும் சிறிது காற்றுப் போயிருந்தது. சந்தியில் மாணிக்கம் கடையில் காற்றடிக்கலாமென மனம் சொல்லியது.

"அமுதன் முகக்கவசத்தையும் போட்டுக் கொண்டு போ. இக்கணம் அவங்கள் கண்டால் பிடிச்சுக்கொண்டு போகிடுவாங்கள் கவனம்."

இதுவும் அம்மாதான்.

சந்தியில் சைக்கிளுக்குக் காற்றடித்து விட்டு சைக்கிளில் மிதந்து செம்மணி வெளிக்கு வந்தான். பார்வையை அகல விரித்துக்கொண்ட போது ஏகப்பெருவெளியாக காட்சி தந்த வயல் நிலங்கள் மனதுக்கு ரம்மியத்தைக் கொடுத்தன. கூடவே இதமான காற்றும் மெல்ல வருடிச் சென்றது. மயானத்தைக் கடந்து இன்னும் சொற்ப தூரத்தில் வலது புறமாகத் திரும்பி வயலை அடைந்தான்.

சைக்கிளை மதகில் சாத்திவிட்டு அரிவாளுடன் வயலுக்குள் இறங்கினான். பயிரெல்லாம் பசுமையிழந்து பழுப்பு நிறமாகி வாடிக்கொண்டிருப்பது தெரிந்தது. நிலம் பாளம் பாளமாய் வெடிக்க ஆரம்பித்துவிட்டது. இன்னும் கொஞ்ச நாளில் பயிர்களெல்லாம் கருகிச் சாம்பலாகிவிடும் போல. பக்கமிருந்த வாய்க்காலும் நீர் வற்றிப் போயிருந்தது. கரையில் ஓரமாக நிரையில் நின்ற பூவரசுகள் இலைகளை உதிர்த்து நிர்வாணமாய் காட்சி தந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரெல்லாம் குளத்தில் நீர் நிறைந்திருந்த வேளைகளில் விதவிதமான பறவைகள் பூவரசு மரங்களில் கூட்டமாக வந்தமர்ந்து சிறகடிக்கும். அந்த அழகைக் கண்டு மனம் நெகிழ்ந்து போயுமிருக்கிறான். அந்தப்பரவசம் இப்போ தெல்லாம் சித்திக்காமல் போய்விட்டது.

ஐப்பசி வந்தால் விதைப்பு முடிந்திருக்கும். எப்படியும் ஒரு வாரத்துக்குள் மழை தூறுவது வழக்கம். புழுதி நிலமெல்லாம் ஈரத்தன்மையாகி விடும். அந்த ஈரப்பிடிப்பில் நெல் மணிகள் முளைவிட்டு தலைகாட்டி வெளியே வந்துவிடும். பிற்பாடு இடையிடையே பெய்கின்ற மழை கதிர்களை வாடாமல் பாதுகாக்கும்.

இம்முறை மழைதூறியதில் கதிர்தள்ளியும் மாதங்கள் கடந்து போயிற்று. இன்னமும் சிறு தூறல் கூட நிலத்தில் விழவில்லை.

நேற்றும் மேகம் நன்றாகக் கறுத்திருந்தது. இடி மின்னலென ஆர்ப்பாட்டமாக முழங்கித் தீர்த்தது. அறிகுறிகள் கண்டு அம்மா மகிழ்ந்து போயி ருந்தாள். கடைசியில் எல்லாருக்கும் போக்குக் காட்டிவிட்டு மேகம் கலைந்து போனது. ஒரு சிறு தூறல் கூட நிலத்தில் விழவில்லை.

ஐயாவும் காலை மாலையென வயலுக்கை தான் நின்றவர். நம்பிக்கையுடன் தவறாமல் வந்து போகிறவர். அவரும் வானத்தை அண்ணாந்து பார்த்து ஏங்கியது தான் மிச்சம். கொஞ்ச நாளா இந்தப்பக்கம் வருவதையும் நிறுத்தி விட்டார்.

அப்படி ஒரு சலிப்பு ஐயாவுக்கு

அமாவாசை, பௌர்ணமி எனக் கனத்த நாட்களில் மழைவருமென நம்பியிருந்த அம்மாவின் ஆரூடமும் பலிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் பேச்சியம்மாவிடம் பழி போட்டு விட்டுக் காத்திருக்கிறாள்.

எங்களைப்போன்ற ஏழை பாழைகள் இத்தனை காலமும் போகத்திற்கு மழையை நம்பித்தானே பயிர் செய்தோம். இன்று பருவம் தவறி மழைகாலமும் குறுகிவிட்டது.

இப்படியே போனால் எங்கள் கதி யென்ன...? மனம் ஏங்கித் தவித்தது. சோர்ந்து போய் மதவில் வந்து அமர்ந்தான்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் வெள்ளை வெளேரென பெருவெளியை ஆக்கிரமித்த படி கட்டிடமொன்று கண்ணை நிறைத்தது.

முன்பு ஒரு தடவை அது ஒரு மத நிறுவன மொன்றினது என ஐயா கூறியதாக நினைவு.

முன்னர் தொட்டம் தொட்டமாக நிழல் பரப்பி நின்ற பனை மரங்களும் அழிந்து போய் கட்டிடங்கள் முளைக்கத் தொடங்கி விட்டன.


செம்மணி வீதியில் வாகனங்கள் அடர்த்தியாய் போய்க் கொண்டிருந்தன. இடையே கன்ரர் வாக னங்கள் உறுமியபடி வேகம் காட்டிச் சென்றன.

இருட்டத் தொடங்கியது.

எதிரே மல்லிகா சைக்கிளில் காற்றை வலித்த படி வந்தாள். அவளைக் கண்ட கிளுகிளுப்பில் எழுந்து நின்றான்.

பள்ளிக்கால நினைவுகள் இவனுள் துளிர்ந்தது.

மல்லிகா இவனுடன் ஒன்றாகப் படித்தவள். நாயன்மார்க்கட்டு மகேஸ்வரியில் பத்தாம் வகுப்பு வரை கூடவே படித்தவள். போர் முற்றி இடம் பெயர்ந்ததில் அவள் குடும்பமாக வன்னிக்குப் போனாள். நீண்ட இடைவெளியில் திரும்பி வரும் போது அப்பா காணாமல் போயிருந்தார். அது பற்றி அயலில் பலவாறு பேசிக் கொண் டார்கள். அவையெல்லாம் இவனது காதுக்கும் எட்டியதுதான். அதிலிருந்து வறுமை விரட்ட தாயுடன் கூலி வேலைகளுக்குப் போய் வருகிறாள். ஊருக்குள் அவளை விடவும் வயதில் இளைய வர்களெல்லாம் திருமணம் முடித்து குடித்தனமாகி விட்டார்கள். குழந்தை குட்டிகளென்று கட்டுக்குள் போய் விட்டனர். பாவம் அவளுக்கு மட்டும் அந்தக் கொடுப்பினை இன்னமும் வாய்க்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகா கிட்ட வந்தபோது ஆவல் கொண்டு முகத்தைப் பார்த்தான். ஏதும் பேசுவாளென்று. அவளும் முகத்தை மூடி கவசமிட்டிருந்தாள். சில நொடிகள் உற்றுப்பார்த்து விட்டு, சைக்கிளை கன வேகமாக மிதித்தாள. கரியரில் இருந்த புல்லுக் கட்டு ஆடிக் கொண்டிருந்தது.

திரும்பி நின்று அவள் போவதைப் பார்த்தான். இவன் பார்வையில் ஏக்கம் கனத்திருந்தது.

அவளுக்கும் எத்தனை சுமைகள் இருக்குமென தேற்றிக் கொண்டது மனம்.

ஒன்றாகப் படிக்கிற காலத்தில் இவனுக்கும் அவளில் ஒரு ஈர்ப்பு இருந்தது உண்மைதான். அது காதலாகிக் கனிந்து வருகையில் தானாகவே ஒதுங்கி விட்டாள் மல்லிகா. அதன்பின் இருவரும் தனிவழியில் போய் காலமும் கடந்து போய் விட்டது.

கணத்தில் அவள் மீதிருந்த சிலிர்ப்பு எழுந்து அடங்கிப் போனது. அவளது திகைப்பும் கலைய சைக்கிளை எடுத்தான்.

செம்மணி வீதிக்கு வந்தபோது இருபுறமும் பனை மரங்கள் வரிசையாய் நின்று தலை யசைப்பது மனதுக்கு இதமளித்தது. பனை ஓலைகள் காற்றில் ஒன்றையொன்று உரசும் சத்தமும் கேட்க வேகமாக உழக்கினான்.

மயானத்தைத் தாண்டி சந்திக்கு வந்து இடது புறம் திரும்பினான். கள்ளுத்தவறணை களை கட்டிப்போயிருந்தது. பேச்சும் பாட்டுமாக. அங்கு வந்து விட்டுப்போகிற சிலர் சத்தமாகப் பாடிக் கொண்டு முன்னே சென்றனர்.

இவன் சைக்கிளை இன்னும் வேகமாக உழக்க ஆரம்பித்தான்.

சிறுபராயத்தில் இப்பகுதியில் எப்படியெல் லாம் மழை பெய்தது. மழை பெய்ய ஆரம்பித்தால் நாலைந்து நாட்கள் பெய்துதான் அடங்கும் சோனாவரி மழை என்பார்கள். அப்படியொரு அடை மழை பெய்யும். மழைக் காலம் வந்தால் விவசாயிகளுக்கெல்லாம் பயந்தான். அதை எப்படி எதிர்கொள்வதென்று. குளங்கள் எல்லாம் நிறைந்து வழியும். நாயன்மார்க்கட்டுக்குளம் நிறைந்து அக்கம் பக்கமெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிவிடும். அடுத்த ஆடிவரை குளம் வற்றாது. அந்த வெள்ளத்தில் நண்பர்களுடன் நீச்சல் பழகிக் கழித்த நினைவுகளுடன் வீடுவந்து சேர்ந்தான்.

படலையைத் தள்ளியபடி உள்ளே போய் முற்றத்தில் நின்ற வேம்பில் சைக்கிளைச் சாத்தி விட்டு புல்லுக்கட்டுடன் நிமிர்ந்தான்.

ஐயா திண்ணைச்சுவரில் சாய்ந்தபடி இருந்தார். அம்மா அடுப்படிக்குள் இருப்பது தெரிந்தது. அம்மாவுக்கு எல்லாநேரமும் அடுப்படிதான்.

காலையில் எழுந்து பேச்சியம்மனிடம் போய் வந்து அடுப்பைப்பற்ற வைத்தால் அந்திவரை அடுப்பும், நெருப்புந்தான் தஞ்சமென்றாகிவிடும்.

தங்கை வசந்தியும் தொழுவத்தில் ஏதோ வேலையில் தன்னை மறந்திருந்தாள். பொறுப் பான பிள்ளையென வீட்டில் பெயர் எடுத்தவள்.

இலங்கை வானொலியில் மாலை நேரச்செய்தி முடிந்து செய்திச் சுருக்கம் போய்க்கொண்டிருந்தது.

அதைக் கேட்ட ஐயாவின் முகம் இறுகிப் போயிருந்தது. ஏதோ சுகக்கேடான செய்தியைக் கேட்க நேர்ந்தது போல.

இரசாயனப் பசளைகளுக்கெல்லாம் ஒரேயடி யாகத் தடைவிதிக்கப்பட்டதாகச் செய்தி கூறியது. இது நாட்டின் அந்நியச் செலாவணியை மீதப் படுத்த நிபுணர்கள் எடுத்த முடிவாம். ஒரே மூச்சில் இதனை நடைமுறைப்படுத்தவுள்ள தாகவும், இது அதிமேதகுவின் கண்டிப்பான உத்தரவு என திரும்பத் திரும்ப கூறி முடித்தது.

இவன் அடுப்படிக்குள்ளிருந்து வந்த அம் மாவை ஏறிட்டுப் பார்த்தான். அம்மாவும் கலங் கிப் போயிருந்தாள். பேயறைந்தவள் போல முகம் பேதலித்துக் கிடந்தது தன்வசமிழந்து போய்.

"பேச்சியம்மாளே பாரணை இந்த அநியா யத்தை. காலங்காலமா பழகிப்போனதை திடீ ரென்று நிப்பாட்டச்சொன்னால் நாங்கள் என்ன செய்யிறது. என்ன கொடுமையடி இது" பொருமிக் கொண்டு கூறினாள்.

மீண்டும் ஒரு கணம் மௌனம் காத்து விட்டு

"எங்களுக்கு இனி வெள்ளாமை சரிப்பட்டு வராது. ஆருக்கும் வயலை வித்துப்போட்டு வேறை வேலையைப் பாப்பம்."

முடிவில் நீண்ட பெருமூச்சொன்றை உதிர்த்தாள்.

ஐயா எதுவும் வாய்திறந்து பேசாமல் றேடி யோவை நிறுத்திவிட்டு அமைதியானார்.

இவனுக்குள்ளும் பல கேள்விகள். கூடவே மழை பெய்தவுடன் மஞ்சள பாரித்துக்கிடக்கும் பயிருக்கு யூரியா உரம் எறிய வேண்டுமென்ற அம்மாவின் நச்சரிப்பும் நினைவில் மீண்டது. ⊡

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண மக்களுக்கான அரங்கத் தேவையும் சூரன்போர் சடங்கும்

நிரூஜா இராசரத்தினம்

## அறிமுகம்

சூரன்போர் சடங்கரங்கானது தற்காலத்திலே இடை வினைத் தொடர்புகள் தகர்க்கப்பட்டுப் போன நிலையில் இதன் சமகாலப்போக்கின் பங்குகொள் நிலையினூடாகவே இதனை ஆராய வேண்டியுள்ளது. இன்று எம் கைகளில் மிஞ்சியிருக்கும் இக்கலை மரபினை மேலும் ஊக்குவித்து பேண் நிலையின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. அரங்கின் மீது சாதாரண மக்களுக்கு தீராத மோகம் காணப்பட்டாலும் இன்றைய அரங்கின் கல்வி முறைகளும் கோட்பாடுகளும் அவர்களை அன்னியப்படுத்திவிட்டதை உணர்கின்றோம். எத்தனை கலைஞர்கள் தம் கலைகளை இன்று வெளிக் காட்டத் தயங்குகின்றனர். எனவேதான் உள் ளிருக்கும் மக்களை வெளிக் கொண்டுவருவதற்கான அரங்கு எமக்குத் தேவையாக இருக்கின்றது.

இவ் அரங்கானது வெளிவரும் மக்களின் சுதந்திர மான செய்கைகளையும், சுதந்திரமான பேச்சுக்களையும் வெளிப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும். நம்மிடையே உள்ள சடங்கு அரங்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான மக்களை தன்பால் கொண்டு இன்னும் இயங்குகின்றது. மக்களிடம் சென்று தாக்கம் செலுத்தி அவர்களை ஈர்த்து அன்று தொடக்கம் இன்று வரை தன்னகப்படுத்தியுள்ளது. எனவே அன்னியப்பட்ட மக் களின் அரங்கத்தேடலில் அவர்களின் சுயாதீனத்தையும், கலைகளையும் முன் நிறுத்துவதற்கு நாம் சடங்கு அரங் கிற்குள் மீளத்திரும்ப வேண்டிய அவசியம் இல்லை. சடங்குகளில் காணப்படும் நல்ல இயல்புகளை கொண் டும், தற்கால அரங்கின் இயல்புகள் சிதையாமலும் நாம் இவ் அரங்கை கொண்டாடலாம்.

இவ்வாறான ஒரு அரங்கத்தேடலில் சூரன்போர் சடங்கை முன்னிறுத்துவது முக்கியமானதாகும். முருகன் சூரனை சங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் 'சூரன் போர்' என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம். பார்வையாளரும் பங்காளராக மாறி சூரன்போர் சடங் கினை நிகழ்த்துவர். கோயில் வெளி முழுவதுமாக ஆற்றுகை இடம்பெறும். களம் முழுவதும் அங்குமிங்கும் திரிந்து ஆற்றுகையினைப் பார்ப்பார்கள். நிகழ்த்து வோருக்கும், பார்வையாளர்களுக்கும் களம் ரீதியான கட்டுப்பாடு கிடையாது. அவர்கள் தம் விருப்பப்படி பார்வையாளராகவும் பங்காளராகவும் காணப்படுவர். பெருவாரியான கூட்டத்தின் மத்தியில் ஆற்றுகை நிகழ்த் துவதற்கு களம் (வெளி) மிகவும் அவசியம். தொன்று தொட்டு மனிதன் சடங்கில் பங்குகொண்டு சடங்கை நிகழ்த்தி அதனோடு இணைந்து ஆடிப்பாடி தன்னை வெளிப்படுத்த இந்த வெட்ட வெளியான களங்களே உதவின. மேலும் வெட்ட வெளியான களங்களில் வெளிப்பாடும் செய்கையும் அதிகமாக வெளிப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கே வெளிகளிலே தம்மை மறந்த மனிதர்கள் கூச்சலிட்டு கத்தி ஆர்ப்பரித்து ஆடிப்பாடினர். செய்கைகள் யாவும்; அவர்களின் மனங் களைத் தூய்மைப்படுத்தி அமைதியடையச் செய்தது. இதன் மூலம் அவன் தானாகவே குணமடையலானான்.

## சூரன் போர் (கந்த சஷ்டி)

இவ்விழாவின் ஆறாம் நாள் 'சூரன் போர்' நாடகப் பாணியில் நடைபெறுவது வழக்கம். இங்கு சூரர்களின் உற்பத்தி நிகழ்ச்சி கூறப்படுகின்றது. மாயையும் காசிபரும் சந்தித்தல், சூரர்கள் பிறத்தல், சூரர்கள் சிவபெருமானை நோக்கித் தவம் இருத்தல், சிவபெருமான் வரம் தருதல் ஆகிய நிகழ்ச்சிகள். சூரன் திக்கு விஜயம் மேற்கொண்டு தேவர்களை அடிமையாக்கிய நிகழ்ச்சிகள் சொல்லப் படுகின்றன. இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு தேவன், குபேரன், ஈசானன், பிரம்மா, சூரியன், சந்திரன், விஷ்ணு ஆகியோரை அடிமை கொள்கின்றான். சூரன் தேவர்களைச் சிறையிலிட ஆணையிடுகிறான். பானுகோபன் அவர்களை சிறையிலிட தேவர்கள் சிவ னிடம் முறையிட்டனர். சூரன் தொல்லையை பொறுக்க முடியாமல் சிவனிடம் முறையிட சிவபெருமான் முரு கனையும் நவ வீரர்களையும் சூரனைக் கொல்ல அனுப்புகின்றனர். வழியில் தாரகனையும் அவனது மலையையும் அழிக்கின்றார் முருகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகன் மகன் அசுரேந்திரன் சூரனிடம் தன் தந்தை மரணம் பற்றி குறிப்பிடுகின்றான். வீரவாகு சூரன் அவையை அடைந்து தர்க்கம் நடத்துகின்றார். முடிவில் வீரவாகு வச்சிரவாகுவைக் கொன்று நகரை அழித்து முருகனை அடைகின்றார். இப்பகுதியில் அழிந்த நகர் பிரம்மாவால் மீண்டும் சரி செய்யப்படுகின்றது. சிங்க முகன் சூரனுக்கு அறிவுரை கூறுகின்றான். அதனை ஏற்காத சூரன் பானுகோபனைப் போருக்கு அனுப்பு கிறான். பானுகோபனுக்கும் வீரவாகு தேவருக்கும் சண்டை நடைபெறுகின்றது. இறுதியில் பானுகோபன் கொல்லப்படுகிறான். பானுகோபன் மாண்டது அறிந்த சூரன் புலம்புகின்றான். சிங்கமுகன் போருக்குப் புறப் படுகிறான். வீரவாகு தேவருக்கும் சிங்கமுகனுக்கும் கடும் சண்டை நடைபெறுகிறது. சிங்கமுகன் வீரவாகுவையும், பூதரையும் மாயையால் கட்டி உதயகிரிக்கு அப்பால் தள்ளி விடுகின்றான். அதன் பின்னர் முருகன் சிங்க முகனோடு போரிட்டு அவனை கொல்கின்றார். சிங்க முகன் இறந்ததைக் கேட்டுச் சூரன் புலம்புகின்றார். பின்னர் சேனைகள் புடைசூழ யுத்த களத்திற்கு விரை கிறான். இதேபோல் நாரதர் மூலம் செய்தியறிந்த முருகன் நவவீரர்கள், பூதகணங்கள் புடைசூழப் போருக்குப் புறப்படுகின்றார். முதலில் வீரவாகு தேவருக்கும் சூரனுக்கும் போர் நடைபெறுகின்றது. இதில் சூரன் வீரவாகுவை அறைந்து வீசி விடுகின்றான். இதற்குப் பின்னர் முருகனுக்கும், சூரனுக்கும் நேரடிப் போர் நடைபெறுகின்றது. இறுதியில் சூரசம்காரம் நிகழ்கின்றது.

சூரசம்காரம் முடிவில் முருகன், மா மரமாக நின்ற சூரனைத் தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவ்லும் மயிலுமாக மாறவும் சேவலை கொடியாகவும், மயிலை வாகனமாகவும் முரு கன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப் பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். சூரனை அழித்த முருகப் பெருமானின் விரதம் முருகன் சூரனை சங்கரித்த பெரு மையைக் கொண்டாடுவதே கந்த சஷ்டி விழாவாகும்.

## *நிகழ்த்துகையும், ஆட்டமுறைமையும்*

### சூரன்

சூரன்போரிலே சக்கரத்தில் நிறுத்திய சூரன், சக் கரத்தில் நிறுத்தாத சூரன் என இரண்டுவகையுண்டு. சக்கரத்தில் நிறுத்திய சூரன் இங்கு ஆட்டத்திற்கு உகந்ததாக காணப்பட்டது. இந்த சூரனை ஆட்டும்போது கம்பீரம் தோன்றும். அதுவே மற்றயதைக் காட்டிலும் கலைத்துவமாக மக்களை ஈர்த்துவைக்கக் கூடியது. சூரனின் ஒரு கை மடித்து சக்கரமேந்தும், மறுகை ஆயுதம் ஏந்தும். அதுவே போருக்குரியது. இவ் ஆட்டக் கலையிலே பங்கு கொள்வோர் உடல் வலிமையானோர் களாக இருத்தல் வேண்டும். கொம்புகளை (காவாங்கு, திருவாத்தி) கைகளினால் பிடித்து ஆட்டுவதினால் கைகளுக்குச் சிறப்பான பங்கு இங்குண்டு.

### ஆட்டமுறை

சூரனை ஆட்டும்போது சூரனுடைய புயபராக்கிரமம் அவனுடைய மாயா சக்தி முதலியன புலப்படக் கூடியதாக ஆட்டங்களை நெறிப்படுத்தி ஆடிவந்தனர். சூரன் ஆட்டத்திலே இரண்டு விதமான ஆட்டங்கள் உண்டு. ஒன்று பொதுவான ஆட்டம், இன்னொன்று சிறப்பாட்டம். சூரன் தலைகளைப் பொறுத்து ஆட்டங்கள் அமையும். பொது ஆட்டங்கள் எல்லாத் தலைகளுக்கும் பொதுவாகத் தலைகளை மாற்றியவுடன் ஆட்டப்படும். இவ் ஆட்டங்கள் வழமை போலவே காணப்படும். இவ்வாட்டங்களின் போது வாள், வில், கதாயுதம், என்பன மாற்றப்படுகின்றன. சக்கராயுதம் தடுப்பாயுதம் ஆகும். இது மாற்றப்படுவதில்லை. மறுகையிலே இருக் கும் . ஆயுதங்கள் தான் மாற்றப்படுகின்றன. தலைகள் வீழ்த்தப்படும் நேரங்களில் ஆட்டம் விறுவிறுப்படையும். சிறப்பாட்டங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு தலைக்குரிய ஆட்டங்களாகவும் அமைகின்றன.

இந்நிகழ்விலே முதலிலே கஜமுகசூரன் ஆட்டத்தைத் தொடருவான். இங்கு சூரனைக் காவுவோர் சூரனை வலம், இடம் என கைளிலே தாங்கி சரித்துப்பிடித்த வண்ணம் முருகனை வலம் வருவர். சூரன் பாசாங்கு செய்வதைப் போல இவர்கள் காவாங்குகளோடு கூடிய சூரனை தோழிலே சுமந்து பாசாங்கு செய்வர். கைகளால் தூக்கி எறிந்து, பிடித்தும், சரித்தும், நிமித்தியும் பல கோணங்களில் வித்தைகளை செய்வார்கள். கஜமுக சூரனை முதலிலே கொண்டு வந்து ஆட்டும்போது யானைக்குரிய இயல்புத்தன்மைகளைக் கொண்டு அவ்வாட்டங்கள் ஆடப்படுகின்றன. நேரே ஓடுதல், அசைந்து அசைந்து ஓடுதல் போன்ற ஆட்டங்களை வகுத்து ஆடி வந்தனர். அடுத்ததாக சிங்கமுகன் தலையைப் போட்டு ஆடும்போது சிங்கத்தின் வேகமும், ஆவேசமும், பாய்ச்சலும் ஆட்டுவோரின் செய்கை யிலேயும் காணப்பட்டது. இங்கு ஆட்டம் வீரம் மிகுந்தாகவும் ஆவேசம் விறுவிறுப்பு உடையதாகவும் காணப்பட்டது. சில ஆட்டமுறைகள் ஆட்டப்படும் தன்மையினைக் கொண்டும் வகுக்கப்பட்டுள்ளது.

### வள்ள ஆட்டம்

கடலிலே வள்ளம் எப்படி ஆடுமோ அதைப்போலவே சூரனை இடம் வலமாக ஆட்டிவரும் முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைப் பதித்து கைகளிலே சூரனை ஏந்தி தாலாட்டுவதைப் போலவும், கால்களை அங்கும் இங்குமாக வைத்து தாமும் வள்ளத்தினைப் போல ஆடி வருவர்.

### ஒட்டக ஆட்டம்

இவ் ஆட்டமானது சிறப்பு ஆட்டவகைகளுக்குள் அடங்கும் ஓர் ஆட்டவகையாகும். இவ் ஆட்டத்தை ஒருவர் தோள் மீது ஒருவர் அமர்ந்தவாறோ அல்லது ஒருவரது தோளின் மீது ஒருவர் நின்றவாறு சூரனை அதற்கு மேலே வைத்து ஆடும் முறை இதுவாகும். இவ்வாட்டத்தினை எட்டுபேர் மட்டுமே நிகழ்த்துவர் இவ் ஆட்டத்திற்கு கூடிய மனித வலு தேவைப்படுகின்றது.

### தனி ஆட்டம்

தனி ஆட்டம் என்பது நான்கு பேர் மட்டும் ஆடும் ஆட்டமாகும். சூரனை நான்கு பேர் மட்டும் தோளிலே காவி ஆடிவருவர். தமது உடல் நிலைக்கு ஏற்றவாறு தாளத்திற்கேற்ப ஆடலையும் நிகழ்த்துவார்கள்.

### வட்டம் போடுதல்

முன் தலைக்கொம்பை ஒரு சாரார் நிலத்திலே பதித்து ஊன்றிப் பிடிக்கப் பின் பக்கக் கொம்பினைப் பிடிப்பவர் கள் உயர்த்திச் சூரனைச் சுற்றுவதன் ஊடாக நிலத்தில் வட்டம் கீறுதல் இது பின் தலைக்கொம்பிற்கும் இடம் பெறும். பார்ப்பதற்குச் சுவாரஸ்யமான முறையிலே காணப்படும்.

### சரிவாட்டம்

ஒரு பக்கத்தில் நிற்போர் கைகளிலே பதித்து தாங்க மறுபக்கத்தில் இருப்போர் தண்டை உயர்த்தி தலைக்கு மேலே பிடிக்க சூரன் சரிந்த வண்ணம் முருகப்பெருமானை சுற்றி வருதல் இவ் ஆட்டமாகும்.

### நேராட்டம்

முருகனுக்கு நேரே சூரனைக் கொண்டு ஓடிச் சென்று திரும்பி பின்தலைக் கொம்பு பக்கமாகத் திருப்பி ஓடுவார்கள். இவ் ஆட்டம் அனைத்து தலைகளுக்கும் ஆட்டப்படும் பொதுவான ஒரு ஆட்டமாகக் காணப்படுதல்.

### வளைவாட்டம்

வளைந்து நெளிந்து முருகனைச் சுற்றி ஆடும் ஆட்டம் இதுவாகும். முதலில் முன்பக்கத்தாலும் பிறகு பின்பக்கத்தாலும் வளைப்பதன் ஊடாக இதனை நிகழ்த்துவர். கொம்பு பிடிப்போர் இதனை நெறிப்படுத்தி வலம் இடம் என ஏனையோரை திரும்ப வைப்பர்.

> *அரங்கானது வெளிவரும் மக்களின் சுதந்திரமான செய்கைகளையும், சுதந்திரமான பேச்சுக்களையும் வெளிப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும். நம்மிடையே உள்ள சடங்கு அரங்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களை தன்பால் கொண்டு இன்னும் இயங்குகின்றது. மக்களிடம் சென்று தாக்கம் செலுத்தி அவர்களை ஈர்த்து அன்று தொடக்கம் இன்று வரை தன்னகப்படுத்தியுள்ளது*

### சிறப்பாட்டம்

சிறப்பாட்டத்தின் உள்ளே சூரனின் கொம்புகளைக் கையிலே பதித்து ஏந்தி எண்ணிக்கை வைத்து சூரனை எறிந்து பிடித்தல் இவ் ஆட்டமாகும். முதலிலே எத்தனை தரம் எறிந்து பிடித்தல் என்பதை தீர்மானித்து விடுவார்கள். அதற்கு ஏற்ப கொம்புகளை எறிந்து கைகளில் சூரனை ஏந்துவார்கள்.

### தோப்புக்கரணம் போடுதல்

சூரனை கைகளில் ஏந்திக் கொண்டு அவர்கள் தாம் தீர்மானித்த எண்ணிக்கையைக் கொண்டு எண்களை உச்சரித்தவாறு நிலத்திலே இருந்து தோப்புக்கரணம் போடுவதைப் போல எழுவார்கள். இத்தோப்புகரணம் ஒன்றிலிருந்து நூறு தடவை கூட இடம்பெறும்.

### ஆற்றுகையை வழிநடத்துவோர்

இவ்வாறான ஆட்டங்களின் போது காவுதடியின் முன், பின் புறங்களில் இருவர் வழிநடத்துபவர்களாகக் காணப்படுவர். அவர்கள் தான் ஆட்டத்தை எங்கு நிறுத்துவது, எங்கு தொடருவது எந்த திசையில் நகர்த் துவது என ஏனையோருக்கு அறிவுறுத்துபவர்களாக காணப்படுவர். ஆட்டத்தினை மாற்றும் போதும், அடுத்து என்ன செய்யப் போகின்றோம். எந்த எந்த ஆட்டங்களை நிகழ்த்தப் போகின்றோம் என்பதையும் கூடித்திட்டமிடுவர். கொண்டு வழிநடத்த குழுவிலே சிலர் காணப்படுவர். விறுவிறுப்பு, வேகம் என்பவற்றைக் கூட்ட அடுத்தடுத்து ஆட்டங்களை மாற்றும் போது அவர்கள் தொடர்ந்து வழிநடத்துவோரின் வழிகாட்டலில் செயற்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரன் ஆட்டக்காரர்கள்

"இங்கு சூரனைக் காவுவோர் தம்மை அறியாமலே சூரர்களாக வெறி கொண்டு நிகழ்த்துவர்". சூரன் போருக்கான ஆட்டங்கள் தற்பொழுது வகுக்கப்பட்டவை அல்ல. அவை முன்னர் தொட்டு நிகழ்த்தப்படுகின்றன. தற்காலத்தில் இளைஞர்கள் தமது விருப்பத்திற்காகவும், தமது பலத்தைக் கொண்டும் சிலசில ஆட்டங்களை வகுக்கின்றனர். சூரன் ஆட்டத்திற்கு ஆட்பலம் மிகவும் தேவை. இதில் பதினெண்மர் தேவைப்படுகின்றனர். இருவர் தீவட்டி பிடிக்கின்றனர். ஆட்டத்திற்கு ஏற்ப அங்கும் இங்கும் தீவட்டி பந்தங்களைக் கொண்டு கீழும் மேலும் பந்தங்களை அசைத்து சூரனின் உடம்பினை மின்னலிடச் செய்வர். சக்கரத்தின் பின் சூரன் பீடத்தில் நின்றாட்ட ஒருவர் இவர் எந்த நிலையினையும் சுதா கரிக்கக் கூடிய சுயம் உடையவராக இருத்தல் வேண்டும். ஆட்டத்தின் போது தன்னை நிலைநிறுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். கால்களை உறுதியாக படத்தின் மேல் பதித்து நிலைகொள்ளச் செய்திருப்பார். ஆட்டங் களுக்கு ஏற்ப இவர் தனது உடலையும் சுதாகரித்துக் கொள்வார். இருந்தும், குனிந்தும், நின்றும், சரிந்தும் சூரனை இறுகப் பிடித்துக் கொண்டு மறுகையால் சூரனின் தலையினை அசைப்பார். சக்கரத்தை அசைத் துக் கொண்டேயிருப்பார். இது பார்ப்போருக்கு தனி கவர்ச்சியை வழங்கும். ஆட்டத்தின் போது இவரிடத்தே காணப்படும் துணிவானது பார்ப்போரை மெய்சிலிர்க்க வைக்கும். பக்கவாட்டில் சூரன் சரியும் போது முன் பக்கமும், பின்பக்கமும் மாறி மாறி தாழ்த்தி உயர்த்தப் படும்போதும் இவரின் அசைவுகள் உடலசைவுகள் பார்க்கும்போது எமக்கே மெய் சிலிர்க்கும்.

சூரனை எண்ணிக்கை சொல்லித் தூக்கி எறிந்து ஏந்துவார்கள். ஏந்தும் போது பீடத்தில் நிற்பவரும் சூரனுடன் சேர்ந்து போய் வருவார். கீழ் இருப்போர் காட்டும் வித்தைகள் அனைத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடியவாராகவே பிடத்தில் நிற்பவர் மனமும் உடலும் இருக்கும். இங்கு உடல்மொழி முக்கியமாகும்.

கொம்பு பிடிப்பவர்கள், இவர்கள் இருவர் முன்கொம்பு பிடிப்பவர், பின்கொம்பு பிடிப்பவர் ஆட்டத்தின் போது சூரன் சுழண்டு வருவதன் காரணமாக முன்கொம்பு, பின்கொம்பி பிடிப்பவர்கள் தான் பார்வையாளரை நுனித்தறிய வேண்டிய நிலை இருக்கும். கட்டளை இடுபவரே முன்கொம்பு பிடிப்பவராக இருப்பார். முன்கொம்புக்கு உரியவரே தலைவராக இருப்பார். இவரது கட்டளைக்கு ஏற்பத்தான் ஏனையோர் செயல்படுவதும் ஆட்டம் அரங்கேறுவதும் இடம்பெறும். மக்களால் புரிந்த கொள்ள முடியாத பதங்களையே இங்கு பயன்படுத்துகின்றனர். வழக்கமாக சூரன் ஆட்டத்தினை நிகழ்த்தும் இளைஞர்கள் அணியே பங்குபற்றுவதன் காரணமாக அவர்களுக்குள் சில சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கேற்ப கட்டளை கள் பரிமாறப்படும். இதனால் சூரன் ஆட்டுபவர்கள் தொடர்ந்து அடுத்ததாக என்ன செய்யப்போகின்றனர் என்பது மக்களுக்கு தெரியாமலே இருக்கும். தலைக் கொம்பை பிடிப்பவர், தலைக்கொம்பை மாத்திரம் பிடித்துக்கொண்டு செயல்படுவராக மட்டும் அல்லாமல் மாறாக ஏனையோருக்கு அறிவுறுத்துதல், ஆட்டத்தை மாற்றுதல் என ஏனைய பணிகளையும் ஒரே நேரத்தில் செய்யும் வலிமையுடையவராக இருப்பார். பின் தலைக் கொம்பினைப் பிடிப்பவர் கட்டளைக்கு ஏற்ப பின் பக்கத்திலே நிற்பவர்களை வழிநடத்திச் செல்வர்.

கட்டளைச் சொற்கள் பெரும்பாலும் மேலே நின்று சூரனின் தலையினை ஆட்டுபவருக்கும் இரு பக்க கொம்புகளைப் பிடிப்பவருக்கும் உதவுவதைக் காணலாம். கட்டளை பிறப்பிக்கப்பட்டவுடன் கொம்பு பிடிப்பவர்கள் யாவரும் தமது தோழிலே இருந்த கொம்பினை தமது கைகளில் பதித்துப் பிடிப்பார்கள். சூரனின் பீடத்தின் மேல் நின்றுகொண்டிருப்பவர் உடனே சூரனின் கையிலே காணப்படும் ஆயுதத்தை ஆயுதமேந்தும் ஒருவனிடம் வீசுவார். அதே நேரம் ஆயுதம் வழங்குபர் சூரன் ஆட்டுபவரிடம் பிறிதோர் ஆயதத்தை வீசுவார். அவ் ஆயுதத்தை பிடித்து சூரனின் கரத்திலே மாட்டிவிடுவார். இதனை தொடர்ந்து "அப்" என்ற கட்டளைவர கொம்பு பிடிப்போர் கொம்பினை தமது தோள்களுக்கு எடுப்பர். இவற்றுக்கு எல்லாம் இங்கு உடல்மொழியே பயன்படுத்தப்படுகின்றது. கொம்புகள் தமது தோள்களுக்கு வந்தவுடன் விரதக்களையுடனும் அவர்கள் பலம் பெறுகிறார்கள் என்றே கூறவேண்டும். இவை அனைத்தும் நொடிப்பொழுதிலான செயற்பாடு களாகவே காணப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு அர்த்தங்களைக் கொண டுள்ளனர். இதற்கேற்பவே ஆட்டங்களும் நிகழ்த்தப் படுகின்றது.

## மக்களும் நம்பிக்கையும்

பண்டைய சடங்குகளை போல சூரன்போரிலே வெறி கொண்டு சூரனை அவர்கள் ஆட்டும்போது தமது தீய குணங்கள் யாவும் விலகுவதாக கருதுகின்றனர். சூரன் என்னும் தீமையை முருகன் வதம் செய்வதானது தம் ஊரிலே உள்ள ஒட்டுமொத்த தீமைகளையும் சேர்த்து வதம் செய்வதாக தமக்கு தோன்றுவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். இன்னொருவர் கூறுமிடத்து முருகன் தனது அசுரத்தன்மையினை நீக்கி தன்னை சுகப்படுத்துவதாக கூறினார். தாம் கேட்டதை எல்லாம் தருபவன், என மக்கள் அனைவரும் முருகனை தமது அன்னியோன்னிய உறவாகவும் அவன், இவன் என அழைத்தமையை காணக்கூடியதாக இருந்தது. அனைவரும் கூடி பங்கு கொண்டு தம்மை வெளிப்படுத்துவதில் அவர்கள் அதிகம் இங்கு குணமடைகின்றனர்.

## முடிவுரை

இவ்வாறு தனித்தன்மைகளோடு கூடி தன்னுள் ஏராளமான பார்வையாளர்களைக் கொண்ட சடங்கு அரங்காகச் சூரன் போர் சடங்கு திகழ்கின்றது. உண்மையில் அரங்கு தன் தோற்றத்தில் மக்கள் சுதந்திரமாக திறந்தவெளியில் ஆடிப்பாடும் ஒரு கலையாக இருந்ததாக அரங்க மானுடவியலாளர்கள் கூறுவர். 'கார்சியா லோர்க்கா' கூறுகையில், "ஒரு நாட்டின் நாடகம் அதன் நிலவொளி மற்றும் அதன் மக்களுடைய மெய்யான வண்ணத்தை வசப்படுத்தக் கூடியதாக அரங்கு இருத்தல் வேண்டும்" என்கின்றார். காத்திரமான ஜன ரஞ்சகமான வடிவங்கள் கொண்ட அரங்கு மக்களுக்குத் தேவைப்படுகின்றது. அரங்கு தற்போது பல்வேறு வடிவங்களில் மாறிவிட்டது. பார்வையாளன் எவ்வளவு தூரம் திருப்திப் படுத்தப்படுகின்றான். தற்போதுள்ள அரங்குகள் எவ்வளவு தூரம் நோய் தீர்க்கும் பண்பைக் கொண்டிருக்கின்றன என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. ஜன ரஞ்சகமான அரங்கு எம்மிடம் காணப்பட்டால் எப்படி இருக்கும். நம்மிடையே காணப்படும் அரங்கானது தன்பால் குறிப்பிட்ட மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளர் கூட்டத்திலேயே திருப்திப்படுத்தும் முகமாக உருவாக்கப் படுகின்றது. நமது அரங்கினை பார்ப்பதற்கு எத்தனை பேர் முன் வருகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தொன்றுதொட்டு வழங்கிய பழமையான அரங்கு இசைக்கருவிகள், தன்னியக்கம், செய்கை, வெளிப்பாடு, பாடல், ஆடல் காரணமாக பார்வையாளனை வெளிக் கொண்டுவருது மட்டுமல்லாது அவர்களின் உள்ளக் கிடக்கைகளை எழவைத்துக் கைகால்களை எறிந்து ஆட வைத்து அவனைப் பங்காளனாக மாற்றி விடுகின்றது. அரங்கிலே கலை இணைப்பு எனும் போது அதிகமாக அத்தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. இன்று மனிதன் தனது செயலில் வளர்ச்சி கண்டு உலகமயமாக்கல் நாகரீக சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ஆனாலும் சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பனவற்றோடு மாறாமல் பயணப்பட்டுக் கொண்டே வருகின்றான். எனவே மனிதனின் செயல்கள் சடங்கில் மெய் நிலைப்பட்டதாகவும், வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்வதாகவும், அவனது கூட்டத்திலே உயர்ந்தான் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருப்பதாலும், அவனைச் சுகப்படுத்துவதாகவும், அவனது பிணிகளை நீக்கிக் குணப்படுத்தச் செய்வதாகவும், ஜனரஞ்சகத் தன்மையுடன் காணப்படுவதாலும் மரபுகள் அவனோடு பயணப்பட்டு வருகின்றன.

*தொன்றுதொட்டு வழங்கிய பழமையான அரங்கு இசைக்கருவிகள், தன்னியக்கம், செய்கை, வெளிப்பாடு, பாடல், ஆடல் காரணமாக பார்வையாளனை வெளிக் கொண்டு வருவது மட்டுமல்லாது அவர்களின் உள்ளக் கிடக்கைகளை எழவைத்துக் கைகால்களை எறிந்து ஆட வைத்து அவனைப் பங்காளனாக மாற்றி விடுகின்றது.*

மரபுரீதியான அரங்கிற்கு வருபவர்கள் தாமாகவே தம்மை வெளிப்படுத்துகின்றனர். பொதுவாக ஆடல் பாடல்கள் என்பது பண்டைய சமூக மக்களிடையே நிலவி வந்தது. இவர்களை ஆடல், பாடல்கள், செய்கைகள் என்பன வெளிப்படுத்தவும் குணப்படுத்தவும் செய்தது. மனிதன் ஒன்றிணைந்து வெளிப்படுத்தும் போது உடல் ரீதியாக தன்னைக் குணப்படுத்திக் கொண்டு தன் பிணிகளைப் போக்க முடியும். இவ்வாறான பிணி போக்கும் அரங்கு நமக்கு தேவையாக இருக்கின்றது. அவ் அரங்கில் ஜனரஞ்சகத் தன்மை, எல்லோரையும் ஒன்றிணைக்கும் தன்மை என்பவற்றை நாம் நிறுவ வேண்டும். எனவே நாம் மரபு ரீதியான அரங்குக்குள் மீளத்திரும்பாது விட்டாலும், மரபின் அம்சங்களை புகுத்தி அரங்கினை அளிக்கை செய்வதன் ஊடாக நாம் சமூகமாற்றத்துக்கான அரங்கத்தேடலை வளர்த்தெடுக்க முடியும்.

## உசாத்துணை நூல்கள்


1. சிவத்தம்பி. கா, "யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்துநிலை" குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2008
2. சிதம்பரநாதன். க, "சமூக மாற்றத்திற்கான அரங்கு" சவுத் ஏசியன் புக்ஸ் & தேசிய கலை இலக்கியப் பேரவை, 1995
3. மதுசூதனன். தெ, ஜீவாகரன். ச, "அரங்கின் பரிமானங்கள்" விபரி மாற்று கலாசார மையம், இராஜகிரிய, 1997
4. வானமாலை. நா, "தமிழர் பண்பாடும் தனித்துவமும்" அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2008
5. நாடகச் சிறப்பிதழ், "ஒலை" கொழும்பு தமிழ் சங்கம், இதழ் : 48 – 49 ஆடி-ஆவணி, இலங்கை, 200


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத் துரோகம்

இப்படியான ஒரு பயங்கரம் சூழ் கனவை
நான் ஒரு போதும கண்டதில்லை
இப்படி ஒரு விசித்திரமான சொப்பனத்தை
நான் எப்பொழுதுமே மொழி பெயர்த்ததுமில்லை

ஒருபோதும் காணாத
ஒரு போதும் மொழி பெயர்க்காத
இந்த நேர்த்தியற்ற உணர்வை
எனக்குச் சகிக்கவும் இயலவில்லை

ஏலவே, என் கனவுகளில் தோன்றிய
திகில் சம்பவங்கள் இதில் இல்லை
சற்றென்று முடிந்துவிடும சலனமும் இல்லை
புதையலும் இல்லை பூதமும் இல்லை
என் அம்மா அப்பாவோ பாட்டி தாத்தாவோ
என் மூதாதையர்களோ இங்கு சுத்தமாயில்லை
ஆதலால்- இந்தக் கனவு
எனக்கு அச்சத்தை ஊட்டுகின்றது

இந்தக் கனவில் பெருங் குண்டர்களும்
கொடிய நரகாசுரன்களும்
நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள்
பூமியின் மொத்த வளத்தையும்
மண்ணுக்குக் கீழேயும் மேலேயும்
இடப்பக்கத்தில் வலப்பக்கத்தில் இருப்பதையும்
கடப்பாரைகளைக் கொண்டு இடித்துக் களவாடிக் கொண்டார்கள்
செதுக்கியும் தூக்கிப் போகிறார்கள்

அதன் ஓசை எனக்கு மெல்லியதாய் பட்டாலும்
கொடூரமாக எனக்குள் அது
கொந்தளிப்பைத் தருகின்றது
எரிமலை 'கீமாவை' (லாவாவைத்) தள்ளுவதைப போல்
ஒரு பெருங் கனம் அதிலே கல்விக் கிடக்கிறது

இந்தப் பூமியில் ஒவ்வோரினமும்
நஞ்சூட்டப்படுவதாலும்
சிறகிழந்த சிட்டுக் குருவிகள்
என் வீட்டுக் கூரைத் தகரங்களில்
விழுந்து போகும் சின்னச் சலனத்தையும்
என் கனவுக்குள் அனுமதிக்க முடியவில்லை
ஆனாலும் என் கனவு
பயங்கரமாகவே உணரப்படுகின்றது

என் கனவில் வரும்
சின்னச் சின்னத் தேவதைகளின்
வாய்களில் எல்லாம்
ரத்தம் பீரிட்டுக் கொண்டே இருக்கிறது
யாரும் காணாத வகையாய்
அவர்களின் மார்பகங்கள்
கசக்கிப் பிழிந்து பிய்த்தெறியப்படுகின்றன
பூமியில் கிழிந்துபோன
சட்டப் புத்தகங்களைக் கொண்டு
தேவதைகள் தங்களின் எதனையோ
இறுக மூடிக்கொள்கின்றன

ஒற்றைச் சேவல் கூவலில்
என் கனவு கலையத் தொடங்குகிறது
கைகளுக்குள் ஏதோ பாரமாய் இருக்கிறது
துப்பாக்கிக் கணக்கில் ஓர் ஆயுதம் போல

என் தேவ குழந்தைகள்
ஆழ்ந்த நித்திரையில்
என் கனவையும் கல்விக் கொள்கின்றார்கள்
கண் விழித்துக் கொள்கின்றேன்
என் தேசிய கீதம்
சீன மொழியிலும்
இன்னும் பல மொழிகளிலும்
அர்த்தமற்றதாய் அந்நியப்பட்டதாய்
ஒலித்துக் கொண்டேயிருக்கிறது


என் தேசத்தின்
பெயர்ப் பலகை சற்றென்று
திருப்பிப் போடப்படுகிறது

என் கவிதைக்குத்
தாய் நாடு என்று
தலைப்பிட நினைப்பது
பொருத்தம் என நினைக்கும் கணத்தில்
நிஜத்தில் துப்பாக்கி வெடிக்கின்றது
ஓ என் தேசமே!

**சந்திரலேகா கிங்ஸ்லி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூலி வேலை செய்யும் தந்தை... நோயாளியான தாய்... கூடப் பிறந்தவர்கள் ஐந்து பேர். குடும்ப நிலைமை மிகவும் மோசமானது. மூத்தவன் சிவசோதி. போசாக்கான உணவில்லை என்பதை சகோதரர்களைப் பார்த்தாலும் தெரிந்து கொள்ளலாம்.*



# (ஏ) மாற்று

**ந. பார்த்தீபன்**
வவுனியா

கண்டியிலிருந்து திகனைக்கான கடைசி பஸ்ஸும் போயிருக்குமோ...? என்ற அங்கலாய்ப்புடன் கொழும்பிலிருந்து கண்டி பஸ் நிலையத்தில் வந்து இறங்குகிறேன்.

கண்டி மழையையும் கம்பஸ் காதலையும் நம்ப முடியாது. எப்ப வரும் எப்ப போகும் என்பது கம்பஸில் சொல்லப்படும் ஒரு அனுபவ வாக்கு. கண்டியில் மழை பெய்து கொண்டிருக்கிறது. குடையைக் கொண்டு வந்திருக்கலாம்.

மழைக்கு மட்டுமே குடை பிடிக்கும் பழக்கம் இருப்பதால் மழை பெய்யாத வேளைகளில் குடையை மறந்து போய்... பல குடைகளைத் தொலைத்த அனுபவத்தால் குடை கொண்டு திரிவதை விரும்பாததன் அருமை புரிகிறது. பாக்கைத் தலை நனையாமல் பிடித்துக் கொண்டு பஸ் கோல்ட்டுக்குள் ஓடிப்போய் நின்று கொண்டேன்.

தங்கள் வசதிக்காக கொழும்பு - கண்டி போன்ற பயண ஓட்டத்திலும் நல்ல ஹோட்டலில் நிற்பாட்டி, மூக்கு முட்டச் சாப்பிட்ட றைவரும் கொண்டக்டரும்.... மூன்று மணித்தியாலங்களுக்குள் கொழும்பிலிருந்து கண்டிக்கு வர வேண்டிய பஸ்ஸை.... நான்கு மணித்தியாலங்களாக.. இழுத்தடித்து... இனி அவர்களைக் கோபித்து என்ன செய்வது?

மூன்று மணிக்கு வேலையை முடித்து நாலு மணிக்கு பஸ் ஏறி.... கண்டியிலிருந்து எட்டு மணிக்கு புறப்படும் திகனை பஸ்ஸைப் பிடிக்க வேண்டும் என நினைத்த என.க்கு நல்ல ஆப்பு வைத்து விட்டார்கள். எனக்கு மட்டுமா..?

ஒரு லோங் றிப் பஸ் என்ற நினைப்பு கொஞ்சமும் இல்லாமல் எல்லா இடத்திலும் நிற்பாட்டி,

நிற்பாட்டி. இப்போது நான் கண்டியிலிருந்து திகனைக்கான கடைசி பஸ்ஸை விட்டு விட்டேன் போலிருக்கிறது.

யாரை நோவேன். யார்க்கெடுத்து உரைப்பேன் என்ற நிலையில் நான் பஸ் கோல்ட்டில் நிற்கிறேன்.

"கடைசி பஸ் போய்விட்டதா?" என அங்கே நிற்கின்ற பிரயாணிகளிடம் கேட்கிறேன். "அது சரியாக எட்டு மணிக்கு போயிட்டுது" என்ற பதில் என்னைச் சோர்வடைய செய்கிறது. நேரத்தைப் பார்க்கிறேன் எட்டரை....

கடைசி பஸ், அதுவும் சீ. ரீ. பி. குறித்த நேரத்திற்கு கொஞ்சம் முந்தியெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி முடிச்சாப் போதுமென நினைக்கிற சமூக அக்கறை கொண்ட ஓட்டுனரும் நடத்துனரும்.

ஏழரை இல்லைத் தானே என நினைத்து.... மனைவி என்றால் ஏழரைச்சனி ஆட்டிப் படைக்குது என்று கூறுவாள்.

நீங்கள் நின்று விடிய வந்திருக்கலாமே என்பாள். பயணம் போகும் போது ஒரு குடையைக் கொண்டு போயிருக்கலாம் என்று கூறுவாள்.

அதுதானப்பா, உங்களுக்கிப்ப ஏழரைச் சனி நடக்குதப்பா, அது அலைச்சல் தான் என்பாள்.

ரவுணில் யாராவது தெரிந்தவர்கள் வீட்டில் நின்று விடிந்ததும் போவமோ... என்று மனம் அங்கலாய்க்க.... நிற்கிறேன்.

என்ன செய்யலாம் என யோசித்துக் கொண்டிருக்கையில் யாரோ "சேர்" என அழைப்பது கேட்கின்றது. திரும்பிப் பார்க்கிறேன். சிவசோதி நிற்கிறான்.

கொஞ்சம் கொழுத்து, வெள்ளை ஃபுல் ஸ்லீவ் சேட்டும் கறுத்த ரவுசரும்... ஆள் பார்க்க சந்தோஷமாக இருப்பது போல் தெரிகிறது. இருக்காதா...? நியமனம் கிடைத் தல்லவா....

சிவசோதி கல்விப்பொதுத்தராதர உயர் தரம் படிக்கும் போது இருந்த கோலத்தை நினைத்துப் பார்க்கிறேன். மெலிந்து, நெடுத்த, பஞ்சத்தில் அடிபட்ட ஒரு தோற்றம்.

நீலத்தைக் காணாத வெள்ளை சேட், வெள்ளைக் காற்சட்டை, எண்ணெய் படாத தலை, மொத்தத்தில் கொஞ்சம் நீற் குறைந்த, ஏன் ஸ்ரையில் இல்லாத ஒரு அப்பாவி மாணவன் போலவே உயர்தரம் படிக்கும் போதும் காட்சி அளிப்பான்.

ஆனால் அமைதியான, ரீச்சர்ஸ் பார்வை யில் நல்ல பிள்ளை என்ற பெயரோடு உலாவித் திரிவான்.

பதவி, சம்பளம் எல்லாம் ஒரு களையைக் கொடுக்கத் தானே செய்யும். ஏதோ ஆசிரிய நியமனம் பெற்றுத் தப்பிவிட்டான் என்று எனக்குள் நினைத்துக் கொள்கிறேன்.

எப்படி இருக்கிறீங்க சேர்?- சம்பிரதாயக் கேள்வியை சிவசோதி கேட்கிறான்.

நல்லா இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்?

நல்லா இருக்கேன் சேர்... என்று கூறிய படி ஒரு வெள்ளைக் கடித உறையைத் தருகிறான்.

ஏன், ஏன் என்று சொல்லிக் கொண்டி ருக்கும்போதே என் கையில் கொடுத்து விடுகிறான்.

என்னவாயிருக்கும் என்று நான் யோசித் துக் கொண்டிருக்கும் போது என்ன சிவசோதி... நீயும் பஸ்ஸை வுட்டிட்டியா? என்று கேட்டுக்கொண்டு ஒருவர் நாங்கள் நிற்கும் பக்கத்திற்கு வருகிறார்.

மஜ்ழக்கு கொஞ்சம் போட்டிருக்கிறார் என்பது அவருடைய குரலில் தெரிகிறது. பழ வாசனை தூக்கியடிக்கிறது.

நான் சிவசோதி தந்தது என்னவாயிருக்கும் என்று எனக்குள் கேட்டுக் கொள்கிறேன்.

ஓ.... அன்றைய நினைவுகள்..

ஏ. எல். சித்தியெய்தி கல்விக் கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கு போய்... மலையகத்தில் பிறந்து, மலையகத்திலேயே படித்ததால் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு கிடைச்சிருக்கு என்று சந்தோஷத்துடனும் ஒருவித தயக்கத்துடனும் சொன்ன அந்த பரிதாபத்துக்குரிய மாணவனின் முகம் சிவசோதியினுடையது.

ஆனால் சிவசோதியில், மகிழ்ச்சியை விட கலக்கம் தான் அதிகம் எனக்குத் தெரிந்தது.

கூலி வேலை செய்யும் தந்தை.. நோயாளி யான தாய்... கூடப் பிறந்தவர்கள் ஐந்து பேர். குடும்ப நிலைமை மிகவும் மோசமானது. மூத்தவன் சிவசோதி. போசாக்கான உண வில்லை என்பதை சகோதரர்களைப் பார்த் தாலும் தெரிந்து கொள்ளலாம். ஆனாலும் பாடசாலைக்கு வருவதில் எல்லோரும் ஒழுங்குதான்.

ஏ. எல் படிக்கும்போது ரியூஷன் செலவு களின்றி அக்கறையுள்ள ஆசிரியர்களின் துணையுடன் படித்து நல்ல பெறுபேறுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர், என்னுடைய குடும்ப நிலைமையில் நான் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு போவது... சிவசோதி தயங்கித் தயங்கிக் கூறுகிறான்.

என்னுடைய சக ஆசிரியர்கள் சற்று நேரம் யோசித்து விட்டு "நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. நாங்கள் இருக்கிறம்" என்று கூறுகிறார்கள்.

அன்றைய தினம் அதிபருடன் கலந்தாலோசித்து சிவசோதியைக் கொண்டு கடிதம் ஒன்று எழுதச் செய்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்போம் என முடிவு எடுக்கிறார்கள்.

செல்வன். ப. சிவசோதி
செனரத்வெலத் தோட்டம்
திகனை.
*20.06.1990.*

பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளுக்கு.

கல்விக் கல்லூரிப் பயில்வுக்கான உதவி கோரல்.

மேற்குறிப்பிட்ட முகவரியில் இருக்கும் நான், ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பயிலுநராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

என்னுடைய இந்த வெற்றிக்கு இதுவரை காலமும் நீங்கள் செய்த உதவிகளுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பயிற்சி நெறியை மேற்கொள்ள சில முன்னாயத்தங்கள் செய்ய எனக்கு மேலும் உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தவுடன் நான் இவ்வுதவியை மீளக் கையளிப்பேன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் கீழ்ப்படிவுள்ள மாணவன்
ப. சிவசோதி.

ஆசிரியர்கள் திட்டமிட்டபடி ஆளுக்கு ஐநூறு ரூபா போட்டு பத்தாயிரம் ரூபாய் அளவில் சேர்த்து கொடுத்தது ஞாபகம் வந்தது.

அந்தக் கடித உறைக்குள் நானும் அன்று செய்த உதவித்தொகை இருக்குமோ...?

அன்று தாமாக முன்வந்து உதவி செய்த ஆசிரியர்கள், தங்களுக்குள், அறவிட முடியாக் கடன் என்றும் கதிர்காமத்தானுக்கோ, முறி கண்டியானுக்கோ என்றும் பகிடி சொல்லிச் சிரித்தது ஞாபகத்துக்கு வருகின்றது.

சிவசோதி தந்த கடித உறைக்குள் நான் அன்று கொடுத்துதவிய அறவிட முடியாக் கடன் தான் இருக்குமோ...

எடுத்துப் பார்க்க மனம் அங்கலாய்த்தாலும் அது நாகரிகமில்லை... சே..., சிவசோதி என்ன நினைப்பான்... சேர் கூடப் பணம் வைத்திருக்கிறானோ என்று பார்க்கிறாரோ... என்று நினைத்துவிடுவானோ... வேண்டாம். அதனைப் பொக்கற்றுக்குள் வைத்து- விடுவோமென நினைக்கிறேன்.

சிவசோதி தன்னை நோக்கி வந்தவருடன் இன்னும் கதைத்துக் கொண்டு நிற்பதால் அந்தக் கடிதவுறையை திறந்து பார்க்க மனம் நினைக்கிறது. ஆனாலும் அது சரியில்லை.. என்று நான் நினைத்து பார்க்காது விடுகிறேன்.

என்னசேர்? பார்க்காமலே பொக்கற்றுக் குள்ளை வைச்சிட்டீங்க என்று கூறியதோடு, சேர் நீங்க முன்னமே எல்லாம் அறிஞ்சிட்டீங்களா? என்று கேட்கிறான்.

என்ன அறிஞ்சிட்டீங்களா...? என்று கேட்கிறானே... மற்றைய ஆசிரியர்களுக்கும் திருப்பிக் கொடுத்துவிட்டானோ...?

விடைத்தாள் திருத்தும் பணிக்கு கொழும்பு போய் பத்து நாட்களின் பின் வந்தபடியால் மற்றவர்களுக்கு கொடுத்தது எனக்குத் தெரியாது போய்விட்டதோ...? என நான் யோசிக்கிறேன்.

சேர், என்ன சேர், எடுத்துப் பாருங்க சேர், என்று சிவசோதி திரும்பவும் கூறுகிறான்.

பரவாயில்லை. இருக்கட்டும். நீ அவசரப் பட்டுவிட்டாய் என்று நான் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்க முன் அப்படித்தான் சேர் வேறை ஆக்களும் சொல்றாங்க என்று கூறுகிறான்.

வேறை ஆக்களும்... ஓ, அந்த நேரம் எங்களுடைய உதவி போதாததால் வேறை ஆக்களும் உதவினார்கள் போலிருக்கிறது. இல்லை மற்றைய ஆசிரியர்களைக் தான் வேறை ஆக்களும் என்று சொல்கிறானோ...?

என்றாலும் இப்ப என்ன அவசரம்?

இல்ல சார் நான் அவசரப்படவில்லை. எங்கடை மக்கள் படுகிற கஷ்டங்களை, அறியாமையால் ஏமாற்றப்படுகிற நிலைமை களை, எங்கட தலைவர்கள் எப்படி எல்லாம் எங்கட மக்களை ஏச்சுப்பிளைக்கிறாங்க என்பதை நினைச்சுப் பார்த்தேன். அதனால் தான் சேர் நான் இந்த முடிவுக்கு வந்தேன்.

என்ன இது நான் ஏதோ நினைக்க சிவசோதி ஏதேதோ சொல்கிறான் என நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்

சேர், இந்த மாகாண சபைத் தேர்த லில் நானும் ஒரு வேட்பாளராக போட்டி யிடுகிறேன். அதற்கான நோட்டீஸ் தான் சேர் நான் உங்களிடம் தந்தது என்று கூறி எனக்குத் அந்த கடித உறையில் இருந்த நோட்டீஸ் போல தன்னிடமிருந்த நோட்டீஸ் பாசலிலிருந்து மற்றொன்றை எடுத்துக்காட்டுகிறான்.

ஆசிரிய நியமனம் கிடைத்து மூன்று வருடங்கள் கூட மலையகப் பிரதேசங்களில், அப்பிள்ளைகளுக்கு, பின்தங்கிய கல்விக்கு சேவை செய்யவில்லைச் சிவசோதி...

பாடசாலையில், வகுப்பறைகளில், வேறி டங்களில் எனப் பல்வேறு இடங்களிலும் மலையகக்கல்வி பின்தங்கிப் போனதற்கு, நல்ல தீர்வாக நீங்கள் படித்து முன்னேறி, குறிப்பாக நல்ல ஆசிரியர்களாக வந்து சிறந்த அர்ப்ணிப்போடு சேவைகள் செய்ய வேண்டும் என்று கூறியது சிவசோதி விட யத்தில் வீண் போனது என்ற நினைப்போடு, இனி என்ன சொல்வது ? சொன்னாலும் ஆசிரியர் - மாணவர் என்ற கோதாவில் சிவசோதி கேட்கப் போகிறானா என்று மௌனமாக....

கட்சிகள் கூடி... வாக்குகளைப் பிரிப் பதற்கு பலரை பயன்படுத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்த வலையில் சிவசோதியும்.....

ஆசிரிய சேவை செய்வதைவிட அரசி யல்வாதியாகிச் சேவைகள் செய்வது உசி தம் என்று நினைக்கிற சிவசோதிக்கு.... யார் சொல்லித்தான் ஏற்றுக் கொள்ளப் போகிறான் என்ற ஆதங்கத்தோடு சிவ சோதியைப் பார்க்கிறேன்.

கொஞ்சம் கொழுத்து, வெள்ளை ஃபுல்ஸ் லீவ் சேட்டும், கறுத்த ரவுசரும், ஆள் பார்க்க சந்தோஷமாக இருப்பது போல் தெரிகிறது. இவை மாதாந்தச் சம்பளத்தில் வந்ததல்ல... அது அரசியல்வாதியின் தோற்றப் பொலிவு என்பதை எனக்கு உணர்த்துகின்றது..

சிவசோதி அரசியல்வாதியாகி மலைய கத்தை முன்னேற்றப் போகிறான்...?

அதிகமானோர் தாங்கள் செய்யும் தொழி லினூடாக சேவைகள் செய்யாமல்....: மருத் துவர்கள் பலர் மருத்துவம் படித்து மக் களுக்கு சேவை செய்யாமல் அரசியலுக்குள் குதித்துள்ளனர். இலக்கியத்துள் பாய்ந்து சுழி யோடுகிறார்கள். வியாபாரத்துக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளனர். சிவசோதியும்... அவர் களைப்போல

இப்போது திகனைப் பஸ்ஸிற்காக பலர் காத்துக் கொண்டு நிற்கிறோம். இனி, ஓட்டோவோ... வானோ பிடித்து... அவன் கேட்கிற காசைக் கொடுத்துப் போக... அங்கே நிற்கின்ற எத்தனை பேர்களிடம் பணம் இருக்குமோ....?

சிவசோதி ஆளுக்கு முன்னூறு ரூபாப்படி வானொன்றைப் பேரம் பேசுவது கேட்கிறது. என்னப்பா இது, முப்பது ரூபா தானே பஸ்ஸிற்கெனக் கூறியபடி பலர் இனியும் காத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

அப்படிக் காத்திருக்க இனி சிவசோ திக்கு முடியுமா....? அவனுக்காக அரசியல் வேலைகள் ஆயிரம் மலை போலக் குவிந் திருக்கின்றனவல்லோ....

⊡

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானம்

இந்த நாளோடு எனது
இரு நூறாவது கவிதையும்
எழுதப்பட்டு விட்டது
இதயம் குளிர்ந்திடும் மகிழ்ச்சி

கவி எழுதும் வரலாற்றில்
கற்றுக் கொண்டவை எல்லாம்
கண் முன்னே விரிகின்றன

முதல் கவிதையில்
மண்ணை உருவாக்கியோர் கண்ணீரை எழுதினேன்
இதெல்லாம் சரி வராது
கடலை எழுது காற்றை எழுது என்றார்
கனவுலகத் தமிழ் ஆசிரியர்

சாதி மத வெறி கடந்த
காதலை எழுதினேன்
சாத்திரமே உயிர் என்றாள்
சனியன் உன்னை பிடித்ததென்றாள்
சட்டெனவே பிரிந்து சென்றாள்
பட்டணத்துக் காதலி


புரட்சி பாடல்கள் எழுதி
புகழ் பெற எண்ணினேன்
விசாரணை வரும்
வீண் வம்பு வேண்டாம் என விலகினான்
வீதி சுற்றும் நண்பன்

ஆயிரம் ரூபா சம்பளம் கேட்டு
ஐந்தாறு கவிதை எழுதினேன்
அதெல்லாம் அவர்கள் வேலை
ஆடிக் குதித்தான் அற்பருக்கு
அடங்கி நடுங்கும் அண்ணன்

எனக்கு மட்டும் விளங்கும் வண்ணம்
இரண்டு மூன்றை எழுதி வைத்தேன்;
எவருக்கு உன் கவிதை
எங்காவது தூக்கி எறி என்றான்
எளிமை பேசும் என் தம்பி

உழைக்கும் மக்களது
உணர்வுகளைப் பாடி வைத்தேன்
துணிவுடன் எழுது துயர் விலக எழுது
எல்லோரும் பாட எரி தழலாய் எழுதுக என்றார்;
என்னருமைத் தோழர்கள்

எல்லோரும் உழைத்து வாழ
இருப்பவை சமனாய் ஆக்க
இறுதி வரை எழுதிடுவேன்
இனி ஓய்வு
இல்லை என்பேன்
தோழர்கள் துணை இருக்க
தொல்லையுண்டா? பூமியிலே



இராசாத்தோட்டம்
எஸ். இராமஜெயம்

## அஞ்சலி : நாட்டுக்கூத்துக் கலைஞர் பேக்மன் ஜெயராசா



சிறந்த அண்ணாவியாரும் நாட்டுக்கூத்துக் கலைஞருமான பேக்மன் ஜெயராசா காலமானார். மரபுவழி நாட்டுக்கூத்துக்களையும் மரபுவழி சார்ந்த புதிய நாடகப் படைப்புக்களையும் மிகச் சிறந்த முறையில் கலைஞர்களுக்குப் பழக்கி அரங்கேற்றுவதில் தலை சிறந்த கலைஞராக விளங்கியவர். 1969 முதல் நாடக உலகில் கால் பதித்த பேக்மன் ஜெயராசா இறுதிவரையில் தனது கலைப்பயணத்தைத் தொடர்ந்தார். திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் தமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*தாயின் நகைகள் எல்லாவற்றையும் பெட்டியுடன் எடுத்துச் சூட்கேசுக்குள் வைக்கிறான். ஏதோ பிழை நடக்கிறது என்று ஊகித்தாலும்... தாய் மனம் தனையனைப் பிழையாக நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.*

# அந்த ஆறு வருடங்கள்

வள்ளியம்மை சுப்பிரமணியம்

"சேகர்! பரீட்சைக்குரிய பாடங்கள் யாவும் திருப்தியாகப் படித்து விட்டீங்களா?"

"ஒவ்வொரு வருடமும் முதலாம் பிள்ளையாக வருகிறனீங்கள்... இது அரசாங்கம் நடத்துகிற பரீட்சை. ஓ லெவலிலும் திறமாகப் பாஸ் பண்ணினனீங்கள். இதிலும் திறமான றிசல்ட் எடுத்து யூனிவசிற்றிக்குப் போக வேணும். தகப்பன் இல்லாத பிள்ளையைத் தாய் எவ்வளவு கவனமாக வளத்திருக்கிறா என்று எங்கடை ஊர்ச்சனங்கள் மூக்கிலே விரல் வைத்து வியந்து பாராட்ட வேணு மடா" என்று சரஸ்வதி சொன்னதும் "அம்மா! உங்கடை நம்பிக்கைக்குப் பாத்திரமாகத்தான் நான் எப்போதும் இருப்பேன். அதிலை உங்களுக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம்" என்று சேகரும் கூறினான்.

சரஸ்வதி ஒரு இளம் விதவை. கணவன் மூர்த்தி அரசாங்க வைத்தியசாலையில் ஆண் தாதியாக வேலை செய்தவர். அவர் விபத்தொன்றில் சிக்கி... இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமாகிவிட்டார். அவர் மூலம் கிடைத்த ஓய்வூதியம் சரஸ்வதிக்கும், சேகருக்கும் உண்ண உடுக்கக் குறைவின்றி வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. 'கல் வீட்டுச் சரஸ்வதி' என்று தான் உறவும், ஊரும் அவளை அழைப்பார்கள். அவளது பெற்றாருக்கு அவள் ஒரேயொரு மகள். மூர்த்தி எட்டுப் பேருடன் பிறந்தவர். குடும்பத்தில் கடைசிப்பிள்ளை. இரண்டு குடும்பமும் விவசாயக் குடும்பந்தான். இப்போ சரஸ்வதிக்குத் தனது சீதன வயலுடன்-கணவன் மூலம் கிடைத்த வயலையும் பராமரிக்கும் பொறுப்பு வந்துவிட்டது. மூர்த்தியின் மூத்த சகோதரங்கள் வெளிநாடுகள் சென்று விட்டதால் பெற்றோர் பராமரித்த முதுச வயல் அவரது கைக்கு வந்தது.

வருடாந்தச் சோற்றுக்கு வழிகாட்டும் வயலை சம்பளத்துக்கு ஆள் வைத்து தானும் ஒரு ஆளாக நின்று பராமரித்து வருகிறாள். அவர்களது குல தெய்வம் அம்மாளுக்கும் மாதந்தோறும் நைவேத்திய. பொங்கலுக்கு உரிய பாகத்தை அரிசியாகக் கொடுப்பதில் ஒரு மன நிறைவு அவளுக்கு. 'உழைப்பளவிலும் ஒறுப்பளவு சிறந்தது' என்பதற்கமையவே தனது வாழ்க்கையை ஓட்டி வருகிறாள். மகனையும் வீட்டுத் தோட்ட வேலைகளிலும், வயல் வேலைகளிலும் ஈடுபடுத்தி நல்ல தேகபலம் உள்ளவனாகவே வளர்த்திருக்கிறாள். அவனும் தாய் சொல்லைத் தட்டாத நல்ல மகனாகவே வளர்ந்து வருகிறான்.

ஏ. எல். பரீட்சையும் முடிந்து விட்டது. வீட்டிற்கு அண்மையில் கம்பியூட்டர் படிப்பு நடப்பதாகக் கேள்விப்பட்டு - அதில் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கத் தொடங்கியிருக்கிறான். அவனுடன் ஆண்களும், பெண்களும் அநேகர் படிப்பதாகக் கூறியிருக்கிறான். அங்கு படிக்கச் சென்ற பின்னர் மகனின் போக்கில் அதாவது அடிக்கடி தலை சீவுதல், கண்ணாடி முன் நிற்றல், இரண்டு நாட்களுக்கொரு முறை முகசவரம், பவுடர் பூசுதல், வாசனைத் திரவியம் உடுப்புக்கு மேலே விசிறல்' இவற்றைப் பார்க்க தாய் மனம் பெரிய சந்தோஷத்தில் மூழ்கியது. அவன் தன்னை அழகுபடுத்துவது தாய்க்குப் பெரிய சந்தோஷ மும், பூரிப்புந்தான்.

'என்ரை வடி வான குஞ்சு' என்று மனதுக்குள் பெரிய திருப்தி! தகப்பனில்லாத பிள்ளை. தரக் குறைவாகப் போகவிடமாட்டேன். கண்ணும் கருத்துமாக வளர்க்கிறேன். வளர்ப்புச் சரி யில்லை என்று ஊருலகம் சொல்ல இடம் தர மாட்டேன்" என்று நினைத்துக் கொள்வாள்.

ஒருநாள் நள்ளிரவு சிறுநீர் கழிப்பதற்காக திடீரென கண்விழித்த சரஸ்வதி, பக்கத்தில் படுத்திருந்த சேகர் எங்கே? எனத் தேடினாள். அவன் வீட்டு அலுமாரிக்குள் ஏதோ பொருட் களை எடுத்து எடுத்து வெளியே உள்ள சூட் கேசுக்குள் வைத்துக்கொண்டிருந்தான். 'என்ன ஏது என்று போய்ப் பார்த்தால்... தாயின் நகைகள் எல்லாவற்றையும் பெட்டியுடன் எடுத்துச் சூட்கேசுக்குள் வைக்கிறான். ஏதோ பிழை நடக்கிறது' என்று ஊகித்தாலும்... தாய் மனம் தனையனைப் பிழையாக நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

"ஓம் சேகர். திருடர்கள் நடமாட்டம் கூடுதலாக இருப்பதனால் நகைகளை பாங் கின்ரை லொக்கருக்குள்ளை வைப்பம், நாளைக் காலையில் நாங்கள் இரண்டுபேரும் போவம்" என்றாள். ஒரு கணமேனும் திருட்டு யோசனையே இல்லாது வளர்ந்த குழந்தைதான் என்றாலும், பருவ வயதில் தோன்றிய காதல் ஒன்றினால்- சற்றுத் தடுமாறி விட்டான். தான் செய்ய நினைத்த தவறைக் கருத்தினில் எடுக்காத தாயின் பரிவு சேகரை அழவைத்துவிட்டது.

"அம்மா நான் ஒரு பெரிய தவறு செய்ய இருந்தேன். தெய்வம் போல என்னைத் தடுத் தாண்டு கொண்டுவிட்டீர்கள். பெத்த மனம் பித்து. பிள்ளை மனம் கல்லுத்தானம்மா" என்று கூறிய சேகர் தாயைக் கட்டிப்பிடித்து "ஓ" வென்று அழத் தொடங்கினான்.

"ஐயா, நீ அழாதே, நான் ஒரு பிழையாகவும் எடுக்க மாட்டேன். என்ரை பிள்ளையை எனக்குத் தெரியாதா? கன்று துள்ளி பசுவிலே விழுகிறதாம்" என்று மகனின் கண்ணீரைத் துடைத்து விட்டாள். மறுநாள் வங்கிக்கு இருவரும் சென்று லொக்கருக்குள் நகைகளை வைத்துவிட்டுத் திறப்புடன் வீடு திரும்பினர்.

தனது மகன் சேகருக்குத் 'தனியப் பள்ளிப் படிப்பு மாத்திரம் தான் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததல்லால்... உலகப் படிப்பு அதாவது சமூக முன்னேற்றத்துக்காக வாழ்ந் தவர்களைப் பற்றியோ விடுதலைக்காக உழைத்த வர்களைப் பற்றியோ, தாம் கொண்ட கொள்கை - ஆயுள் பரியந்தம் பிரமச்சரியத்தை மேற் கொண்ட மனிதத் தெய்வங்கள் பற்றியோ அறிந்து கொள்ளும் வாய்ப்பைத் தான் ஏற் படுத்திக் கொடுக்க வில்லை'யென்று தாய் மனது அழுதது.

அவர்களது வீட்டிற்கு அண்மையில், 'சத்திய மனை' ஒரு நூலகம் ஒன்று இயங்கி வருவது தெரியும். அங்கு போகவேண்டும். 'அரிய, பெரிய் தலைவர்களது வாழ்க்கை வரலாறு, அவர்களது இலட்சியங்களைப் பற்றிய ஆவலி ருந்தும், அதற்குரிய நேரம் இப்போதான் வந் திருக்கிறது' என்று மகனையும் கூட்டிக்கொண்டு - தினமும் நாலு தொடக்கம் ஆறுமணி வரை அங்கிருந்து - தேவைப்படும் நூல்களை வாசிக் கத் தொடங்கினர். தங்களையும் வாசகர் வட்ட அங்கத்தினராகப் பதிந்து கொண்டு தமது அங்கத் துவப் பத்திரத்துடன் வாசிக்க ஆரம்பித்தனர்.

அங்கே சமயம் முதல் அரசியல், இலக்கியம் ஈறாகச் சகல நூல்களும் நிறையவே காணப் பட்டன. ஒரு சிலர் வாசித்து முதலில் திருமுருக கிருபானந்த வாரியாரின் சரிதம், இரண்டாவது யாழ் நூலை எழுதிய விபுலானந்தர். அடுத்தது சைவ நெறி தழைக்க எழுதிய ஆறுமுகநாவலர் போன்றோரின் நூல்களை வாசித்தபின் இலக்கிய அரசியல் நூல்களையும் எடுத்து வாசிக்க ஆரம் பித்தனர். சரஸ்வதி மகனுடைய சாட்டில் தான், தானும் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து வாசிக்க ஆரம்பித்தாள். அவளுக்குப் பள்ளிப் பருவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலேயே சமய சம்பந்தமான புத்தகங்களை வாசிக்கிற வாய்ப்புக் கிடைத்தது. சமூகப் பற்றாளர்களின் நூல்களோ, வேறு இலக்கிய வாதிகள் எழுதிய நூல்களோ வாசிக்கிற வாய்ப்பே கிடைக்கவில்லை. மகன் சேகருடைய சாட்டில், தான் வாசிக்கவும் இரவு நேரங்களில்... அந்த வாழ்ந்து மறைந்த.. அறிஞர்களின் வாழ்க்கை பற்றிக் கலந்து கதைக்கவும் வாய்ப்புக் கிடைத்தது.

'இப்போ சேகருக்குப் பதினேழு வயது தான் நடக்குது. அவன் தனது பட்டப் படிப்பை முடித்து - ஒரு வேலையில் சேரும் வரை அவனை இல்லறத்தில் இறக்கிவிட முடியாது. சகோதர பலமற்ற தனிப்பிள்ளை. தன் சொந்தக் காலில் நின்று வாழ்க்கையை நடாத்த - மனத் திண்மை, உடற்பலம், பொருளாதார வசதி, இவை யாவற்றையும் அவன் பெற்ற பின்னரே அவனைக் குடும்ப வாழ்வில் ஈடுபட வைக்க வேண்டும்' எனத் தனது மனதுக்குள் சரஸ்வதி கூறிக் கொண்டாள்.

ஒரு நாள் சேகரும் கேட்டான். "அம்மா, என்னோடு படிக்கிற பிள்ளை, ரஞ்சனி என்று பெயர். அவ வையும் இங்கை வந்து... இந்தப் புத்தகங்களை வாசிக்கச் சொல்லலாமா?" என்று கேட்டான். "ஓ! தாராளமாக அறிவுப்பசி... தேடல் உள்ளவர்கள் சகலரும் இங்கு வரலாம் தானே" என்று சரஸ்வதி சொல்லும்போதே அவ ளது உள் மனம் 'எப்ப உனது வாயால் இப்படி ஒரு அனுமதி கேட்பாயென்று காத்திருந்தேனடா மகனே' என்று புளகாங்கிதம் கொண்டது.

அறியாப் பருவத்தில்... மனதில் ஏற்பட்ட சிறு சஞ்சலத்தால், தாயை அறியாமல்- வீடு விட்டுப் புறப்பட்டுப் போக இருந்த சேகரை நுண்ணறிவால் உணர்ந்து கொண்ட தாய்... தனது அருமைக் குழந்தையைச் சமூகத்தின் மத்தியில் தலைநிமிர்ந்து நடக்கக் கூடிய அறிவாளியாக்க வேண்டிய ஒரு கட்டாயத் தேவை இருந் ததல்லவா?

இலக்கிய மேதைகளின் நூல்களுடன் சுதந் திரப் போராட்ட... அதாவது சுபாஷ் சந்திரபோஸ், மகாத்மா காந்தி, நேருஜீ, ராஜாஜி போன்ற மேதைகளின் நூல்களும் வாசிக்கையில் - ராஜாஜியின் மகள் லஷ்மியை - காந்திஜீயின் மகன் தேவதாஸ் காந்தி விரும்பியதையும்... அதனை அவர்கள் நேருஜீயிடம் தெரிவிக்கையில் - நேருமாமா அவர்களுக்குக் கூறிய அறிவுரைகள் அதாவது, "நீங்கள் இருவரும் ஐந்து வருடங் களுக்கு ஒருவரைச் சந்திக்கவோ, கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளவோ கூடாது, அந்த ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பின்னர் என்னிடம் வந்தால் - நான் உங்கள் பெற்றாரிடம் அனுமதி பெற்று - உங்கள் திருமணத்தை நிறைவேற்றி வைப்பேன்" என்று கூறி அவர்களை ஆசீர்வதித்து அனுப்பி வைத்ததையும் அவர்கள் வாசித்தார்கள்.

மார்க்ஸிஸ கருத்துக்களைப் படைத்த 'மார்க் ஸின் வாழ்க்கையையும், அவரது வாழ்க்கைத் துணைவியாக வாய்த்த ஜென்னியின் ஒத்து ழைப்பும், அவர்களது வாழ்க்கையின் வறுமைத் தாண்டவத்திற்கு கைகொடுத்து உதவிய 'ஏங் கல்ஸ்' என்ற உற்ற நண்பரின் பொருளாதார உதவியையும் வாசித்து அறிந்து கொண்டார்கள். உலகுக்கு தேவையான - அதாவது ஆக்க சக்தியை உருவாக்கும் தொழிலாள வர்க்கத்துக்கு அவர்களது உரிமைகள், தேவைகளுக்கான போராட்ட வழிவகைகள் இவற்றை எழுத்தில் வடித்தவர். அந்த எழுத் துலகுள் மூழ்கியிருந்த மேதையின் வீட்டிற்குள் வறுமைப்பேய் தாண் டவமாடியது. 'ஏங்கெல்ஸ்' நண்பன் உரிய நேரத்தில் உதவாவிட்டால் புதிய சந்ததிக்கு 'மாக்ஸிஸம்' என்ற தத்து வத்தையே வாசித் தறியும் வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்... இவற்றையும் இராம கிருஷ்ணருடைய கொள்கைகளை அமெரிக்கா - சிக்காக்கோ சென்று தனது பிரசங்கத்தினால் மக்கள் மன தையே கவர்ந்து இன்று உலகம் முழுவதும் இராமகிருஷ்ண மிஷன் பள்ளிகள் வயோதிபர் விடுதிகள் நோயாளர் களைப் பராமரிக்கும் நிலையங்கள் உலகம் முழுவதும் பரவி யிருப்பதையும் வாசித்தறிந்தனர்.

அன்னை தெரேசா அம்மையார் ஐரோப்பிய அல்பேனியா நாட்டில் பிறந்தாலும் கல்கத்தா நாட்டிற்கு வந்து தொழுநோயால் பீடிக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் துடிக்கும் மக்களுக்குத் தன் கையால் சேவை செய்த – அந்தத் தாயின் தன்னலமற்ற சேவையைக் கூட நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பையும் தந்து தமது அறிவுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைத் திறக்கச் செய்த அன்னை சரஸ்வதியை மானஸீகமாக வாழ்த்தினர்.

இப்படியே ஐந்து ஆண்டுகளின் ஓட்டத் துடன் சேகர், ரஞ்சனி இருவரினதும் பட்டக் கல்வியும் யாழ் பல்கலைக் கழகத்துடன் நிறைவு பெற்று ஆறாம் வருடம் ஆசிரிய நியமனமும் கிடைத்து விட்டது.

இருவருக்கும் ஆரம்ப நியமனங்கள் கஷ்டப் பிரதேசமான மலையகத்தில் கிடைத்தது. அங்கு ஐந்து வருடங்கள் கடமையாற்றிய பின்னர்தான் பிறந்த ஊருக்கு மாற்றல் கிடைக்கும். ஆகவே, சரஸ்வதி தனது தாய்மைக்குரிய பொறுப்பைக் கையில் ஏற்றுக் கொண்டார். இந்த இடைப்பட்ட இவ் வளவு காலமும்... சேகர் நகைகள் யாவற் றையும் எடுத்து மறைத்து வைத்திருந்தது பற்றியோ... அன்றி தபாற்கந்தோர் சேமிப்புப் புத்தகத்துடன் வங்கிப் புத்தகத்தையும் மறைத்து வைத்தமை பற்றியோ ஒரு வார்த்தை கூடப் பேசவோ, தனக்குத் தெரியுமென்று காட்டிக் கொள்ளவோ விரும்பவில்லை. அந்த அளவுக்கு கண்ணுக்குள் எண்ணெய் விட்டது போல, தான் வளர்ந்த குழந்தை தன்னை பிறந்த வீட்டை மறந்து- புறப்பட நினைத்தால் அது 'தாயின் வளர்ப்பு பிழை' என்று தான் ஊரார் தூற்றுவர், சரஸ்வதி ஊரவர்களின் நன்மதிப்பை இன்றல்ல. என்றும் தக்க வைத்துக் கொண்டாள். கடந்த ஆறு வருடங்களையும் ஆறு யுகமாகக் கழிக்க அவள் எடுத்த நடவடிக்கைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

தனது மகனின் திருமணத்தை தைப்பூச நன்நாளிலே நடாத்த சம்பந்தி வீட்டாரின் ஒத்துழைப்போடு விவாக அழைப்பிதழும் எல் லோருக்கும் அனுப்பிவிட்டாள். இத்தனையும் ரஞ்சினி - சரஸ்வதியின் உறவுமல்ல; சாதியு மல்ல. ஆகவே அந்தப் புதுமைத் திருமணத்திற்கு நாங்கள் எல்லோரும் சந்திப்போம் வாருங்கள்.

அஞ்சலி :

## மார்க்ஸிய சிந்தனையாளர் எஸ். என். நாகராஜன்



*இந்தியாவில் மூத்த வேளாண்மை அறிஞர்களில் ஒருவரும் மார்க்ஸிய சிந்தனையாளருமான எஸ். என். நாகராஜன் காலமானார்.*

*எஸ். என். நாகராஜன் 1927-இல் கோவை, சத்தியமங்கலம் என்ற ஊரில் பிறந்தார். வேளாண்மையில் முனைவர் பட்டம்பெற்றார். இந்திய வேளாண்மை ஆய்வுக்கழகத்தில் முதுநிலை அறிவியலாளராக பணியாற்றினார். பசுமைப் புரட்சியை எதிர்த்து ஆய்வகத்தில் இருந்து வெளியேறினார். தன்னை முழுமையாகவே ஒரு மார்க்சிய களப்பணியாளராக ஆக்கிக்கொண்டார்*

*எஸ்.என்.நாகராஜன் 'புதிய தலைமுறை' என்ற சிற்றிதழை முன்னின்று நடத்தினார். மார்க்சிய ஆய்வில் ஒரு மாணவர் வரிசையை அவரால் உருவாக்க முடிந்தது. ஞானி அவரது நண்பரும் மாணவருமாக இருந்தார். எஸ். என். நாகராஜன் கீழைமார்க்சியம் என்ற கருதுகோளை முன்வைத்தார். மார்க்சியம் அடிப்படையில் ஒரு ஐரோப்பிய சிந்தனையாகவே புரிந்துகொள்ளப்பட்டது என்றார். அதை ஓர் மேலைநாட்டு அறிவியல் சிந்தனையாக அணுகாது, அதை மெய்யியல் நோக்கில் அணுகவேண்டும் என்றார். அன்பில்லாத சித்தாந்தம் அழிவை நோக்கிச்செல்லக்கூடும் என்று சொன்ன நாகராஜன் கீழைநாடுகளுக்குரிய ஒரு மார்க்சியத்துக்காக வாதிட்டார். கீழை மார்க்சிசம், கம்யூனிச விடுதலையின் இலக்கணம், தமிழகத்தில் வேளர்ண்மை, மார்க்சிசம் கிழக்கும் மேற்கும், அழிவின் தத்துவம், கிழக்கு வெல்லும், வாழும் மார்க்சு, ஆயுதப் போராட்டத்தால் இனி உலகைக் காப்பாற்றமுடியாது எனப் பலநூல்களை எழுதியுள்ள இவரது நூல்கள் விமர்சன நோக்கில் அணுகப்பட வேண்டியன.*

*தாயகம் இதழ் தனது அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்கின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியல்ல இவர் வாழ்வு

நம்முன்னோர் செய்பாவம் நாங்கள் சுமப்பதுபோல்...
நம்பாவம் தன்னை நம்சேய்கள் சுமப்பதுபோல்...
நம்சேய்கள் பாவத்தை
அவர் சேய்கள் சுமப்பதுபோல்...
யார்யாரோ செய்தபழி
யாரோ பொறுப்பதுபோல்...
யார்யாரோ செய்தவினை
யாரோ அறுப்பதுபோல்...
நம் வீட்டுக் கழிவுகளை,
நமது அழுக்குகளை,
நம் அசண்டையீனத்தால்
நாம் போடும் குப்பைகளை,
நம் பொறுப்பிலாக் குணத்தால்
நாம் வீசும் ஊத்தைகளை,
வீதிகளைக் கூட்டி...
வீடு வீடாய்த் தேடி
வாய்க்காலில் இறங்கியே வாரி...
சாக்கடையில்
மூழ்கி... மலக்குழியில் முங்கி...
கைவைக்க
ஏலாத நாற்ற, சகிக்க இயலா வீச்ச,
உக்கிப் புழுத்த உணவு குப்பை சேறுகளை
தக்கவாறு தம் மனச் சக்தியால்
மிகச் சகித்து
அகற்றும் பிறவிகளும்...
ஆம் மனிதப் பிறவிகள் தாம்...
அகத்தில் பதிப்போம்!
அவர்களுக்கும் ஐம்புலன்கள்,
ஊத்தை அருவருப்பு உணர்வு,
அரியண்ட எண்ணம்,
நாளுழைப்பினிலும்
நாற்ற உழைப்பினிலும்
வாழவேண்டும் நல்லதொரு வாழ்வென்னும்
தொடர் ஏக்கம்,
ஆசா பாசங்கள்,
அன்றாடச் சந்தோசம்,
உள்ளதென் றுணர்வோம்!

உயிர் பறிக்கும் விச ஜந்து,
கொள்ளை நோய்க் கிருமி,
கூடாத நச்சு வாயு,
உள்ள... இடம் 'தூர்த்து' உயிர்கொடுத்து
அவர் வேலை
செய்தகன்று செல்ல...
சிறிதும் கவலையற்று
பெய்கின்றோம் கழிவு குப்பை மழை;
அவரின் துயர் எண்ணோம்!
கழிவோடு அவர்மாய...
கழிவு நிதம் வீசுகிற
'கழிவுகள்' நாம் என என்று தெளிவோம்?
கழிவகற்றும்
தொழிலின் வலிபுரியோம்;
துப்புரவுப் பணியர்க்கு
உதவாத போதும் உபத்திரவம் செய்யாத
விதம்... நாம் நடக்கவேணும்...
இனி நாம் பழகிடுவோம்!
'குப்பைக்காரர் அவர்கள் அல்ல'
எம் கழிவழுக்குக்
குப்பைகளை அள்ளுபவர்!
'நாங்கள் தாம் உண்மையான
குப்பையர்கள்' என்றுணர்வோம்!
நம் 'குப்பைத் தனம்' களைந்து
எம் வாழ்வு நாறாமல் இரவு பகல்
பணிசெய்து
தம்மை அழுக்காக்கி
அயலை அழகாக்குவோரை
மதிப்போம்;
அவர் உடல் மன வலிகளைப் புரிவோம்!
விதியல்ல இவர் வாழ்வு...
விளங்கி உதவிடுவோம்!

ந. ஜெயசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மழைய பார்த்து ஒன்னும் சரி வராது. இன்னக்கி மட்டும் தான் மழை பேயுற மாதிரி... அடுப்புக்குள்ள குந்திக்கிட்டு இருக்காம வெளிய வாங்க. நேரம் ஏழு மணி....*



# தீர்மானம்

சிவ. இராஜேந்திரன்

ஆறுமுகத்தின் மன நிலை என்றுமில்லாதவாறு தடுமாற்றம் மிக்கதாக இருந்தது. மகள் ரஞ்சனி கூறிய வார்த்தைகள் அலவாங்கு ஆழமாக இறங்கியது போல் இருந்தது. அவனைக் கண்டவுடன் ஓடோடி வந்து கழுத்தைக் கட்டிப்பிடித்து, கொஞ்சும் மொழியில் கதைகள் சொல்லும் இவள் இன்று பெரிய ஆளாகி விட்டாளோ? அவளுக்கென்ன பன்னிரெண்டு வயது ஆகின்றது. ஆனால் கொஞ்சம் காலமாக கொள்கை பற்றியெல்லாம் பேசுகிறாள். அவளது டியூசன் டீச்சர் பற்றி அடிக்கடி சொல்லுவாள். அவர் ஒவ்வொரு நாளும் பொது விடயங்கள் பேசுவாராம். மலையகத் தொழிலாளர் போராட்டங்கள், தியாகங்கள் கட்சி தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை பொது வாழ்க்கை பற்றியெல்லாம் புட்டுப்புட்டு வைப்பாராம். ஆந்த டீச்சர் தான் புள்ள மனச மாத்தி வச்சி இருப்பாரோ?

ஆறுமுகத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை.

மகள் சொன்னதை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தான்.

"நீங்க அநியாயத்துக்கு ஆதரவா இருக்கிறது எனக்குப் புடிக்கல... அப்பா... நெனச்சி பார்த்தா வெக்கமா இருக்கு... இனி மேலும் இப்புடி நடந்துக்கிட்டா.... வீட்ட விட்டு ஓடிப் போயிருவேன்... ரெண்டு வருசமா எவ்வளவோ சொல்லிப் பார்த்துப்புட்டோம் நீங்க திருந்துற மாதிரி இல்லையே"

மகள் ஏன் இப்படி நினைக்க வேண்டும்? நான் என்ன அநியாயம் பண்ணி விட்டேன்?

மகன் கவிசான் ஏற்கனவே பேசிய விடயங்களும் ஞாபகத்துக்கு வந்தன.

"அப்பா நம்ம நெலமய நெனச்சிப் பாருங்க... அவன் சொல்லுறான் இவன் சொல்லுறானு... நம்ம நடந்துக்க முடியுமா? சாராயத்த போத்த போத்தலா குடுக்குறானுங்கனா... காரணமில்லாம இல்லயே? தேர்தல் வந்தா சாராயம்... மேதினம் வந்தா சாராயம்... நம்ம கஸ்டப்பட்டு ஒழைச்ச பணத்துல குடிக்கிறது வேற.. அதுவும் வீட்டுக்கு கொண்டு வந்து கொஞ்சமா குடிங்க. நாங்க கேட்க மாட்டோம். ஒங்க அப்பா தானே தலவரு, அதுவும் கேவலம் கெட்ட கட்சிக்குன்னு...எத்தன பேரு கேட்குறாங்க. எனக்குனா வெக்கம் தாங்க முடியல" பல முறை சொல்லி விட்டான். தலைக்கு ஒசந்த புள்ள சும்மா சொல்ல மாட்டான் தானே.

சம்சாரம் சரஸ்வதி கூட சொல்லிப்புட்டா.

"திருட்டுப் பயலுகவுட்டு சாராயம் வேணாம்.... சந்தாவையும் நிப்பாட்டிப் புடுவோம்.... அநியாயத்துக்கு ஏனுங்க தொண போகனும்... மலையில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட பேசிக்கிட்டாங்க... ஒத்த கட லெட்சுமி கூட கெட்ட ராங்கியில ஏசுனிச்சி...ஆயிரம் ரூவா பத்தி... அம்மாவ இழுத்தது பத்தி... எல்லாரும் கோவமா பேசிக்கிட்டாங்க எனக்கும் வெட்கமா போச்சி. நானும் ஒரு பொம்பள தானே... யோசிச்சி பாருங்க... அடுத்தமாசத்தில இருந்த சந்தாவ நிப்பாட்டிப் புடுவங்க...பொறவு நல்ல சங்கம் வந்தா பார்ப்போம்... சொல்லுறேன்னு கோவப்படாதீங்க... இந்த தலவரு பதவி வேணாம்... விட்டு வீசுங்க"

ஆறுமுகத்துக்குத் தூக்கமே வரவில்லை. குற்ற வாளி கூண்டில் நிற்பது போல இருந்தது. என்ன தான் குடி மயக்கம் என்றாலும் மனுசனுக்கு புத்தி வருவது இயல்பு தானே.

அப்படினா... நான் வீட்டுல இல்லாதப்ப... இவுங்க ஒன்னு சேர்ந்து பேசி இருக்கணும்... இல்லாட்டி மகள் ரஞ்சனி இப்புடி பேசி இருக் காது.... சின்ன புள்ளைக்கு இந்த விசயமெல்லாம் லேசுல தெரிய வராது தானே..?

"அநியாயத்துக்கு ஆதரவா இருக்கிறது எனக் குப் புடிக்காது..." அவள் கிட்ட வந்து சொல்வது போல இருந்தது.

புரண்டு படுத்தான்.

லேசான லைட் வெளிச்சத்தில் அவனது அப்பாவின் புகைப்படம் தெரிந்தது. அருகில் அம்மா... நேர்மைக்கு முன்னுதாரணம் அப்பா.

"பஞ்சப்படி பதினேழு அம்பத காட்டிக் குடுத்த சங்கமுடா... நீயா ஒரு சங்கம் அமைச்சி நம்ம மக்களுக்கு சேவ செய்ய பாரு... இல்லாட்டி சும்மா இரு... இனி சொல்றதுக்கு ஒன்னும் இல்ல... சாராயம் என்னா சாராயம்... நெனச்சிப் பாரு... கொள்க வேணும்... நேர்ம வேணும். அந்த காலத்துல சங்கத்த வளர்க்க எவ்வளவு கஸ்டப்பட்டோமுனு தெரியுமா? இன்னக்கி எல்லாமே வீணாப் பேச்சி... நீ இப்புடி இருக் காத ஆறுமுகம்... நம்ட குடும்பத்துக்குனு ஒரு கௌரவம் இருக்குதில்ல."

நெஞ்சு வலி வந்து அப்பா செத்துப் போன துக்கு முன்னர் பல தடவை சொன்னவை... மீண்டும் ஒரு முறை கோபத்தோடு சொல்வது போல இருந்தது.

அப்பாவின் ஆவி வந்து புள்ளக்கி சொல்லி குடுத்திருக்குமோ?

அவனை அறியாமலே உடல் நடுங்கியது.

சின்ன மல்லியப்பூ தோட்டத்தில் வாழும் ஆறுமுகத்துக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் கொழும்பில் கலியாணம் முடித்து அங்கேயே தங்கி விட்டான். "தோட்டங்கள விட்டுப்புட்டு கொழும்புக்கு வந்து சேரணும். பணக்காரனா வாழனும" என சொல்லுற கூட்டத்தோட சேர்ந்த 'மோடையன்' அவன். கொரோனா பல பாடங்களை அவனுக்கு படித்துக் கொடுத்திருந்தது. திருந்திய பாடு இல்லை.

அடுத்தவன் ரமேஸ் உயர் தரம் படிக்கின்றான். இளம் வயதினரை பண்பாடு மிக்கவராக மாற்ற வேண்டும் என்ற கொள்கை கொண்டவன். தாத்தாவின் வழி செல்பவன்.

அம்மாவைப் போல ஒரு பெண் பிள்ளை வேண்டும் என்ற ஆசை நீண்ட காலத்துக்குப் பின்னரே நிறைவேறியது.

"ஒங்க அம்மா மாதிரியே இருக்குது... தல முடிய பாருங்க... மூக்க பாருங்க... வாய பாருங்க..."

பலரும் சொன்னது அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. அம்மாவிடம் பால் குடிக்க மட்டும் செல்லும் மகள், பெரும்பாலான பொழுதுகளில் அப்பாவிடம் தான்.

"அப்பா..." என்று அவள் கூப்பிடுவது கூட அவனது அம்மா சரஸ்வதி அழைப்பது போல தான் இருக்கும்.

"தலைவரே ஒரு விசயம் சொல்லனும்.... இந்த முறை கேள்வி பேப்பர் உங்களுக்கு மிகவும் விருப்பமானவர் யார்? என்ற கேள்விக்கு ஒங்க மக ரஞ்சனி மட்டும் தான்... அப்பா ன்னு எழுதி இருந்திச்சு நீங்க குடுத்து வச்சவரு தான்.." என்று ரவி சேர் சொன்னது கூட ஞாபகத்துக்கு வந்தது.

இவ்வளவு அன்பான புள்ள வீட்ட விட்டு ஓடிப் போயிருவேனு... சொல்லிப் புடிச்சே...

மீண்டும் மீண்டும் அது தான் ஞாபகத்துக்கு வந்தது.

இவ்வளவு காலமாக ஒரே கட்டிலில் அவ னுக்கருகில் படுத்து தூங்கும் ரஞ்சனி இன்று அம்மாவுக்கு பக்கத்தில்...

"பொம்பள புள்ள வயசு கூட கூட அப்பாகிட்ட இருந்த வெலகித் தான் போகும்..." ஆறுமுகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டான்.

மே தின நிகழ்ச்சிக்கு எங்கே போவது... இது தான் பிரச்சினை... ஒரு வாரமா இது 'பத்தி' தான் பேச்சு....

சின்னவன் கொஞ்ச காலமா செவப்பு புத்த கங்கள வாசிக்கத் தொவங்கிட்டான். அவனது நடவடிக்கையிலும் பெரிய மாற்றங்கள் தான்... நேரத்துக்கு எழும்புறது... படிக்கிறது.. எழுதுறது... நாடகம் நடிக்கிறது....

போன ஞாயித்துக் கெழம....ஒலகம் முழுவதும் மேதின நிகழ்ச்சிய ஏன் நடத்துறாங்கன்னு.... பெரிய வெளக்கம் குடுத்தான். நம்ம ஆளுகளுக்கு சாராயத்த வாங்கி குடுத்து...ஆட்டமா ஆடு றானுங்க... தொழிலாளிக நெலமய பாருங்க.... அவனுங்கவுட்டு வாழ்க்கய பாருங்க.... கொளவி கொட்டி நம்ம மாமியும் செத்துப் போச்சி.... இவனுங்க வாய தொறந்தானுங்களா?

ஏதோ ஆறுமுகத்துக்கு படும்படி சொன்னது போல இருந்தது. நல்ல நேரமோ என்னவோ... அன்னக்கி குடிக்கவே இல்ல இல்லாட்டி குடும்பத்தில் பெரிய சண்டையாக போயிருக்கும்...

சின்னவன் தான் மகளுக்கு சொல்லிக் குடுத்து இருப்பானோ? அவன் தான் இப்ப பெரிய மேடை பேச்செல்லாம் பேசுறதா சொல்லு றாங்களே... ச்சீ சும்மா சந்தேகப் படலாமா...

அவன் சொல்லுறதுலயும் ஞாயம் இருக்குது தானே? தலையைச் சொறிந்தவாறே யோசித்தான்.

மனம் இருப்புக் கொள்ளவில்லை.

போன வருசம் மேதினத்துக்கு 'தண்ணி' கொஞ்சம் கூடி தான் போயிருச்சி... வாந்தி ... மூனு நாளா வயித்தால போனது...எல்லாம் புள்ளைகளுக்கு புடிக்காம போனது... மூனு நாளா பேசாம இருந்தது... மகள் ராத்திரி கோவமா ஏசுனது எல்லாமே இன்று நடந்தது போல தெரிந்தது. ஒரு வருசமா இந்த விசயம் பத்திக் கிட்டு தான் இருக்குது.

அதுக்கு முதல் வருசமும் குடி தான்... பஸ்ஸில ஏறுனதுல இருந்து குடி தான்.... சோத்து பார்சலும் நாறிப் போச்சி... உருண்ட போத்த சாராயம்.... இப்ப நெனைச்சாலும் நெஞ்சி எரிவது போல இருந்தது.

"தேர்தல் வந்தா சாராயம்.... மேதினம் வந்தா சாராயம்... குடிச்சிப் புட்டு ஆடுறதா மேதினம்.... மத்த நாட்டுல எல்லாம் எவ்வளவு சிறப்பா நிகழ்ச்சி நடத்துறாங்க... தொழிலாளிகவுட்டு பிரச்சினய பேசுறாங்க.... நம்ம நாட்டுலயும் அர்த்தமுள்ள மேதினம் நடக்குது தானே.... இவனுங்கள பாருங்க... போஸ்டருல தொழிலாளி படம் போட்டிருக்கான்னு பாருங்க... நம்ம ஆளுகவுட்டு பிரச்சின எழுதி இருக்குதானு பாருங்க..." போன வருசமும் சின்ன - மகன் இதை தான் சொன்னான்.

சின்னவன் சொன்னதிலும் ஞாயம் இருக்குது தான்....

நேற்றும் கவ்வாத்து காட்டில் தேத்தண்ணி குடித்த போது பலரும் பேசிக் கொண்டது நினைவுக்கு வந்தது. "வெலவாசிய பாருங்க.... பட்டினியா கெடந்து சாகப் போகிறோம்.... பொணப்பெட்டி வெலயும் கூடிப் போயிருச்சி.... பொதைக்கிறதுக்கு எடமில்ல... தலவரே இந்த தடவை மே தினம் அது இதுன்னு வந்துடாதீங்க... நாங்க வரமாட்டோம்... முடிஞ்சா நம்ம தோட் டத்து பந்தடி களத்துல மேதின நிகழ்ச்சிய நடத்து வோம்... நம்ம.. பிரச்சினய பேசுவோம்... திருட்டுப் பயகவுட்டு மேதினத்துக்கெல்லாம் வர மாட்டோம்"

மனம் இருப்புக் கொள்ளவில்லை. கட்டிலி லிருந்து சத்தமில்லாமல் கீழே இறங்கி பார்த் தான். எல்லோரும் நல்ல தூக்கம்... மகளின் கன்னங்களில் கண்ணீர் காய்ந்து போய்... தூக்கத்திலும் கோபம்... தெரிந்தது.

"அப்பா சொல்லுறத கேளு மகே... கேடு கெட்ட பயலுகளோட சேராத... அநியாயத்துக்கு தொண போகாத..." அம்மா சொன்ன வார்த் தைகளை மகள் மீண்டும் ஒரு முறை சொல்வது போல இருந்தது.

அவனுக்கு நெஞ்சு வலிப்பது போல் இருந்தது. நீண்ட பெரு மூச்சு விட்டான். அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். இந்த ஆளுக மட்டும் அசையாமலா இருப்பார்கள்?

சத்தமில்லாமல் குசினிக்கு வந்தான். காய்ந்த மிலாறுகளை எடுத்து அடுப்பைப் பற்ற வைத்தான். யோசனை படிப்படியாக மிகுந்தது. ஒரு காட்டம் போட்டுக் குடித்துவிட்டு... மீண்டும் படுக்கையில் விழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது அப்பா... அவனை தோளில் சுமந்த வண்ணமாக சிவப்பு கொடியுடன் ஊர்வலமாகச் சென்ற காட்சிகள்... உணர்வுடன் எழுப்பிய கோசங்கள் எல்லாம் கனவாக வந்தன. அப்பா உயிருடன் வந்து விட்டாரோ?

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்.

உழைக்கும் மக்களின் உரிமைக்காக ஒன்று படுவோம்.

அவனது வாய் முணுமுணுத்தது.

தகப்பனின் வாரிசல்லவா? காலம் முழுவதும் ஏமாற்ற முடியுமா?

விடியட்டும் பார்ப்போம்.... ஏதோ ஒரு முடிவுடன் குப்புறப் படுத்தான்.

அயர்ந்து தூங்கினான்.

விடிந்தது. கண் விழித்துப் பார்த்த போது அருகில் மகள் ரஞ்சனி. இன்னும் கோபம் குறையவில்லை.

"இந்த முறையும் சாராய தலைவர் போஸ்டர் ஒட்டுவிங்களா அப்பா... காட்டிக் குடுத்தவனுங் களுக்கு சந்தா குடுப்பிங்களா...? அவனுங்கவுட்டு மேதினத்துக்குப் போவிங்களா..." என கேட்பது போல இருந்தது.

ஆறுமுகம் இல்லை என்பது போல தலையை ஆட்டினான். ஏதோ முடிவுடன் சற்று வேகமாக எழுந்து வெளியே சென்றான்.

ரஞ்சனி லேசாக கண் விழித்துப் பார்த்தாள்.

அப்பா எழுந்து போய் விட்டார். மெதுவாக எழுந்து வாசலுக்கு வந்தாள். வெளியே எட்டிப் பார்த்தாள். கக்கூசுக்கு பக்கத்தில் புகை எழும்பியது. போஸ்டர் காகிதங்கள் எரிவது தெரிந்தது.

ஓடி வந்து பார்த்தாள். அம்மாவின் கொழுந்து கூடைக்குள் இருந்த 'அந்த' போஸ்டர்களைக் காணவில்லை. ஒரு பெரு மூச்சு விட்டாள்.

அநியாயங்கள் எரிந்து அழிகின்றன.

'அப்பா வந்ததும் ஒரு முத்தம் கொடுக்க வேண்டும்... சொன்னதுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும்'. என்ற எண்ணத்தோடு... வாசலில் நிற்கிறாள். சகல போஸ்டர்களையும் அப்பா கோபத்துடன் எரிப்பது தெளிவாகத் தெரிந்தது. இரண்டு வருட போராட்டம் வெற்றியைத் தந்தது.

அப்பா திருந்திவிட்டார். ரஞ்சனிக்கு மகிழ்ச்சி... தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

மகள்மார் தான் 'இந்த மாதிரியான' அப்பன் களைத் திருத்த வேண்டும்.

பொய்களும் ஏமாற்று வித்தைகளும் எரிந்து அழிவதைக் கண்ட செஞ்சூரியன் மகிழ்வுடன் எழுந்தான். மலைகள் எங்கும் ஒளி பரவியது.

⊡

அஞ்சலி :

## எழுத்தாளர் பெ. சு. மணி



எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய எழுத்தாளர் பெ. சு. மணி தம் 87ஆம் வயதில் 21.04.2021இல் தில்லியில் காலமானார்.

'வ.வே.சு. ஐயரின் கட்டுரைக் களஞ்சியம்', 'வ.வே.சு. ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள்' உள்ளிட்ட பல தொகுப்பு நூல்களை வெளியிட்டவர். 'இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பழந்தமிழ் இதழ்கள், வீரமுரசு சுப்பிரமணிய சிவா, எழுத்திடைச் செழித்த செம்மல் கா. சி. வெங்கட்ரமணி' உள்ளிட்ட நூல்களின் ஆசிரியரும் கூட. வெ. சாமிநாத சர்மா மற்றும் ம.பொ.சி.யின் அன்பரான இவர் சாகித்ய அக்கடமிக்காக, வாழ்வும் பணியும் வரிசையில் ம.பொ.சி. பற்றியும் சாமிநாத சர்மா பற்றியும் நூல்கள் எழுதியுள்ளார். ராமகிருஷ்ண மடத்தின் அன்பர். சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள், தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி, சுவாமி விபுலானந்தரின் தலையங்க இலக்கியம் போன்ற பல புத்தகங்களை எழுதியவர்.


இவர் பாரதி அன்பரும் கூட. 'பாரதியாரின் ஞானரதம் மூலமும் ஆய்வும்', 'சமூக சீர்திருத்த வரலாற்றில் பாரதியார்' போன்ற நூல்கள் இவரது படைப்புகளே. எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகளின் ஆசிரியர். தினமணி இவரது பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.கதர் வேட்டி, கதர் ஜிப்பா அணிந்து சைக்கிளில் சென்னையை வலம் வந்தவர். எளிய வாழ்வு வாழ்ந்த பெரிய மனிதர். பழகுவதற்கு இனிய பண்பாளர் கணீரென்ற குரலில் பாடக் கூடிய வல்லமை படைத்தவர்.. சில ஆண்டுகளுக்கு முன் இவரது மனைவி காலமாகி விட்டார். ஈழத்திற்கு வருகை தந்ததோடு பல இலக்கிய நிகழ்வுகளிலும் தேசிய கலை இலக்கியப் பேரவை ஏற்பாட்டில் கொழும்பிலும் வவுனியாவிலும் கலந்துகொண்டிருக்கிறார்.

தமிழுலகம், ஆய்வு நோக்கில் தகவல்களைத் திரட்டி நூல் எழுதும் சிறந்த எழுத்தாளர் ஒருவரை, மிகச் சிறந்த பண்பாளர் ஒருவரை இழந்துள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் தமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பலில் நிமிரும் நினைவலைகள்



க.தணிகாசலம்

யாழ். பொதுநூலக எரிப்புப் பற்றி அதன் நாற்பதாவது ஆண்டின் நினைவலைகளை இங்கு பதிவு செய்யும்போது, இக் காலப் பரப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் இங்கு கணக்கில் கொள்ளப்பட வேண்டும். எரியூட்டிய அந்த உணர்வுகளின் இருபக்கப் பரிமாணங்களின் தொடர்ச்சி யாக ஒரு பெரும் போரின் அழிவுகளை, உயிர், உடைமை, இழப்புக்களைக் கண்ட பின்னரும், அப் போரின் பன் முகத் தாக்கங்களில் இருந்தும் இன்றும் மீளாத நிலையே தொடர்கிறது. இந்த மண்ணின் வரலாறு காணாத, மனிதத்தை தலைகுனிய வைத்த இதுபோன்ற நிகழ்வு களில் இருந்து இந்தநாட்டு மக்கள் எதனைக் கற்றுக் கொண்டனர். அத்தகைய கற்றலுக்கான ஜனநாயகச் சூழலை அதிகார வர்க்கங்கள் இந்த நாட்டு மக்களுக்கு விட்டு வைத்தனவா? பதிலாக, போரின் வெற்றி தோல்வியை வைத்து இலாபம் பெறும் அரசியல் இந்தத் தேசத்தில் முனைப்புடன் இன்றும் தொடர்வதை நாம் காண்கிறோம். தீர்வுகளை எட்டாத அதே எரியூட் டும் மனநிலை இந்த நாட்டின் 'ஜனநாயக வெளி'களுக்கு ஊடாகவும், அரசியல் களங்களிலும் மக்கள் மனங்களில் தொடர்ந்தும் திணிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய மன உணர்வுகளுடன்தான் எரியுண்ட பொது நூலகத்துடன் எனக்கு இருந்த தொடர்பை எண்ணிப் பார்க்கிறேன். எமது மண்ணில் அறுபதுகளில் இருந்து எண்பதுகள் வரை பாடசாலைக் கல்வி போன்ற வரன்முறைகளுக்கு உட்பட்ட கல்வி நடவடிக்கைகளுக்கு அப்பாலும் கற்றலுக்கான தனிமனிதத் தேடலும் ஆர்வமும் மக்களிடம் இயல்பாக ஓரளவு இருந்தது. கிராமம் தோறும் சனசமூக நிலையங்கள் உருவாக்கப்பட்டு உற்சாகமாக இயங்கி வந்தன. தம்மைச் சுற்றி யும், உலகிலும் நடக்கும் புதினங்களை அறி வது முதல் இந்திய, ஈழத்து இலக்கியச் சஞ்சிகை களும் கிராமத்து மக்களின் பார்வைக்கு கிட்டி இருந்தன. கிராமங்கள் தோறும் நாடக மன்றங் கள் உருவாகியிருந்தன. சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை கலை வடிவில் கொண்டுவர வேண்டும் என்ற முனைப்பும் எழுந்திருந்தது. எனவே அன்றைய கலை, இலக்கிய, அரசியல், பொருளாதார, சமூகச் சூழல் அறிவியல் தேடலுக் கான களங்களைத் திறந்து விட்டிருந்தது.

கல்லூரியில் கற்ற நாட்களிலேயே அறிமுகமான தமிழக திராவிடக் கழக அறிஞர்களின் நூல்கள் எனது வாசிப்பு உணர்வை தூண்ட உதவின. அதன் தொடர்ச்சி யாக கல்லூரி இடைவிலகலுடன் யாழ். நகரில், இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த அமெரிக்க தகவல் நிலைய நூலகத்தில் நூல்களை இரவல் பெற்று படித்தேன். கறுப்பின மக்களின் விடுதலைக்கான செயற்பாடுகளில் பங்கு கொண்டமைக்காக சுடப்பட்டு இறந்த ஆபிரகாம் லிங்கனின் நிற ஒடுக்கு தலுக்கு எதிரான உணர்வும், தெருவிளக்கில் அமர்ந்து கல்வி கற்ற அவரது அறிவுத் தேடலின் ஆர்வமும் மனதில் அன்று பதிந்தன. நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப் பெண் எழுத்தாளரான போள் பெக்கின் சீனமக்களின் வாழ்வு பற்றிய நாவலான 'நல்ல நிலம்' போன்ற பல நூல்களை படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. எனினும் அங்கு படித்த மாக்சிய எதிர்ப்பு நூல்கள், அறிவியலிலும் 'இரு உலக நோக்குகள்' பார் வைகள் உண்டு என்பதை முதல் முறையாக எனக்குத் தெளிவுபடுத்தி இருந்தது. அது மாக்சியசார்பு நூல்களுக் கான தேடலை எனக்குள் ஏற்படுத்த தூண்டுதலாக அமைந்தது. பல்வேறு வகையான ஒடுக்குதல்களுக்கு உள்ளாகும் மக்களின் விடுதலைக்கான உலக நோக்கை விரிவு படுத்தும் நூல்களுக்கான தேடல் எனக்குள் ஏற்பட்டது. அப்பொழுது முதலாவது கட்டிடத் தொகுதி யுடன் திறக்கப்பட்டிருந்த யாழ். பொது நூலகமும் அதற்கு வாய்ப்பாக அமைந்தது. அதில் ஓர் உறுப்பினராக இணைந்து நூல்களை இரவல் பெறுவதற்கு யாழ். நகரை வதிவிடமாகக் கொண்ட ஒருவரின் உறுதிப்பத்திரம் அன்று அவசியமாக இருந்தது. நகரின் எல்லைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த ஒரு சட்டத்தரணியின் ஒப்புதலைப் பெற்று உறுப்பினராக இணைந்திருந்தேன்.

யாழ். நகரின் மத்தியில் ஒரு அறிவாலயமாக அமைந்த அப் பொது நூலகம் அறிவுத் தேடலை வளர்க்கவும், அத்தகைய நோக்குடையவர்கள் அங்கு நண்பர்களாக இணைந்து கொள்ளவும் வாய்ப்பான சூழலை ஏற்படுத்தி இருந்தது. அத்துடன் 'தேசிய கலை இலக்கியப் பேரவை' எழுபதுகளின் நடுப்பகுதியில், அன்று பொது நூலகத்தில் தற்காலிகமாக உருவாக்கப் பட்டிருந்த கேட்போர் கூடத்தில் மாதந்தோறும் சில கருத்தரங்குகளை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. பொது நூலகம் தனது நூலக சேவைக்கு அப்பால் சமூகத் தளத்தில் கலை இலக்கிய அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கும் இடமளித்திருந்தது. அத்தகைய கருத்தரங்குகளில் வடபகுதியில் நாடகத்துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை நல்கிய கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வி. வி. வைரமுத்து இரு வரையும் தனித்தனியே இரு நிகழ்வுகளில் அழைத்து அவர்களது நாடக அநுபவங்களைப் பகிர்ந்துகொண்டமை நினைவு கொள்ளத்தக்கதாகும்.

பொது நூலகத்தில் உறுப்பினராக இணைந்த பின்னர் அங்கு சில துறைசார்ந்த நூல்களை கற்கும் வாய்ப்பு ஏற்பட்ட போதும், மக்கள் நலன்சார்ந்த உலக நோக்கை விரிவுபடுத்தவும், தெளிவுபடுத்திக் கொள்ளவும் உதவிய சில நூல்களைப் பற்றி இங்கு குறிப்பிடுவது பயன் தருவதாகும். தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் தம்மை யும், தாம் வாழும் சமூகத்தையும், உலகையும் அறிந்து கொள்ள உதவுவதில் வரலாற்று நூல்களுக்கும் முக்கிய இடம் உண்டு. அத்தகைய வரலாற்று நூல்களில் பொது நூலகத்தில் இரவல் பெற்றுப் படித்த சுவாமிநாத சர்மா எழுதிய 'கிரீஸ் வாழ்ந்த வரலாறு', 'சீனாவின் வரலாறு' போன்ற நூல்கள் குறிப்பிடத் தக்கவையாகும். மேலைத் தேச, கீழைத்தேச மக்களின் வரலாற்று வளர்சிப் போக்கின் வழித்தடத்தை அறிந்து கொள்ளவும், அவற்றை எமது மக்களின் இன்றைய வாழ்க்கைச் சூழலுடன் ஒப்பிட்டு நோக்கவும் இவ்விரு நூல்களும் உதவின.

கிரேக்கநாடு கிறிஸ்து சகாப்தத்துக்குப் பல நூற்றாண் டுகளுக்கு முன்னரே பலவகையான தத்துவ அறிவுத் தேடல்களை மேற்கொண்ட அறிஞர்களையும், ஞானி களையும், கலை நயமும், கருத்தாழமும் மிக்க கலைப் படைப்புக்களை அளித்த நாடக ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. 'கிறீஸ் வாழ்ந்த வரலாறு' எனும் நூல் அங்கு நடந்த போர்களையும், அவைகளால் ஏற்பட்ட எழுச்சிகள், வீழ்ச்சிகள், இடர்பாடுகள் பற்றியும், அவைகளுக்கு மத்தியில் நிலவிய மக்களது வாழ்நிலை பற்றியும் குறிப்பிட்டிருந்தது. அத்துடன் இன்றும் எமது நாடு உட்பட, 'ஆட்சி முறைமையின் உயர்ந்த வடிவமாக' உலகநாடுகள் பலவற்றால் போற்றிப் பின்பற்றப்படும் 'ஜனநாயகத்தின் தொட்டிலாக' பண்டைய கிரேக்கம் விளங்கியதை அறிய முடிந்தது. ஆனால் அன்றைய ஜனநாயகத்திலும் வாக்களிக்கும் உரிமை அங்கு வசதி படைத்த வர்க்கத்தினருக்கு மட்டுமே உரித்தாக இருந்தது. அவர்களின் வாழ்க்கை வசதிகளுக்காக அல்லும் பகலும் பண்ணை வயல்களில் உழைத்தும், வாழ்க்கைத் தேவை களுக்கான பொருட்களை உற்பத்தி செய்தவர்கள் - 'ஹெலற்றுக்கள்' எனும் அடிமைகளுக்கு, வாக்களிப்பதற்கு அன்று உரிமை இருக்கவில்லை. இன்றும் கிரேக்க நாகரீகத்தின் சிறப்பை உலகுக்கு வெளிப்படுத்தும் எச்சங் களாக இடிந்தழிந்த நிலையில் காணப்படும் உயர்ந்த மாளிகைகளையும், கலை அரங்குகளையும் அவர்களுக் காகக் கட்டி அமைத்தவர்கள் அவர்கள் தான். இன்று ஜனநாயக நாடுகளில் பெரும் எண்ணிக்கையான உழைக் கும் மக்கள் வாக்குரிமையைப் பெற்றிருந்தும், அவர்களது வரலாற்று வளர்ச்சி நிலை கிரேக்கத்தின் 'தொட்டிலிற் பழக்கமாகவே' உள்ளது. இருபத்தைந்து நூற்றாண்டுகளின் பின்னரும் அதே உழைக்கும் மக்களின் பரம்பரையினர், தமது வாழ்வைக் கட்டி அமைக்கும் உரிமையையும் அதிகாரத்தையும் இழந்த வர்களாகவே இன்றும் ஆக்கப் பட்டுள்ளனர். ஆட்சி அதிகாரம் அன்று போலவே எண்ணிக்கையில் சிறு தொகையினரான அதிகார வர்க் கத்திடமே இருந்து வருகிறது. 'எரியூட்டும் மனநிலை' இன்றும் தொடர்வதற்கு, பெரும் எண்ணிக்கையான உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி அறியாமையிலும், அடிமைத்தனங்களிலும் ஆழ்த்தி வைத்திருக்கும் இது போன்ற சமூக பொருளாதார அரசியல் அமைப்பே அடிப்படைக் காரணமாக இருந்து வருகிறது.

வரலாறு என்பது அதிகார வர்க்கங்களின் வெற்றி பெற்ற வரலாறாகவே தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்டு வருகிறது. இப்புவியின் மீது மனித வாழ்வைக் கட்ட மைப்பதற்கு கடின உழைப்பால் உதவியபோதும், வர லாற்றுக் காலம் முதல் திட்டமிட்டே பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வரும் தோல்வி அடைந்த உழைக்கும் மக்களின் வரலாறு முன்னிலைப்படுத்தப் படுவதில்லை. எமது நாட்டில் இன்றும் கூட அறிவு நூல்களை எரித்தழித்த பின்னரும், அதனைத் தொடர்ந்த போரில் பெரும் எண்ணிக்கையான மக்களை பலியிட்டு அழித்த பின்னரும், கண்களைத் திறந்து இவ்வரலாற்று உண்மைகளைக்காண மறுத்து, மண்ணைக் கிளறியாவது ஆதிக்க வர்க்கத்தினர் தமது அடையாளங்களை நிலைநிறுத்த முனைகின்றனர். இவற்றை இப் புத்தகங்களுக்கு ஊடான புரிதல்கள் உணர்த்தி நிற்கின்றன.

'சீனாவின் வரலாறு' என்ற நூல் முடி மன்னர்களாலும், உள்ளூர் நிலப்பிரபுக்களாலும் மட்டுமல்ல அபினைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து மயக்கியாவது உலகநாடுகளை கொலனித்துவ அதிகாரத்தின் கீழ் கொண்டுவரத் துடித்த, ஆதிக்க வெறிபிடித்த ஏகாதிபத்திய நாடுகளின் போட்டிகளால் உருவான யுத்தக் களங்களில் பலியான சீன மக்களின் வரலாற்றை வெளிப்படுத்தி இருந்தது. 'சூரியன் அஸ்தமிக்காத' காலனித்துவ ஆட்சிகளை விரிவாக்கிய பிரிட்டன் முதல் உலகின் பல ஏகாதிபத்திய நாடுகளாலும் சுரண்டப்பட்டு, ஒடுக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழ்ந்த சீன மக்களின் துயர நிலையைக் குறிப்பதாக அந்நூல் அமைந்திருந்தது. அத்துடன் அவ்வொடுக்கு முறைகளுக்கு எதிராக சன்யாட் சென், மாஓசேதுங் போன்ற பல தலைவர்களின் தலைமையில் படிப்படியாக விழிப்படைந்து, வீரம்செறிந்த தொடர்ச்சியான போராட்டங்களின் மூலம் சீனமக்கள் விடுதலை அடைந்த வரலாற்றையும் அந்நூல் குறிப்பிட்டிருந்தது. நூலகம் எரியுண்டபோது நினைவுக்கு வந்து மீள் பிரசுரமாகுமா? மற்றவர்களின் பார்வைக்குக் கிட்டுமா? என்ற ஏக்கத்துடன் கேள்வியை எனக்குள் எழுப்பிய பழைய நூல்கள், சுவடிகள் பலவற்றின் வரிசையில் சிலவாக இதுபோன்ற நூல்களும் அமைந்திருந்தன.

அதுபோலவே இப் பொது நூலகத்தில் படித்த விவேகானந்தரின் சிக்காகோ பிரசங்கம் முதல் அவரது உரைகள் எழுத்துக்கள் யாவும் அடங்கிய, சற்று பெரிய எழுத்தினாலான தொகுப்பு நூல்களை இங்கு குறிப்பிடலாம். பகுத்தறிவு நூல்கள் பலவற்றைக் கற்றாலும், கவிஞர் முருகையனின் கவிதை வரிகளைப் போல 'இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை'களாக மக்களின் ஆழ்மனங்களில் வேரூன்றிப் பதிந்துவிட்ட மத, பண்பாட்டுச் சிந்தனைகள், சடங்குகள், நம்பிக்கைகளைக் கேள்விக்கு உட்படுத்தல் என்பது இலகுவான ஒன்றல்ல. அதற்குப் பொருத்தமான அரசியல் சூழலுடன், அறிவு விழிப்புடன் நடாத்தப்படும் பண்பாட்டுப் புரட்சிகள் பலவற்றின் பின்னரே அவை சாத்தியமாகும். ஆதிக்க சக்திகள் மக்களை தமக்குச் சார்பானவர்களாக வைத்திருப்பதற்காக, மக்களே விரும்பி ஏற்கும் 'பொன் விலங்குகளாக' இப்பழைய சுமைகளைப் பேணிப் பாதுகாக்கின்றன, அதனால் மக்களுக்கு ஏற்படும் தொடர்ச்சியான அவலங்களையும் எமது நாட்டில் நடைமுறை அனுபவங்களுக்கு ஊடாக நாம் கண்டு வருகிறோம். இதனையே 'பண்பாட்டு மேலாதிக்கம்' என அந்தோனியோ கிராம்சி என்ற இத்தாலியப் புரட்சியாளர் வரையறை செய்தார்.

இச்சிந்தனை விலங்குகளில் இருந்து விடுபடுவதற்கு தாம் வரித்துக் கொண்ட ஆன்மீக எல்லைகளுக்குள் நின்று கொண்டே காலமாற்றத்தில் தாம் எதிர்கொண்ட எல்லைப்படுத்தல்கள், தடைகளையும் மீறி மக்கள் நலன் சார்ந்த கருத்துக்களை முன்வைத்த விவேகானந்தர் போன்ற பலர் இயங்கினர். இப்பரந்த ஆன்மீகச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள், நடைமுறைகளை கலாசார மாற்றங்களின் ஆரம்பக் கூறுகளாக அடையாளம் காணலாம். 'பண்பாட்டு மேலாதிக்கத்தின்' வரலாற்று வகைப்பட்ட அதீத வலிமையை எதிர்கொள்ள உதவும் இத்தகைய மக்களின் விடுதலை உணர்வுக்கு உந்துதலாக அமையும் கருத்துக்களை நூலகத்தில் கற்ற பல நூல்கள் கொண்டிருந்தன. பழந்தமிழ் இலக்கியங்களிலும், சித்தர் பாடல்களிலும், திருவள்ளுவர், திருமூலர், தாயுமானவர், வள்ளலார், பாரதி, தாகூர் என நீண்டு செல்லும் மானுட நேசிப்புள்ள ஆன்மீக அறிஞர்கள், கலைஞர்களிடமும் இத்தகைய உணர்வுகளின் சாரம்சங்களைக் காண முடிந்தது. நாளாந்த வாழ்வுடன் ஒன்றிப் போயுள்ள சரியை, கிரியை வழிபாடுகளால் மக்கள் மனங்களில் இறுகிக் கிடக்கும் நம்பிக்கைகளில் இருந்து படிப்படியாக விடுபடவும், தெளிவு பெறவும், விவேகானந்தர் உட்பட மேற்குறிப்பிட்ட பலரது நூல்களும் பயன் தரும் என்பதை அநுபவ பூர்வமாக இந்நூல்களில் இருந்து அறிய முடிந்தது.

> *பொது நூலகம் எரிக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் அதன் எரியுண்ட சாம்பலில் இருந்து கூட இம் மண்ணையும், மக்கள் மனங்களையும் வளம் படுத்த அதிகார வர்க்கங்கள் 'ஜனநாயக' இடைவெளியைத் தரவில்லை. மீண்டும் மீண்டும் இனவாத புதைசேற்றில் இலங்கை மக்களைத் தள்ளுவதே அரசியலாக உள்ளது. எரியுண்ட நினைவுகளை இங்கு பதிவு செய்ய முற்படும் போது மனிதகுல வரலாற்றில் அதிகார வர்க்கங்கள் தம்மைப் பாதுகாக்கப் போட்டுக் கொண்ட இறுக்கமான எல்லைக் கோடுகள், அது அவர்கள் ஏற்றுக் கொண்ட அறிவியலாக, விஞ்ஞானமாக, மதமாக, சட்டதிட்டங்களாக எதுவாக இருந்தாலும் அவை மீறப்படும் பொழுது வரலாற்றில் எரியூட்டப்படுவது நூலகங்கள் மட்டுமல்ல. நடமாடும் நூலகங்களாகத் திகழ்ந்த தத்துவ ஞானிகள், விஞ்ஞானிகள், சமூக சீர்திருத்த எண்ணம் கொண்ட சித்தர்கள், அறிஞர்கள், புரட்சியாளர்கள் போன்ற பலரும் இவர்களால் அழிக்கப்பட்டுள்ளனர்.*

இத்தகைய ஆன்மிக உணர்வின் அடிப்படையில் மானுட உணர்வை நோக்கி நகரும் சிந்தனைப் படிவளர்ச்சியும், செயல் முனைப்பும், ஏனைய மத நம்பிக்கையாளர்கள் மத்தியிலும் இருந்து வருகிறது. குறிப்பாக இத்தகைய வளர்ச்சிப் போக்கு கிறிஸ்தவ மத நம்பிக்கையாளர் மத்தியில் தென்னமெரிக்க நாடுகள் உட்பட பல நாடுகளிலும், மக்கள் விடுதலை சார்ந்த செயற்பாடுகளாக, 'விடுதலை இறையிய'லாக முனைப்படைந்து வருவது இங்கு குறிப்பிடத் தக்கது. இவை பழமையான நம்பிக்கைகளில் இருந்து விடுபடுவதற்கு உதவும் மனிதநேய பகுத்தறிவுப் பார்வையை எமக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பதற்கு உந்துதலாக அமைபவையாகும். அதன் முழுமையான செயலாக்கத்திற்கு உதவும் இயங்கியல் அடிப்படையில் அமைந்த வரலாற்றுப் பொருள் முதல் வாத உலகப் பார்வையை - சமூக விஞ்ஞான அறிவை - மாக்ஸிய நூல்களில் இருந்தும், அதனை நோக்கிய சமூக நடைமுறைகளில் இருந்தும்தான் கற்க முடியும் என்பதை இத்தகைய நூல்களிலிருந்து உணர முடிந்தது.

அதுபோன்றே ஆன்மிகம் கலந்த அரசியலை முன்வைத்து கொலனித்துவ ஆட்சியில் இருந்து இந்திய சுதந்திரத்தை மீட்டுத் தந்த தந்தை எனப் போற்றப்படும், மகாத்மா காந்தியின் கருத்தியல்கள் தாக்கங்கள் இலங் கையிலும் பாதிப்பைச் செய்திருந்தன. இந்தியாவில் இன்றுவரை 'ராமராஜ்ஜி'யக் கனவுகளாகத் தொடரும் காந்திய அரசியலின் தொடர் விளைவுகளின் பாதிப்புக் களை நாம் இன்றும் கண்டு வருகிறோம். இவைபற்றி அன்றே எழுந்த கருத்துப் பரிமாற்றங்களுக்கு உதவிய நூல்களும் பொது நூலகத்தில் இருந்தன. மகாத்மா காந்தி எழுதிய 'சத்திய சோதனை' உட்பட காந்தியக் கருத் துக்களை இலக்கிய நயத்துடன் ஏற்றும் விமர்சித்தும் எழுதப்பட்ட இலக்கியப் படைப்புக்களையும் படிக்கும் வாய்ப்பு அங்கு கிட்டியது. அவற்றுள் மராட்டிய எழுத்தாளர் வி. எஸ். காண்டேகர் எழுதிய, கா.ஸ்ரீஸ்ரீ. அவர்களின் தமிழாக்கத்தில் வெளிவந்த 'வெண்முகில்' என்ற நாவல் இன்றும் நினைவில் உள்ளது. அந்நாவலில் அடிப்படைச் சமூக மாற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் கிராமப்புற மக்களிடம் பணிபுரியும் ஒரு பாத்திரம், தனது அனுபவ வெளிப்பாடாகக் கூறும் வர்த்தைகள் எமது அனுபவங்களுடன் இணைந்து அர்த்தம் பொதிந்தவை யாக அமைந்தன. 'காந்தி முன்வைக்கும் தத்துவங்கள், தனிமனித ஆன்ம வளர்ச்சிக்கு ஒருவேளை உதவலாம், ஆனால் மக்கட் சமூகத்தின் விடுதலைக்கு அது வழியாகாது' என குறிப்பிடுவதாக வரும் அவ் வார்த் தைகள் அன்று எனக்குள் எழுந்த கேள்விக்கும், பதிலுக்கும் முடிவுரையாக அமைந்தது. விடுதலை என் பது இந்த மண்ணில் அனைவருக்குமான விடுதலையாக மலரவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அது அமைந்திருந்தது.

இவைபோன்ற பல கருத்தியல் தெளிவுகளுக்கும், கருத்து மாற்றங்களுக்கும் துணை புரிந்த பொது நூலகம் எரிக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் அதன் எரியுண்ட சாம்பலில் இருந்து கூட இம் மண்ணையும், மக்கள் மனங்களையும் வளம் படுத்த அதிகார வர்க்கங்கள் 'ஜனநாயக' இடைவெளியைத் தரவில்லை. மீண்டும் மீண்டும் இனவாத புதைசேற்றில் இலங்கை மக்களைத் தள்ளுவதே அரசியலாக உள்ளது. எரியுண்ட நினைவுகளை இங்கு பதிவு செய்ய முற்படும் போது மனிதகுல வரலாற்றில் அதிகார வர்க்கங்கள் தம்மைப் பாதுகாக்கப் போட்டுக் கொண்ட இறுக்கமான எல்லைக் கோடுகள், அது அவர்கள் ஏற்றுக் கொண்ட அறிவியலாக, விஞ்ஞானமாக, மதமாக, சட்டதிட்டங்களாக எதுவாக இருந்தாலும் அவை மீறப்படும் பொழுது வரலாற்றில் எரியூட்டப்படுவது நூலகங்கள் மட்டுமல்ல. நடமாடும் நூலகங்களாகத் திகழ்ந்த தத்துவ ஞானிகள், விஞ்ஞானிகள், சமூக சீர்திருத்த எண்ணம் கொண்ட சித்தர்கள், அறிஞர்கள், புரட்சியாளர்கள் போன்ற பலரும் இவர்களால் அழிக்கப்பட்டுள்ளனர். ஆதிக்கவாதிகளாலும், அவர்களது அடிவருடிகளாலும் அழிக்கப்பட்டது அவர் களது உடல்கள் மட்டுமல்ல. உடலோடு உடலாக உயர்ந்து விரிந்த அவர்களது ஆத்மாக்களும் கொடூர மாகச் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. அவர்களது ஆத்மாக்களின் குரல் மொழி வடிவங்கள்தான் நூல் களும், அதனைப் பாதுகாக்கும் நூலகங்களும். அவர் களைப் போன்றவர்களை எரியூட்டி, நஞ்சூட்டி, சிறை யிட்டு, சிலுவையில் அறைந்து, கழுவேற்றி, தூக்கிலிட்டு, சுட்டுக் கொல்லப்படும் வரலாறு என்றும் தொடரும் வரலாறாகவே இருந்து வருகிறது. இவ் வரலாற்றை மாற்றி அமைக்கத் துணைபுரியும் அறிவியல் விழிப் புணர்வு இன்றைய தேவையாக உள்ளது. இங்கு பொது நூலக எரியூட்டல் பற்றிய கவிஞர் முருகையனின் 'வெறியாட்டு' நாடகத்தில் வரும் பா வரிகளையும் நாம் பொருத்தம் கருதி நினைவு கூர்வது பயனுள்ளதாகும்.

'புதியதோர் பூங்கா செய்வோம்
பழைய வறட்சிகள் பாழ்படும்படியே'

தான் வாழ்ந்த கால, வெளிக்குள் நின்று, மதங்களின் வரலாற்றில் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து, வேள்விக் காலக் கடவுளரை மறுத்து, நிலையாமையையும், அன்பையும், அவா அறுத்தலையும் போதித்த புத்தரின் உணர்வுகள் மண்ணுள் புதைக்கப்பட்டன, அவரது சிலைகளையே, நிலங்களைக் கிளறியாவது இன்றும் இம்மண்ணில் நிமிர்த்த இன்றைய அரசியலாளர்கள் விரும்புகின்றனர். மனிதர்களின் உழைப்பை மனிதர்கள் சுரண்டி வாழும் சமூக அமைப்பில், இன, மத, சாதி, வர்க்க அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தி, உழைக்கும் மக்களின் வாழ்வில் நஞ்சைக் கலக்கும் ஆதிக்க அரசியலை தொடர உதவும் நிகழ்வுகளாகவே இவை இருந்து வருகின்றன. இவற்றுக்கு எதிராக இத்தேசத்தின் வளத்துக்காக வியர்வை சிந்தும், உழைக்கும் மக்களின் இயல்பான, பேதங் கடந்த ஒன்றுபட்ட உணர்வின்; அடிப்படையில், மக்கள் பலத்தைக் கட்டியெழுப்பும் அறிவு பூர்வமான மாற்றுக் கருத்துக்கள், மக்கள் மத்தியில் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும். பல்வகைப்பட்ட நூல்களையும் தன்னகத்தே கொண்டு, அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த நூலக எரிப்பின் நாற்பதாவது ஆண்டின் பின்னரும் நாம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை இவையாகவே இருக்க முடியும் ⊡


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவள் ஏமாற்றத்தோடு அதையும் எடுத்து உள்ளே வைத்து அவனிடம் கொண்டு வந்தாள்.*
*அந்தப் பையை அவனிடம் நீட்டிய போது முகமெல்லாம் சிரிப்பாக,*
*"எனக்கென்னத்துக்கம்மா இவ்வளவும்...." என்று சொன்னாலும் அவனது கரங்கள் நீண்டன.*



# கத்தரிப்பூக் கிழங்கு

தாட்சாயணி

"பெரிய பச்சை நட்சத்திரம்... இஞ்சை வந்து பாருங்கோவன்..." கீச்சுக் குரலில் கிருத்திகன் கத்தினான். குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தாள் அற்புதம். வேலியோரம் படர்ந்திருந்த இராசவள்ளிக் கொடியின் இலைகள் வளர்வதை முழங்காலில் கைகளை ஊன்றியபடி நின்று கண்களை விரித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"என்னப்பு பாக்கிறீங்கள், எங்களுக்கும் காட்டுங்கோவன்". அவள் பாத்திரம் கழுவிய தண்ணீரை எலுமிச்சங்கன்றிற்கு ஊற்றியபடி அவனருகில் வந்தாள்.

"இஞ்சை பாருங்கோ அம்மிம்மா, பெரிய பச்சை நட்சத்திரம்..."

"எங்கையப்பன்...?"

"இஞ்சை, இது தான்..."

அவன் கை காட்டிய திசையில் இராசவள்ளிக் கொடியின் இலைகள் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன.

அற்புதத்திற்குச் சிரிப்பு வந்தது.

செவ்வூதா நிறத்தில் சிறுமுளை மண்ணைப் பிளந்து வெளிவந்த நாளிலிருந்து விடிந்தால் அதனருகே ஓடிப் போய் விடுகிறான்.

ஒவ்வொரு நாள் தோற்றத்திற்கும் ஒவ்வொரு கற்பனை வடிவத்தை உருவாக்குபவனின் இன்றைய எண்ணத்தில் தோன்றியது பச்சை நட்சத்திரம்..

"ஆள், பெரிய புலவராத் தான் வரப் போறார்." உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த வசந்தா சொன்னாள்.

சக்கரநாற்காலியை உருட்டிக் கொண்டு வெளியே வந்த காசிலிங்கம்,

"எங்கை பாப்பம் உங்கட பச்சை நட்சத்திரங்களை. இரவிலை இனி வெளிச்சம் வருமாமோ...?" என்றார்.

"வரும். நான் குட்டி, குட்டியா பல்புகளைக் கொண்டு வந்து பூட்டி விட்டால் வெளிச்சம் வரும் தானை." என்றான் கிருத்திகன்.

"பல்போ, எங்கையிருந்து அதைக் கொண்டு வரப் போறீங்கள் நீங்கள்..."

"எங்கட புது வீட்டுக்கு வேலை செய்யிற மாமாமார் பல்பு கொண்டு வரேக்க நானும் குட்டி, குட்டி பல்பு வாங்கித் தரச் சொல்லிக் கேட்பனே..."

"இப்பவே பெரிய எஞ்சினியர் மாதிரித் தான் கதை" அற்புதம் அவனுக்குச் செல்லமாய் நெட்டி முறித்தாள்.

"அதிலை என்ன சந்தேகம், அவன் எஞ்சினியராத் தான் வருவான்" எனக் காசிலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிய போது அற்புதம் பெரு மூச்சோடு அருகிலிருந்த புது வீட்டைப் பார்த்தாள்.

இன்னும் நிலம் இழுக்கவில்லை. சுவர்ப் பூச்சுப் பூசப்படவில்லை. ஜன்னல்களும், நிலைகளும் வைத்துக் கூரை போட்டபடி அரை குறையில் நின்றது வீடு. ஒருவாரமாய் வேலைகாரர் வரவில்லை. காசு தராமல் இனி வேலைக்கு வருவதில்லை என்று தாசன் ஏற்கனவே சொல்லியிருந்தான்.

"இது இன்னும் வளருமோ தாத்தா...?"

"ஓம், நல்லா வளரும்."

"இதுக்கு என்ன பேர் தாத்தா...?"

"இது ராசவள்ளி..., உங்களுக்குத் தெரியாதோ, அம்மம்மா உங்களுக்கு கூழ் காய்ச்சித் தந்தவ எல்லோ..."

"அப்ப இதிலை பூப் பூத்துக் காய் காய்க்குமோ...?"

"இல்லை அப்பன், இது வேருக்கடியிலை கிழங்கு தான் வைக்கும்..."

"அப்ப இந்த மரம் காய்க்காதோ...?"

"இது மரமில்லை அப்பன், கொடி..."

"கொடியெண்டால்..."

"கொடியெண்டால் மரத்திலைதான் படரும்..."

"அப்ப மரமெண்டால்...?"

மரமெண்டால் தானாவே வளரும்"

கிருத்திகனின் கேள்விகள் வளர்ந்து கொண்டே போக வசந்தா உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள்.

"தாத்தாவுக்கு ஆய்க்கினை கொடுக்காமல் உள்ளை வாங்கோ, கிரு...."

அவன் கேள்விகளை நிறுத்திக் கொண்டாலும் காசிலிங்கத்தின் மனதில் கேள்விகள் பெருகின.

ஏன் மரங்கள் தனித்து நிற்கும் போது கொடிகள் மட்டும் தங்கி வாழப் பழகின?

கிருத்திகனது தந்தை தனியே போய் விட்ட பிறகு, இவர்களும் இல்லாதிருந்தால் வசந்தாவால் எங்கே பற்றிப் படர முடிந்திருக்கும்?

★★★

கட்டி முடிக்கப்படாத அந்தக் குறை வீட்டின் முன் கிருத்திகன், சிறிய மரக்கீலங்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். காசிலிங்கம் முற்றத்தின் ஒரு புறத்தில் இருந்த படி திருவாசகத்தை உரக்கப் பாடிக் கொண்டிருந்தார். அற்புதம் அரிசிப் பானையில் உலையை வைக்க ஆரம்பித்த போது தான், தாசன் வந்தான்.

"காசு தாறன், தாறன் எண்டு நெடுகப் பேக்காட்டிக் கொண்டிருக்கிறீங்கள். உங்களால நான் மரக் காலைக்குப் போகேலாமல் கிடக்கு. உங்கட வீடு மட்டும் தான் நான் செய்யிறனே. மொத்தம் பன்னிரெண்டு வீடு செய்யிறன். அந்த வீடுகளுக்கு மரம் எடுக்கக் கூட நான் போக ஏலாமல் கிடக்கு,"

காசிலிங்கம் பாடிக் கொண்டிருந்த திருவாசகத்தை நிறுத்தி விட்டு மௌனமானார். உள்ளேயிருந்து அற்புதம் வெளியே வந்தாள்.

"இன்னும் ரெண்டு கிழமையிலை வீட்டைக் கட்டி முடிக்கோணும் எண்டு டி.எஸ் ஒவ்விசாலை சொன்னவை. கட்டி முடிச்சாக் காசைத் தந்திடுவீனை. கொஞ்சம் தயவு பண்ணி முடிச்சுத் தந்தியள் எண்டா..."

"எனக்கு மட்டும் காசென்ன மரத்திலையே காய்க்குது...? மாறிச் சாறித்தானை நானும் செய்யிறன்"

"வீட்டுத்திட்டம் எண்டு பேர் தானே தவிர கட்டி முடிச்சாத்தான் காசு தருவம் எண்ணீனை. நாங்களும் என்ன தம்பி செய்யிற."

"ஏன், கூரை போட்டா பிறகு ரெண்டு லட்சம் தந்திருப்பினையே."

"தந்திருந்தா நான் ஏன் தம்பி, உம்மை அலைவிக்கிறன். மிச்ச வேலையும் நீங்கள் தானை செய்யோணும்..."

"அப்பிடி நினைக்கிற மாதிரித் தெரியேல்லை..."

"ஐயோ தம்பி நேற்றும் ஜி.எஸ் வந்து ஏசிப் போட்டுப் போறார். கெதியிலை வேலை முடிக்கோணும் எண்டு."

"அப்ப நீங்கள் காசைக் கேட்டிருக்கலாமே..."

"எல்லாம் கேட்டுப் பாத்தாச்சு. ரி.ஓ வந்து பாத்துச் சொன்னாத் தானாம் காசு ரிலீஸ் பண்ணுவீனையாம்."

"அப்ப இப்பிடியே இருக்காமல் டி.எஸ் ஒவ்விசிலை போய்க் கதைச்சு அலுவலைப் பாருங்கோ. காசு தாராட்டில் நான் வேலைக்கு ஆட்களை அனுப்ப மாட்டன். பிறகு என்னைக் குறை சொல்லாட்டிக்குச் சரி..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசன் வெற்றிலை எச்சிலை வேலியோரம் துப்ப அது இராசவள்ளி இலைகளில் படிந்து பெரும் கறை ஆகியது. கிருத்திகனது பச்சை நட்சத்திரத்தில் குருதிக் கறை படிந்தாற் போலானது.

'அம்மா, அம்மா' எனக் கிருத்திகன் அரற்ற உள்ளேயிருந்து வந்த வசந்தாவிற்குக் கிருத்திகன் இராசவள்ளியை நோக்கிக் கையை நீட்டினான்.

வசந்தா உள்ளேயிருந்து கிண்ணமொன்றில் நீர் கொண்டு வந்த போது தாசன் படலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். அவள் அந்த நீரை இராசவள்ளி இலைகளில் அடித்தூற்றி அக் கறையைக் கழுவிய போது, அவளது முதுகுக்குப் பின் ஒன்றியபடி கிருத்திகன் தாசனை வெறுப் போடு பார்த்தான்.

★★★

இராசவள்ளி இலைகள் வாடி வதங்கத் தொடங்கிய நாளொன்றில் கிருத்திகனுக்கு மனசு சுருங்கிப் போயிற்று. அவன் நினைத்த படி புது வீட்டுக்கு மின் குமிழ்களைக் கொண்டு வேலைகாரர் இன்னும் வரவில்லை. அப்படி வரும் போது சின்னச் சின்ன மின்குமிழ்களை அந்தப் பச்சை நட்சத்திரங்களில் பொருத்தி அழகு பார்க்க நினைத்த அவனது கனவு வீணாகுவது போல இப்போது அந்தப் பச்சை நட்சத்திரங்கள் வாடி வதங்கத் தொடங்கி விட்டன.

அவன் அற்புதத்தின் பின்னால் இழுபட்ட படியே சிணுங்கத் தொடங்கினான்.

"எப்ப அம்மிம்மா, புது வீட்டுக்கு வேலை செய்யிற மாமாமார் வருவீனை. அவையள் எப்ப புது பல்புகள் கொண்டு வருவீனை?"

அற்புதத்தால் இதற்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?

அவளும் எத்தனை தடவை அலைந்து திரிந்தும் இன்னும் ரி. ஓ வந்து பார்க்கவில்லை. காசு கொடுக்காமல் தாசனும் வேலைகாரரை அனுப்பவில்லை.

"அவையள் வாற நேரம் வரட்டும். நாளைக்கு நாங்கள் கிழங்கு பிடுங்கி கூழ் காய்ச்சி குடிக்கலாம்." அற்புதம் உள்ளே போய் விட்டாள்.

"ஓ... பச்சை நட்சத்திரத்திண்டை கிழங்கோ.... அது எப்பிடியிருக்கும்....?"

அவன் தாத்தாவிடம் ஓடினான்.

"இலையெல்லாம் பட்டுப் போகுது. அதுக் குள்ளை கிழங்கு வருமோ தாத்தா..?"

"ஓம் அப்பன், இப்ப நல்லாக் கிழங்கு வச்சிருக்கும்."

"அந்தக் கிழங்கும் நட்சத்திரம் மாதிரி இருக்குமோ தாத்தா..."

"இல்லையப்பன் கிழங்கெல்லாம் கத்தரிப்பூ நிறத்திலை இருக்கும்."

"கத்தரிப் பூ, கத்தரிப் பூ... அப்ப அது கத்தரிப் பூக் கிழங்கு."

அவன் புதியதொரு சொல்லையும், பொரு ளையும் அறிந்து விட்ட மகிழ்வில் ஆர்ப்பரித்தான்.

சந்தைக்குப் போய் மரக்கறிக் கூடையோடு வந்து கொண்டிருந்த வசந்தாவிடம் ஓடிச் சென்று "தாத்தா எனக்கு கத்தரிப் பூக் கிழங்கு பிடுங்கித் தருவாரே" என்று குதூகலித்தான்.

★★★

"ரி. ஓ வீட்டைச் சுற்றிச் சுற்றி பார்த்தான். பின்னால் அற்புதம் நின்று கொண்டிருந்தாள்.

"ஜன்னல் கொஞ்சம் சின்னனாய்ப் போட்டிட் டீங்கள் போலை கிடக்கு."

அவன் அளவு நாடாவைப் பிடித்து அளந்தான்.

"இல்லை ஐயா, சொன்ன அளவுக்குத் தான் செய்யச் சொன்னனாங்கள்."

சுற்றி வரக் கதவுகளையும், ஜன்னல், நிலை களையும் பார்த்து விட்டு 'லொக்'

புத்தகத்தை வாங்கி அவன் பதிந்து கொண் டிருந்த போது அற்புதம் கேட்டாள்.

"நாளைக்கு காசு எடுக்கிற மாதிரி இருக்குமோ தம்பி"

அவன் ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்குள் போய் மேலே நோட்டமிட்டான்.

"இதென்ன ஓடுகளெல்லாம் பழைய ஓடுகளாக் கிடக்கு"

"இல்லை, ஐயா, அது நாங்கள் முதலே எடுத் தனாங்கள். வீட்டுத் திட்டம் வரக் கொஞ்சம் முந்தி எங்கட பழைய வீட்டுக்கூரை ஓலை யெல்லாம் உக்கி மழைக்கு ஒழுகினதாலை வாங்கிப் போட்ட ஓடுகள். அது ஒரு முப்பது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பது ஓடுகள். மிச்ச ஓடுகள் புதுசு தான் ஐயா..."

"உங்கட காசெண்டா நீங்கள் பழைய ஓடு போட்டா என்ன, புது ஓடு போட்டா என்ன, நான் கேக்க மாட்டன். இது வீட்டுத் திட்டம். அரசாங்கக் காசு. நீங்கள் புது ஓடு மாத்தும் வரைக்கும் நான் காசு ரிலீஸ் பண்ண மாட்டன்."

"ஓடுகளைப் பாருங்கோ ஐயா, எல்லாம் புத்தம் புதுசாத்தானையிருக்கு."

"புத்தம் புதுசாத்தானிருக்கு. ஆனால், அது பழைய ஓடெண்டு எனக்குத் தெரியுமே. தெரிஞ்சு கொண்டு நான் பிழை செய்யேலுமோ...?"

வெளியே வந்து அவன் சுற்றிச் சுழன்று வளவை நோட்டமிட்டான்.

எலுமிச்சை செழித்தபடி பூக்களோடு நின்றது.

"எலுமிச்சை காய்க்கேல்லையே?"

"இல்லை ஐயா, இப்ப தான் முதன் முதல் பூத்திருக்கு."

பக்கத்தில் அகழ்ந்து வைக்கப்பட்டிருந்த இராசவள்ளிக் கிழங்குகளைப் பார்த்தான். அன்று தான் பிடுங்கியதற்கு அடையாளமாகப் பக்கத்தில் கொடி துவண்டு போய்க் கிடந்தது.

"நல்ல இராசவள்ளித் தோட்டம் வச்சிருக் கிறியள் போல...."

"ஒரு சின்னக் கிழங்கைத் தாட்டுப் பாத்தன், வருமோவெண்டு, நல்லா வந்திருக்கு ஐயா ."

அப்ப, இனி இராசவள்ளித் தோட்டத்தப் போட்டிட வேண்டியதுதானே."

அவன் சொல்லிக் கொண்டே படலையை நோக்கி நகர்ந்தான்.

அற்புதம் பின்னால் போன படியே,

"நாளைக்கு காசை ரிலீஸ் பண்ணித் தருவீங்கள் தானே..." என்றாள்.

"அதுதானே ஓட்டை மாத்தச் சொன்னன்..."

இவ்வளவு ஓடும் வீணாப் போகும் தம்பி, காசு குடுத்து வாங்கினது."

காசிலிங்கம் சக்கர நாற்காலியை உருட்டியபடி அருகே வந்தார்.

அவன் திரும்பி இராசவள்ளிக் கிழங்குகளைப் பார்த்தான்.

"கொஞ்சம் நில்லுங்கோ ஐயா வாறன்..." அற்புதம் பரபரத்தபடி உள்ளே போனவள் ஒரு மாட்டுத்தாள் பையினை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

வேலியோரம் பிடுங்கி வைக்கப் பட்டிருந்த இராசவள்ளிக் கிழங்குகளை எடுத்து உள்ளே வைத்தபோது வேண்டுமென்றே ஒரு சிறு கிழங்கைக் கீழே தவற விட்டாள்.

"ஒரு கிழங்கு விழுந்திட்டுதம்மா.."

மிகுந்த கரிசனையோடு அவன் சொன்னான்.

அவள் ஏமாற்றத்தோடு அதையும் எடுத்து உள்ளே வைத்து அவனிடம் கொண்டு வந்தாள்.

அந்தப் பையை அவனிடம் நீட்டிய போது முகமெல்லாம் சிரிப்பாக,

"எனக்கென்னத்துக்கம்மா இவ்வளவும்...." என்று சொன்னாலும் அவனது கரங்கள் நீண்டன.

"அந்தக் காசு..."

அவள் இழுத்தாள்.

"நாளைக்கு ஒவ்விசுக்கு வாங்கோ பாப்பம்..."

அவன் வெளியேறியதும் அற்புதம் பெருமூச் சோடு உள்ளே திரும்பினாள். வசந்தாவின் சட்டையைப் பிடித்தபடி கிருத்திகன் நின் றிருந்தான்.

"எங்கட கத்தரிப்பூக் கிழங்கை ஏன் அம்மம்மா அவருக்குக் குடுத்தனீங்கள்...?"

அவனது பார்வையைச் சகிக்க முடியாமல் தலை கவிழ்ந்தபடி உள்ளே போனாள் அற்புதம்.

"அவன் சக்கர நாற்காலியருகே ஓடினான்.

"ஏன் தாத்தா எங்கட கத்தரிப்பூக் கிழங்கை அம்மம்மா அவருக்குக் குடுத்தவ ...?"

காசிலிங்கமும் எதுவும் சொல்லாமல் நாற் காலியை உருட்டத் தொடங்கினார்.

அவன் துவண்டு போய்க் கிடந்த கொடியருகே முழங்காலில் கையை ஊன்றியபடி நின்றான்.

பின் "பச்சை நட்சத்திரங்களும் போச்சு,

கத்தரிப் பூக் கிழங்கும் போச்சு..." என்று துயர் அப்பிய முகத்தோடு பாடத் தொடங்கினான். அந்தப் பாடலிலிருந்து கத்தரிப் பூ நிற வண்ணத்துப் பூச்சிகளும், பச்சை நட்சத்திரங்களும் அவனை விட்டு விலகிப் பறக்கத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு

எல்லா நேரங்களிலும் காத்திருப்பு
சுவாரஷ்யமானதாகவும்
அலாதியானதாகவும் இல்லை

மெல்லிய சாரல் அடிக்கும் அந்தியில்
மல்லிகைகையின் மணம் வீசும் அந்தியில்
காதலிக்காக காத்திருப்பது போலல்ல
கடுங்கோடையில் ஒரு மழைத்துளிக்காக
காத்திருப்பது
அந்தக் காத்திருப்பு
மரணத்தின் வெம்மையை தரக்கூடியது

மெலிதாய் வெயில் அடிக்கும்
பனி பொழியும் காலைப் பொழுதொன்றில்
சிகரட் புகைத்துக் கொண்டே நண்பனுக்காக
இரயில் நிலையத்தில் காத்திருப்பது போலல்ல
மாரியின் கோரத்தாண்டவம்
நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலத்தில்
ஒளியின் கிரணங்களுக்காக
அதன் வெம்மைக்காக காத்திருப்பது
அந்தக் காத்திருப்பு இயலாமையின்
கசப்பைத் தரக்கூடியது
நீர்மையின் கசப்பைத் தரக்கூடியது

இனிய நினைவுகளுடனும்
நெகிழ்வான பல தருணங்களுடனும்
மலர் கொத்தை ஏந்தியவாறு
சாலையோரத்தில்
நீண்ட நாள் கழித்து காணப்போகும்
உறவுக்காக காத்திருப்பது போலல்ல

போர் நடந்த நிலத்தில்
ஒரு உறவுக்காக காத்திருப்பது
அந்தக் காத்திருப்பு
கண்ணீரால் நிரம்பியது
வலிகள் நிரம்பியது
நினைவின் திரைகளைக் கிழிக்கக்கூடியது

**சி.கிருஸ்ணபிரியன்**

# அது

உயிர் குடித்து உயிர் குடித்து
உருவானது தான் அது

வகை வகையாய்,
தொகை தொகையாய்
பிஞ்சு, பேடு, கிழடு என்று
ஈவிரக்கம் எதுவுமின்றி
கொன்றழித்து வெற்றி
கூவி வந்தது அது!

உவகை தரு பொழுது எதுவென்றால்,
உயிர் இருப்பின்'முதல்' எதுவென்றால்
உயிர் குடித்தல் ஒன்றே என
உள்ளூர நினைத்து மொழிந்து களிக்கும் அது!

மாதர் நிர்வாணங்களில்,
ஆடவர் அங்கவீனங்களில்,
குழவியர் கதறல்களில்

மரணத்தின் வாசனையை, சுவையை
கண்டு, கேட்டு, உற்று உணர்ந்து,
இன்புற்றிருந்தது அது!

பாழாய்ப் போன மூளை
பத்தாண்டு பழைய சுவடுகளை
பட்டென்று பறிகொடுத்ததுவே!

இப்போது அன்றாடம் எரியும்
இருநூறு உயிர்கள்
அட
அற்பன் ஒரு சோளப் பொரிக்கு
ஒப்பானது அதற்கு!

நோயால், பசியால், பதற்றத்தால், பைத்தியத்தால் என்று
இன்னும் வகை வகையாய்
தொகை தொகையாய்
திகட்டத் திகட்ட தின்ன
உறுபசி சமைத்து
உட்காந்திருக்கிறது அது!

பிணந்தின்னும் பேயென்று பெரிதறிந்தும்
அரசாள அழைத்து வந்தோரே...

எரிந்து உதிர்பவை வரிசையில்
'அது'வும் எரிந்துவிழும்
எம் முன்னே விரைந்து!

**லுணுகல ஸ்ரீ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நோக்கில் பண்டைத் தமிழிலக்கியம்
## சில சிந்தனைகள்

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

ஒவ்வொரு இலக்கியப் படைப்புக்கும் இருவகைப் பொருட் பரிமாணங்கள் உள. ஒருவகை அது எழுந்த காலச் சூழல் சார்ந்தது. படைப்பாளனின் நோக்குநிலை, அவன் கருத்திற் கொண்டிருந்த வாசகன் (சுவைஞன்), திறனாய்வாளன் ஆகியோரது திறன் என்பவற்றுக்கு ஏற்ப அமையும் பொருட்பரிமாணம் இது. இன்னொரு வகைப் பொருட்பரிமாணம் காலம் தோறும் அப்படைப்பு பயிலப்படும் சூழ்நிலைகளில் எய்தப்படுவது. ஒருபடைப் பாக்கம் தான் எழுந்த காலப் பகுதியின் பின்னர் பயிலப்படும் சூழ்நிலைகளில் அவ்வச்சூழ்நிலைகளின் உணர்வுநிலைகளுக்கு ஏற்பப் பொருள் கொள்ளப்படும் நிலையில் எய்தும் பரிணாமம் இது. இலக்கியப் படைப்புக் களைப் பயிலவோ எடுத்துரைக்கவோ முற்படும் ஒருவர் அவற்றின் மேற்படி இருவகைப் பரிமாணங்கள் பற்றியும் சிந்திக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டியது அவசிய மாகும். அல்லாதவிடத்து இலக்கியம் பற்றிய புரிதலில் தவறு நிகழ்வது தவிர்க்க முடியாததாகிவிடும். இதன் விளைவாக சமுதாயத்தின் சிந்தனைப் போக்கில் தேக்கம் நிகழக்கூடிய ஆபத்தும் உளது. இவற்றைத் தவிர்க்கத் தக்க வகையிலே சிலசிந்தனைகளைத் தாயகம் வாசகர் களுடன் பகிர்ந்து கொள்ளும் உணர்வுந்துதலின் வெளிப் பாடாகவே இக் கட்டுரைத் தொடர் அமைகிறது.

இங்கே பண்டைத் தமிழிலக்கியம் என்ற தொடர் தமி ழின் தொல்லிலக்கியப் பரப்பு முழுவதையும் தொகுத்துச் சுட்டுவதாகவே பயில்கிறது. குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முற்பட்ட தமிழிலக்கியப்பரப்பு இச் சுட்டுக்கு உரியதாகிறது. சங்கப் பாடல்கள், திருக்குறள் முதலிய அறநூல்கள், சிலப்பதிகாரம் கம்பராமாயணம் முதலிய பேரிலக்கியங்கள், பக்திப்பாடல்கள், பரணி, உலா முதலிய சிற்றிலக்கியங்கள், குறவஞ்சி - பள்ளு முதலிய 'இசை - நாடகப்பண்பு' சார் ஆக்கங்கள், சித்தர்பாடல்கள் முதலியனவாக விரித்துள்ள மேற்படி இலக்கியப் பெரும்பரப்பை இன்றைய நோக்கில் நாம் எவ்வாறு அணுகவேண்டும் என்பதே இச் சிந்தனைத் தொடரின் தொனிப்பொருள் ஆகும்.

"இன்றைய நோக்கு" என்பது சமகாலத்தில் முனைப்புப் பெற்றுள்ள பல்வகைத் திறனாய்வுப் பார்வைகளையும் சுட்டவல்லது. எனினும் இங்கு பொதுவாக "அறிவுபூர்வ மான பொது நிலை நோக்கு" என்ற கருத்திலேயே பயில்கிறது. பொதுவாக ஒரு இலக்கியப் படைப்புக்கும் அது எழுந்த சமூகத்துக்கும் உள்ள உறவு நிலை, அப் படைப்பில் உண்மை கற்பனை என்பன இணைந்துள்ள முறைமை, பண்பாட்டு வளத்துக்கு அப் படைப்புச் செய்துள்ள பங்களிப்பு முதலியன பற்றிய ஒரு ஆய் வியல் அணுகுமுறையே இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரு இலக்கிய ஆக்கம் பற்றிய ஆய்வு நோக்கானது பொதுவாக இருவகை நோக்கங்களினடிப்படையில் அமையும். ஒன்று அந்த ஆக்கத்தின் உள்ளடக்கம், ஆக்கக்கூறுகள், கட்டமைப்பு முதலியவற்றைப் புற நிலையில் நின்று விமர்சிக்கும் நோக்குநிலை. இன் னொன்று அவ்வாக்கத்தைப் பண்பாட்டுப் பதிவேடுகளில் ஒன்றாகக் கொண்டு அதனூடாக அது எழுந்த சமூக- பண்பாட்டுக் கோலங்களைத் தரிசிக்கும் நோக்குநிலை. இவற்றில் முதலாவது நோக்கு இலக்கிய விமரிசனமாக அமையும். மற்றது சமூக- பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய தேடலாக அமையும். பண்டைத் தமிழிலக்கியங்கள் தொடர்பாக அண்மைக்காலம் வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மேற்குறித்த இரண்டாவது நோக்கு நிலை அழுத்தம் பெற்ற அளவுக்கு முதலாவது நோக்கு நிலை அழுத்தம் பெறவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. சங்க இலக்கியங்கள் திருக்குறள், சிலப்பதிகாரம், பெரி யபுராணம், கம்பராமாயணம் முதலியன தொடர்பாக இலக்கிய விமர்சன நோக்கிலான நூல்களும், ஆய் வேடுகளும், கட்டுரைகளும் பெருந் தொகையில் எழுதப் பட்டுள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. அத்தகு முயற்சிகளில் புறநிலையான விமரிசனப் பார்வை அழுத்தம் பெறவில்லை என்பதே எனது கணிப்பாகும். குறிப்பாகத் தமிழின் தலையாய இலக்கியங்களாகக் கொள்ளப்படும் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் என்பன தொடர்பான முழுநிலை விமர்சனங்கள் உள்ளனவா என்ற வினாவுக்கு இதுவரை உரியவிடை கிடைக்க வில்லை. வ. வே. சு. ஐயர் ஏறத்தாழ எழுபதாண்டுகட்கு முன்னர் எழுதிய Study of kamban (கம்பராமாயண ரசனை) முயற்சிக்குப் பின் இற்றைவரை கம்பன் முழுநிலையில் விமர்சிக்கப்பட வில்லை. பகுதிபகுதியாகப் பல நிலைகளிற் பார்க்கப்பட்டுள்ளான். அவ்வளவே. சிலப்பதிகாரத்தைப் பற்றியும் இன்னும் முழுநிலைப்பார்வை அமையவில்லை. குறிப்பாக அந் நூலின் உண்மையான மூலபாடத்தை நிறுவிக் கொள்வதற்கான மூலபாடத் திறனாய்வு கூட இற்றைவரை நிறைவாக மேற் கொள்ளப்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும். உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நீதி இலக்கியமான திருக்குறள் பற்றிப் பெருந்தொகை ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. தமிழகத்தில் இரு பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகங்களில் - (சென்னை, மதுரை காமராசர்) - திருக்குறள் ஆய்வுக்கான தவிசுகள் பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றன என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஆயினும் திருக்குறள் தொடர்பான விமரிசனப் பார்வை வளரவில்லை. ஆய்வாளர் பலரும் தத்தந் நோக்கில் வள்ளுவத்திற்கு விளக்கம் தர முயன்றுள்ளார்கள். அவ்வளவே.

இவ்வாறு விமர்சனப் பார்வை அழுத்தம் பெறத் தவறியமைக்கான காரணிகள் இருவகைப்படும். ஒன்று மேலே சுட்டி இரண்டாவது வகையான பண்பாட்டுப் பதிவேடு எனக் கொள்ளும் மனப்பாங்கு ஆகும். அதாவது இவ்விலக்கியங்கள் தரும் சுவையில் உணர்வு பூர்வமாக ஒன்றி இவற்றினூடாகத் தமிழர் பாரம்பரியத்தின் பண்பாட்டுச் செழுமைகளாகக் கொள்ளப்படுவனவற்றில் ஈடுபட்டுத் திளைக்கும் நிலை. தமிழிலக்கிய ஆய்வாளர் பலரிடம் இவ்வாறான ஈடுபாடு பல்வேறு மட்டங்களில் - பல்வேறு தரங்களில் - நிலவுகிறது. இது புறநிலையான (Objective) விமர்சனத்திற்குத் தடையான மனப்பாங்கு என்பதை விளக்கவேண்டுவதில்லை. இவ்வாறு பண்பாட்டுப் பதிவேடாகப் பார்க்கும் நிலையினர் சிலர் இந்த இலக்கிய ஆக்கங்களை உண்மையான வரலாற்று நிகழ்வுகள் என்றே கருதியும் விடுகின்றனர். அதாவது சிலப்பதிகாரம், இராமாயணம் என்பன தரும் கதைகள் உண்மை நிகழ்வுகளே என்ற மயக்கமும் சிலருக்கு உண்டு. வேறு சிலர் இத்தகு இலக்கிய ஆக்கங்கள் எழுந்த காலப்பகுதிகளைப் 'பொற்காலம்' எனப் புனைந்துரைத்து மகிழ்வுறுவதையும் அவதானிக்க முடிகிறது.

இலக்கிய ஆக்கங்களைப் பண்பாட்டுப் பதிவேடுகளாகக் கொள்வது தவறு என நான் கருதவில்லை. அவற்றின் பரிமாணங்களில் அதுவும் ஒன்று என்பது உண்மை. அவ்வாறான பார்வையானது "சமூகம் - பண்பாடு" என்பன தொடர்பான அறிவுபூர்வமான கருதுகோள்களின் தளத்தில் நின்று நிகழ்த்தப்படும்போதே உரிய பயனைத் தரவல்லது. அவ்வாறன்றி வெறும் ஆர்வம், உணர்வுந்துதல் என்பவற்றின் தளத்தில் நின்று செயல்படுதல் தவறான முடிவுகளுக்கே இட்டுச்செல்வதாக அமையும். மேற் குறித்த இலக்கியங்கள் பற்றிய விமர்சனப் பார்வை அழுத்தம் பெறத் தவறியமைக்கு இவ்வாறான வெறும் ஆர்வம், உணர்வுந்துதல் என்பவற்றினடிப்படையிலான பண்பாட்டுப் பார்வைகளே முதன்மையான காரணிகள் எனலாம்.

விமர்சனப் பார்வை அழுத்தம் பெறத் தவறியமைக்கான மற்றொரு காரணி விமர்சகர் பலருக்கு மேற்படி இலக்கிய ஆக்கங்களிற் போதிய பயிற்சி இல்லாமையாகும். சமூகம் பற்றியும் இலக்கியம் பற்றியும் தெளிந்த சிந்தனையுடையோராகத் திகழும் (திகழ்ந்த) தமிழ் விமர்சகர்கள் பலர் தமிழின் சமகால இலக்கியம் சர்வதேச இலக்கியம் என்பவற்றிற் காட்டிய ஆர்வத்தை பண்டைத் தமிழிலக்கியங்களிற் காட்டமுற்படவில்லை. முன்குறிப்படி இவ்விலக்கியங்களைப் பயின்று விமர்சிப்பதற்கான மனப்பாங்கை இவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை என்பதே எனது கணிப்பு. பண்டைத்தமிழிலக்கியங்களில் ஆழமான பயிற்சியுடைய விமர்சகர்கள் பலர் நம்மத்தியில் இருந்தனர். இப்போதும் இந்தகைய சிலர் உளர். இவர்கள் கூட அழுத்தமான விமர்சனப் பார்வைகளை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. பழம் பெருமையைப் பேசி மகிழ முற்படும் சமூகத்தின் மத்தியில் தமது கருத்துக்கள் உரிய கவனத்தைப் பெறா என இவர்கள் கருதியிருக்கலாம். இது என் ஊகமே. இந் நிலை மாறவேண்டும். இதுவே எம் எதிர்பார்ப்பு.

பண்டைத் தமிழிலங்கியங்களை இன்றைய நோக்கில் தரிசிக்க முற்படும்போது முதற்கண் மேற்படி இலக்கியங்கள் பற்றிய பண்டைய பார்வைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதைச் சுருக்கமாகவேனும் சுட்டவேண்டிய கடப்பாடு உள்ளது. (இவ்வாறான பார்வைகள் பற்றிப் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் தமது இலக்கியமும் திறனாய்வும் என்ற நூலிலே விரிவாக பேசியுள்ளார்)

இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையின் அடியாக உருவாகும் ஒரு புலமைச் செயற்பாடு என்பது தமிழிலக்கிய மரபின் தொன்மையான கருத்துநிலையாகும். சங்க இலக்கியமும் அதற்கு இலக்கணம் போன்றமைந்த தொல்காப்பியமும் இதனை உணர்த்துவன.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்'

எனவரும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பா அடிகள் (நூற்பா: 56) மேற்படி கருத்து நிலையைத் தெளிவுறுத்துவன. சங்ககாலத்தில் நிலவிய திறனாய்வுப் பார்வையை அநுகரணக் கொள்கை என்பர். இதில் படைப்பு அதற்குக் காரணமான சமூகத்துடன் தொடர்பு படுத்தி நோக்கப்படும்.

சங்ககாலத்தின் பின் திறனாய்வுப் பார்வையில் வேறு வேறு கருத்து நிலைகள் முதன்மை பெற்றன. குறிப்பாகப் பயன்பாட்டு நோக்கு, வெளிப்பாட்டு நோக்கு என்பன தனிக்கவனம் பெற்றன.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்

தேசிய கலை இலக்கியப் பேரவையால் ஒழுங்கமைக்கப்பட்ட இலக்கியக் கருத்தரங்கில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி. தாயகம் வைகாசி, ஆனி 1995 இதழில் பிரசுரமானதன் மறுபிரசுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதும்

எனவரும் சிலப்பதிகாரப் பதிக அடிகளும் (அடிகள் 55 - 57)

"இந் நூல் என்னுதலிற்றோ எனின் வீடுபேறு நுதலிற்று" என வழங்கும் உரைமரபுத் தொடரும் மேற்சுட்டிய பயனபாட்டு நோக்கினைத் தெளிவுறுத்துவன. இப் பயன்பாடு இருவகை, ஒன்று உலகியல் நிலையில் அறம் ஒழுக்கம் என்பவற்றைப் பேசுவது. மற்றது மறுமை நிலையில் வீட்டின்பம் பற்றிப் பேசுவது. திருக்குறள், சிலப்பதிகாரம் முதலியன அறம் ஒழுக்கம் என்பவற்றைப் பேசுவன என்ற நிலையில் கணிக்கப்பட்டன. பக்தி இலக்கியங்களிலும் புராண நூல்களிலும் சீவகசிந்தாமணி முதலியவற்றிலும் வீடுபேறு என்ற பயன்பாடு தனிக் கவனத்தைப் பெற்றது.

"இந்திரராகிப் பார்மேலின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற்சேர்வர்"

எனவரும் கந்தபுராணப் பாடல் அடிகள் (பாயிரம்: 3 : - 2) சமய நோக்கில் இம்மை மறுமை ஆகிய இரு வகைப் பயன்பாடுகளையும் உணர்த்தி நிற்பது சுட்டிக் காட்டத்தக்கது.

இலக்கிய ஆக்கம் பல்வகைச் சிறப்புக் கூறுகளும் பொருந்தக் கட்டியமைக்கப்படும் ஒரு மாளிகை என்பது வெளிப்பாட்டுக் கொள்கையின் தெளிவு பொருள் ஆகும். அதாவது ஒரு இலக்கிய ஆக்கம் எவ்வாறு சிறப்புற வெளிப்படுகிறது என்பதே இதில் முக்கிய கவனத்தைப் பெறும் அம்சமாகும். கம்பராமாயணம் இக் கொள்கையின் அடிப்படையில் கணித்துப் போற்றப்படும் ஒன்றாகும்.

"புவியினுக்கணியாய் ஆன்றபொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறி அளாவி
கவியுறத்தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவி எனக்கிடந்த கோதாவரி"

(கம்ப ஆரணிய பஞ்சவடி : 1)

எனவும்

நல்லியற்கவிஞர் நாவற்பொருள்குறித் தமர்ந்தநாமச்
சொல்லென சொற்கள் கொண்ட தொடையெனத் தொடையை நீக்கி
எல்லையில் சென்றும் தீரா இசையெனப் பழுதிலாத
பல்லலங்காரப் பண்பு"

(கம்ப யுத்த : கும்ப : 22)

எனவும் கம்பனே இக் கொள்கைக்கு விளக்கம் தந்துள்ளமை சுட்டத் தக்கது. தமிழில் எழுந்துள்ள அணியிலக்கண நூல்கள் பலவும் மேற்படி வெளிப்பாட்டுக் கொள்கைக்கு விளக்கம்தரும் பண்பினவேயாம்.

மேற்குறித்தவாறான பார்வைகளில் பயன்பாட்டுக் கொள்கை, வெளிப்பாட்டுக் கொள்கை என்பனவே தமிழிலக்கியப் பெரும்பரப்பில் பெருமளவு செல்வாக்குச் செலுத்திவந்துள்ளன. இலக்கியங்களை மதிப்பிடுதல் உரையெழுதிப் பேணுதல் முதலியவற்றில் இவற்றின் செல்வாக்கை மிகுதியும் அவதானிக்க முடியும் குறிப்பாகச் சமய உணர்வடிப்படையிலான பயன்பாட்டுக் கொள் கையே தனியாட்சி செலுத்திவந்துள்ளதென்றும் கூற லாம். இதனால் இலக்கியம் அது எழுந்த சமூகத்துடன் எந்த அளவு தொடர்பு கொண்டுள்ளது என்பது சிந்திக் கப்படாமலே விடப்பட்டது என்பதையும் உய்த்துணர முடிகிறது. அதாவது சராசரி மனிதனது வாழ்க்கைமுறை, பழக்க வழக்கங்கள், உணர்வோட்டங்கள், இன்பதுன்ப அநுபவங்கள் என்பவற்றினின்று வெகுதூரம் விலகிநின்ற ஒன்றாகவே தமிழின் பண்டைய இலக்கியப் பரப்பின் பெரும்பகுதி பேணப்பட்டனவாக எமக்குக் கிடைக்கும் இலக்கியப்பரப்பின் பெரும்பகுதி - காணப்படுகின்றது என்ற கசப்பான உண்மை இங்கு நம் கவனத்துக் குரியதாகிறது. குறிப்பாகச் சங்ககாலத்தின் பின்னர் எழுந்த இலக்கியங்கள் (கி. பி. 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதிவரை எழுந்தவை) தாம் எழுந்த காலப்பகுதியின் முழுமையான உண்மையான சமூகக் காட்சியை எமக்குத் தரவில்லை; தத்தம் நோக்குக்கு ஏற்பச் சமூகத்தின் குறித்த சில பகுதியினரின் - அதாவது சமூக நிலையில் உயர்ந்தோர் எனக்கருதப்பட்ட சில பகுதியினரின் உணர்வுகளின் பதிவேடுகளாகவே அமைந்தன. இக் கருத்தைப் பேராசிரியர் க. கைலாசபதியவர்களும் தமது 'இலக்கியமும் திறனாய்வும்' நூலில் புலப்படுத்தி யுள்ளார் என்பதும் இத்தொடரிற் சுட்டத்தக்கது.

சமூக வாழ்க்கையுடன் ஓரளவு நேரடித் தொடர்பு பூண்டன எனப்படும் சங்கப் பாடல்கள் கூட முழுநி லையில் அத்தகு கணிப்புக்கு உரியன அல்ல. அவற்றிற் புலமை மரபின் செல்வாக்கு உளது. அன்றியும் அன்றைய சமூகத்தின் மேட்டுக் குடியினரின் உணர்வு நிலைகளின் பிரதிபலிப்புக்களாகவே அவற்றுட் பல அமைந்தன என்ற கருத்தும் உளது. இப்பாடல்களுக்கு இலக்கணம் போன்றமையும் தொல்காப்பியம் அன்றைய காலப்பகுதியில் ஆதிக்கம் எய்திய வர்க்கம் ஒன்றின் பண்பாட்டு நடவடிக்கையாகவே கருதப்படுகின்ற தென்பதும் இத்தொடர்பிற் சுட்டத்தக்கது.

பண்டைத் தமிழிலக்கியப்பரப்பை இன்றைய நோக்கிற் புரிந்து கொள்ள முற்படும்பொழுது மேற்குறித்தவாறான பல்வேறு அம்சங்களையும் நினைவிற்கொண்டு அணுகுவது அவசியமாகிறது. ⊡

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் மாற வேண்டும்

மு. தயாளன்



*தமிழ்ப் பெண்கள் வெளிப்படையானவர்கள் இல்லை என்பது அவன் கருத்து. தமிழ்ப் பெண்கள் நேரே எதுவும் கதைக்காது பல ரகசியங்களோடு வாழ்பவர்கள் என்பதும் அவனது அனுமானம்..*

அன்று அவன் என் முன் வந்து "அப்பா, உங்களோடு நான் கதைக்க வேண்டும்" என்றான்.

பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த நான் அவனை என் முன்னால் இருந்த கதிரையில் அமரும்படி கூறிவிட்டு நிமிர்ந்து பார்த்தபடி 'ஆரம்பி' என்பதுபோல் முகத்தை வைத்துக் கொண்டேன்.

அவன் எனது மூத்தமகன். பொறியியலாள ராகப் படித்துவிட்டு வேலை செய்து கொண் டிருக்கிறான். தினேஸ் அவன் பெயர்.

அவனுடைய வயது முப்பத்தியொன்று. பல பெண்களைப் பெற்றவர்கள் தினேசைக் கேட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் தினேஸ் எதற்கும் தலையாட்டவில்லை. இவை அவனுடைய இருபத்தைந்து வயதில் தொடங்கி விட்டது.

வயது அதிகரித்துக் கொண்டிருந்தது.

"அவன் ஆரையோ பார்த்துவிட்டான். அவனாய் வரட்டும்" என்று என் மனைவி அடிக்கடி சொல்லிக் கொள்வாள்.

அவன் கொண்டு வருவதாக இருந்தால் வெள்ளைப் பெண்ணாகவோ அல்லது காப் புலிப் பெண்ணாகவோ தான் இருக்கும்... தமிழ், இந்தியப் பெண்களில் அவனுக்கு நாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்ப் பெண்கள் வெளிப்படையானவர்கள் இல்லை என்பது அவன் கருத்து. தமிழ்ப் பெண கள் நேரே எதுவும் கதைக்காது பல ரகசியங் களோடு வாழ்பவர்கள் என்பதும் அவனது அனு மானம். எதற்கெடுத்தாலும் அழுது சாதிக்கப் பார்ப்பார்கள் என்று அடிக்கடி நக்கலாகக் கூறுவான்.

நாங்கள் அவனை ஒழுங்காகத்தான் வளர்த் திருந்தோம். அவன் சிறுவனாக இருக் கும்போது ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் கோயிலுக்கு எங்களோடு அழைத்துச் செல் வோம். எங்கள் பண்பாட்டை பழக்க வழக் கங்களைச் சொல்லிச் சொல்லியே வளர்த்தோம். ஆனால் எங்கோ ஓரிடத்தில் எங்கள் வளர்ப்பு முறையில் தவறு நடந்துவிட்டதோ என இப்போது நினைக்கிறேன். நாங் கள் சொல்லிக் கொடுத்த பண்பாடுகளில் ஏதும் தவறோ?

எனக்கு முன்னால் இருந்த தினேஸ் என்னைப் பார்த்து;

"அப்பா நான் என்னோடு வேலை செய்கிற கத்தரினை விரும்பிறன்" என்று ஆங்கிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான். அவன் எங்களோடு எப்பவும் ஆங்கிலத்தில் தான் உரையாடுவான்.

இவன் தமிழ் கதைக்க வேண்டுமென்பதற் காக சிறுவயதில் தமிழ்ப் பாடசாலை களுக்குக் கொண்டு சென்றிருக்கிறோம்.

அவன் எங்களின் கட்டாயத்துக்காக வரு வான். நான் ஏன் தமிழ் படிக்கவேண்டுமெனக் கேட்பான். இதற்கான வலிமையான பதில் எனக்கோ என் மனைவிக்கோ தெரிவதில்லை. பொதுவில் தமிழ் எங்களின் தாய்மொழி அதனால் கற்கவேண்டு மெனக் கூறுவோம். சிறுவயதில் கேட்டுக் கொண்ட அவன் வளர வளர எங்களின் பதிலைப் பார்த்து நகைக்கத் தொடங்கிவிட்டான். தமிழ் மொழியை நான் இந்த நாட்டில் எங்கும் பாவிக்கப் போவதில்லை. அப்படியிருக்கத் தான் ஏன் படிக்க வேண்டுமெனக் கேட்பான்.

நாங்கள் இதற்குப் பதில் சொல்வதில்லை. ஏனென்றால் எங்களுக்குத் தெரிவதில்லை.

எனக்கு முன்னால் இருந்து தான் கத்தரினைக் காதலிப்பதாகச் சொல்கிறான். எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை.

அவள் எங்களின் சமயத்தைச் சேர்ந்த வளல்ல. எங்களின் கலாசாரத்தினைச் சேர்ந்தவளுமல்ல.

"உது எங்களுக்குச் சரிப்பட்டு வராது தம்பி" நான் சொல்கிறேன்.

"ஆனால் நான் அவளைத்தான் காதலிக் கிறேன். அவளைத்தான் கல்யாணமும் செய்வேன்." எந்த விதமான தயக்கமுமின்றி நெற்றியிலடித்தாற்போல் சொன்னான்.

இவன் கதைக்கின்ற முறையும் எங்களது பண் பாடு இல்லையே. ஆனால் இவன் என் மகனா யிற்றே. நான் என்றுமே அப்பாவின் வார்த்தைக் கெதிராகக் கதைத்ததில்லையே!

குழம்பிப்போய் அவனையே பார்த்துக் கொண் டிருக்கிறேன். இந்த உலகத்தில் என்னவோ எல்லாம் நடக்கிறது.

கத்தரினைப்பற்றிக் கூறிவிட்டு என் பதிலுக் காகக் காத்திருந்தான்.

"தம்பி நீ காதலிக்கிறது எனக்குப் பிரச்சினை இல்லை. யாரைக் காதலிக்கிறாய் என்பதுதான் பிரச்சினை." என்று கூறினேன்.

"ஏன் கதரினுக்கு என்ன பிரச்சினை" என்று கேட்டான் என்பதைவிட சத்தமிட்டான் என்பதே பொருத்தம்.

நான் பேசாமல் இருந்தேன். மனதுக்குள் வெள்ளையினப் பெண்களைப்பற்றிச் சமூகம் கதைப்பதைப்பற்றி நினைத்துக் கொண்டேன். அன்று ஒரு நாள் என் நண்பன் கூறியதை உங்களோடு பகிர்கிறேன்.

"வெள்ளைக்காரப் பெட்டையளைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் மச்சான்" என்று கேட்டேன்.

அதற்கு அவன் "மச்சான் உவளவை கலி யாணத்துக்கு முதல் எல்லாம் செய்வாளவை. கலியாணம் கட்டியிட்டால் கண்ணகியாய் மாறி விடுவாளவை" என்றான்.

அவனுடைய வார்த்தைகள் என் நெஞ்சைச் சுள்ளென்று குத்தின. இப்போ என் மகன் ஆங்கிலப் பெண்ணை விரும்புவதாக வந்து நிற்கிறான். எப்படி அவளை என் வீட்டு விளக்கை ஏற்ற வரும் மருமகளாக ஏற்க முடியும்.?

"அப்பா உங்கடை மனதிலை வெள்ளைக் காரப் பெண்களைப்பற்றி யாரோ தவறாகச் சொல்லிப் போட்டினம்"

"ஆரும் எனக்குச் சொல்லவில்லை. எங்கடை பண்பாடு தெரியாத ஒரு பெண்ணால் எப்படி எங்களோடை வாழமுடியும்"

"வாழ முடியும் அப்பா. பண்பாடு என்பது வாழும் முறைதானே. அதை அவளுக்குச் சொல்லிக் கொடுத்தால் சரியாகிவிடும்"

என்று கூறிவிட்டு என் பதிலுக்குக் காத்திராமல் எழும்பிச் சென்றுவிட்டான்.

எனக்குக் குழப்பமாகிவிட்டது.

"அவன் சொல்வதும் சரிதானே" என்று மனம் ஆறுதல்படத் தொடங்கியது.

அதற்கேற்றாற்போல் என் மனைவியும் "அவன் சொல்லிறதும் சரிதானேயப்பா" என்று கூறினாள். அவளுக்கு எதுவும் பதில் கூறாமல்;

"நான் ஒருக்கால் வெளியிலை போட்டு வாறன்" என்று புறப்பட்டேன்.

"இஞ்சரும் வரேக்கை தமிழன் கடையிலை ஒரு மீன் பைக்கற் வாங்கி வாறியளே" என்றாள். தலையாட்டிக் கொண்டே புறப்பட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய மனதுள் பண்பாடு பற்றிய சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது.

எங்கடை பண்பாடு எது என்று கேட்டால் நான் என்ன சொல்வது.

சாறி கட்டுவது பண்பாடோ? இல்லை. தமிழ் கதைப்பது பண்பாடோ இல்லை. சைவசமயியாக இருப்பது பண்பாடோ! இவற்றை நினைக்க நினைக்க மனம் குழம்பித் தலை சுற்றத் தொடங்கி விட்டது.

சரியான முடிவுக்கு வராமல் கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்தேன்.

"அங்கிள்... அங்கிள்" யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என்னுடைய நண்பர் ஒருவரின் மகன்தான் கூப்பிட்டுக் கொண்டே என்னை நோக்கி வந்து கொண் டிருந்தான்.

நின்று நிதானித்து அவனைப் பார்த்தேன். அவனோடு ஒரு வெள்ளைப் பெட்டையும் வந்து கொண்டிருந்தாள். அவள் சாறி கட்டிக் கொண்டு வந்திருந்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்ன மகேஸ் எங்கை போறியள்? என்று கேட்டேன்.

"நாங்கள் கோயிலுக்குப் போறம்" என்றான்.

எங்கள் கோயிலுக்கு இந்தப் பெண்ணுமா? வியந்து போனேன்.

"என்ன அங்கிள் திகைச்சுப்போய் நிற்கிறியள். மேரி எங்கடை கோயிலுக்கு வாறதை ஏற்றுக் கொள்ள முடியவில்லைப்போலை. இதெல்லாம் சாதாரணம் அங்கிள். காலைமை மேரியும் நானும் முருகனைக் கும்பிட்டிட்டுப் பின்னேரம் நானும் அவவும் சேர்ச்சுக்குப் போய் யேசுவைக் கும்பிடுவம்."

எனக்கு என்ன பதில் சொல்லிறதெண்டே தெரியவில்லை. ஒரு மாதிரிச் சமாளித்துக் கொண்டு "சரி..சரி போயிட்டு வாங்கோ" என்றேன்.

"போயிட்டு வாறம் அங்கிள்"

என்னை நுள்ளிப் பார்த்தேன். சொன்னது அந்த வெள்ளைக்காரப் பெட்டை.

சரியாகக் குழம்பியிட்டன்.

நண்பன் நாகேந்திரனைச் சந்திச்சு வருவம் என எண்ணியபடி நடக்கத் தொடங்கினேன்.

நாகேந்திரத்தின் மகனும் ஒரு வெள்ளைப் பெட்டையையே கல்யாணம் முடித்தவன். எனக்கு அந்தக் கல்யாணம் பிடிக்காமல் அதற்குப் பிறகு நாகேந்திரத்தை நான் சந்திக்கவேயில்லை.

இன்று அவனிடம் போகச் சொல்லி குழம்பிய மனது உந்தியது.

நாகேந்திரம் வீட்டு மணியை அடிக்கிறேன். கதவு திறக்கப்படுகிறது. கதவைத் திறந்தவள் அவனின் மருமகள்.

"வாங்கோ... வாங்கோ.. மாமா இப்ப வந் திடுவார்.." என்று அவள் ஆங்கிலத்தில் என்னை வரவேற்றவிதம் என்னைக் கிறங்க வைத்தது.

"தேநீர் வேண்டுமா" எனக் கேட்கிறாள். "சாப்பிட்டுப் போகலாமே" என்கிறாள். அவ ளது அந்த விருந்துபசாரம் என்னை வியப்போடு பார்க்க வைத்தது.

ஒரு நண்பனின் மருமகள் வெள்ளைக்காரப் பெண்ணாக இருந்தாலும் எங்களைப் போல் வாழ்கிறாள். எவ்வளவு பவ்வியமாக வர வேற்கிறாள்.

அவளுடைய வரவேற்பு எனனைப் புள காங்கிதப்படுத்தியது.

எனக்குள் மலைபோல் இருந்த பல விடயங்கள் நொருங்கி விழுவது போன்று நான் உணர்ந்தேன்.

மனதுக்குள் பல இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டன.

மகன் சொன்னது நினைவுக்கு வருகிறது.

'பண்பாடு என்பது வாழும் முறைதானே.'

இந்த வாழும்முறை என்பது எனக்குப் புரிந்துவிட்டது.

இங்கே மொழியும் உடையும் சமயமும் வெறும் அடையாளங்கள் மட்டுமே. வாழும் முறை என்பது இவற்றிற்கப்பால் சென்று 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதைத் தொட்டு நிற்பதை உணர்ந்துவிட்டேன். நான் மாற வேண்டும் என்று மனம் என்னை உந்தித் தள்ளியது.

ஒருவித உறுதியோடு வீட்டை நோக்கி எட்டி நடந்து கொண்டிருந்தேன். ⊡

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தம், மாக்ஸிசம் இரு தத்துவங்களும் பற்றிய ஒப்பு நோக்கு

## பி. முத்துலிங்கத்தின் கட்டுரை பற்றிய கருத்தாடல்

இதயராசன்

பௌத்தம், மாக்ஸிசம் இரு தத்துவங்களும் பற்றிய ஒப்பு நோக்கு என்ற பி. முத்துலிங்கத்தின் கட்டுரை, சமகாலத்தில் மாக்ஸிசம் பற்றிய புரிதலுக்கு உதவக்கூடிய ஒரு முயற்சி என்ற வகையில் முக்கியம் பெறுகின்றது.

புத்தர் கண்ட உண்மைகள், அவர் போதித்தவை என்ற வகையிலேயே அவற்றினை மாக்ஸிசத்துடன் ஒப்பு நோக்கமுடியும். தற்போது வழக்கிலுள்ள தேரவாதம், மகாஜானம், நேபாளத்திலுள்ள வச்சிரஞானம் மூன்றுமே கடவுள், ஆத்மா, சொர்க்கம், நரகம், கன்மம் மறுபிறப்பு என்பவற்றை ஏற்றுக்கொண்ட பிராமணியத்தின் சடங்கு சம்பிரதாயங்களை உள்வாங்கிய மதமாகவே திகழ்கின்றன. எனவே மேற்குறித்த தெளிவுடனேயே ஒப்பு நோக்கல் செய்யப்படல் வேண்டும்.

மாக்ஸியம் என்பது கருத்து முதல்வாதத்தினை முற்றாகவே நிராகரித்த, இயங்கியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தை, அடிநாதமாகக் கொண்ட, செயல்முறை சார்ந்த தத்துவமாகும்.

கட்டுரை ஆசிரியர் புலமைத்துவத்துடன் கட்டுரையை நகர்த்திச் சென்றாலும், பின்வரும் விடயங்களில் முரண்பாடு நிலவுவதாக அவதானித்துள்ளேன்.

1. புத்தர், பிராமணிய வேதத்தை ஏற்கவில்லை. உபநிடதங்களைக் கற்றார் என்பதில் தெளிவீனம் நிலவுகின்றது. புத்தர் தனது காலத்தில் வழக்கிலிருந்த அனைத்து மதங்களையும், தத்துவங்களையும் ஆர்வமாகக் கற்றறிந்தவர். ஆகையினால்தான் அவற்றினை நிராகரித்து, தனக்கான புதிய வழியைக் கண்டடைந்தார்.

இந்து தத்துவ அறிஞர்களான லக்ஷ்மணன், இராதாகிருஷ்ணன், ஹிரியண்ணா, ரி.எம்.பி. மகாதேவா போன்றோர் குறிப்பிடுவதுபோல உபநிடதங்களுக்கு நெருக்கமான கருத்துக்களைப் புத்தர் கொண்டவரல்ல. வேதோபநிடதங்களை முற்றாகவே நிராகரித்தார். குறிப்பாக உபநிடதத்திலுள்ள பிரமம், ஆத்மா என்பவற்றை எதிர்த்து அநாத்மவாதத்தை முன்வைத்தார் என்பதே உண்மை.

2. வைதீக தத்துவவாதிகள் முழுமையான கருத்து முதல்வாதிகள். அவர்கள் பிரபஞ்சத்தை அதாவது பருப்பொருளை முதலாக ஏற்றுக்கொள்வதில்லை. கடவுள், ஆத்மா என்பவையே முதல்நிலையில் உள்ளன. புற உலகம் ஒரு தோற்றம் - மாயை என்பவர்கள். நிலைமை இப்படி இருக்க, அவர்கள் புற உலகையும், ஆத்மாவையும் ஏற்றுக்கொண்டார்கள் என்பதில் அடிப்படையிலேயே தவறுள்ளது.

மேலும் புத்தர் அவை இரண்டையும் நிராகரித்தார் என்பதும் அடிப்படை இல்லாத கருத்தாகும். புத்தரின் இயங்கியல் கோட்பாட்டை என்னென்பது. பொருள் இருக்கிறது. ஆனால் கணத்திற்குக் கணம் மாறிக் கொண்டே இருக்கிறது என்பதே புத்தர் சொன்னது. பொருள் இல்லாவிட்டால் எது மாறுகின்றது? என்று வினவின் தவறு புரியும்.

3. புத்தர் பொருள் முதல்வாதியும் இல்லை. கருத்து முதல் வாதியும் இல்லை என்பதும் அடிப்படையில் தவறானதாகும். புத்தர் கருத்து முதல் வாதி இல்லை என்பது சரி. ஆனால் பொருள் முதல்வாதி அல்ல என்பது எதன் அடிப்படையில்? அன்றைய காலத்திலுள்ள பொருள்முதல்வாதிகள், நிலையியல் வாதிகளாகவும், அழிவுவாதிகளாகவும் இருந்தனர். அது உண்மையில் விஞ்ஞான அடிப்படை இல்லாதது. அன்றைய பொருள்முதல்வாதிகளுடன் உடன்படவில்லை என்பதற்காக ஒரேயடியாக எதிர்திசையில் புத்தரை நிறுத்தமுடியாது. இயக்க மறுப்பியல் பொருள் முதல் வாதத்தையே புத்தர் நிராகரித்தார். புத்தர் காலத்தில் அதற்கான கலைச்சொல் இல்லாண்மையே மத்தியம மார்க்கம் என்று அழைத்தார்.

புத்தர் கணத்திற்குக் கணம் யாவும் மாறிக்கொண்டே இருக்கின்றது என்பதன் மூலம் பிரபஞ்சத்தையோ, பருப்பொருட்களையோ மறுக்கவில்லை. அவை இல்லாவிட்டால் எவை மாறிக்கொண்டிருக்கும். உண்மையில் அவர் இயங்கியல் பொருள்முதல்வாதியாக இருந்தார். ஆனால் மாக்ஸ் கண்டடைந்த அளவுக்கு, முன்னேறி இருப்பார் என்று சொல்ல முடியாது.

காரணம் அன்றுள்ள அறிவியல் முன்னேற்றத்திற்கும், காலச் சூழ்நிலைக்கு ஏற்ற அளவிலேயே அவரது சிந்தனைகளும் முன்னேறி இருந்திருக்கும். ஆனால் 2500 வருடங்களுக்கு முன்னர் ஜேர்மன் தத்துவ அறிஞர் ஹெகலுக்கும், கிரேக்க அறிஞர் ஹெராக்கிளிட்டஸுக்கும் முன்னரே, முன்னேற்றகரமாக இருந்தது என்றவகையில் புத்தர் முக்கியத்துவம் பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் இயற்கை கடந்த எதுவுமே இல்லை என்றார். இயற்கையைக் கட்டுப்படுத்தும் கடவுள் இல்லை. பிரபஞ்ச விதியே அனைத்தையும் தீர்மானிக்கின்றன என்றதற்கு மேல் அவரால் செல்ல முடியவில்லை. ஆனால், அதனைக் கண்டடைந்து பயன்படுத்துவதிலேயே மனிதனின் ஆற்றல் தங்கியுள்ளது என்ற முடிவுக்கு மாக்ஸியம் சென்றடைந்தது.

மேலும் கூடுவிட்டுக் கூடுபாயும் நிரந்தரமான ஆத்மா என ஒன்றுமில்லை. மனிதன் பஞ்ச ஸ்கந்தங்களால் ஆனவன். அதில் நாமம் என்னும் சடப்பொருட்களும், ரூபம் என்னும் உளவியல் சார்ந்த நான்கும் உள்ளன. அவை கணத்திற்குக் கணம் மாறுகின்றன. அதற்குமேல் எதுவுமில்லை மனித இனம் பரம்பரையாக பிறப்பதற்கு, நிலம், நீர், தீ, காற்று ஆகிய மூலகங்கள் உதவியாக இருக்கின்றன என்ற வகையிலேயே மறுபிறப்பை ஏற்றுக்கொண்டார்.

மாக்ஸ்சும், ஏங்கல்சும் உலக மக்களின் வறுமைக்கும், சமூக நீதி மறுக்கப்பட்டமையாலும் படுகின்ற துன்பத்தை நீக்குவதற்கான தேடலை மேற்கொண்டே, தமது கோட்பாடுகளை வகுத்தளித்தனர். அவ்விதமே புத்தர் தனது காலத்தில், புராதனப் பொதுவுடைமைச் சமூகத்தின் எச்ச சொச்சமான இனக்குழு வாழ்முறையும், முற்றாகவே அழிவுற்ற காலகட்டத்தில், மக்கள்பட்ட துக்கத்தினை மாற்றுவதற்கான தேடலின் மூலமாகவே, துக்க நீக்கத்திற்கான நான்கு வழிமுறைகளைக் கண்டடைந்து மக்களுக்குப் போதித்தார்.

புத்தர் அவரது காலத்தில், ஒரு புரட்சியாளராக மாறுவதற்கான சூழல் நிலவவில்லை. ஆனால் அதற்கான தெளிவை மக்களுக்குப் போதித்தார். அவர்கள் சென்றடைய வேண்டிய இலட்சிய வாழ்முறையைத் தமது மும் மணிகள் மூலம் உணர்த்தினார்.

புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி. என்பதை மதித்து வாழவேண்டும் என்று போதித்தார். இன்று இவை சிரழிந்து போனவை அவரது தவறல்ல. புத்தம் என்பது, புத்தரை அல்ல அறிவு என்னும் புத்தியை என்பதே உண்மைப் பொருளாகும்.

புத்தர் அன்றைய பிராமணியத்தினரின் சமூகநீதியை மறுதலித்த, வர்ணாச்சிரம தர்மத்தை அடித்து நொறுக்கினார் என்றவகையில், தத்துவரீதியில் புத்தர் புரட்சியாளராகவும், சமுதாய இயங்கு தளத்தில் ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.

இன்றைய இளைய சந்ததியினர் புத்தர் பற்றிய மறுவாசிப்பு, மாக்ஸிசத்தை சமூக மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு வலுச்சேர்க்கும் என்ற வகையில் பயனுள்ள கட்டுரை என்றே சொல்லவேண்டும்.

*மாக்ஸ்சும், ஏங்கல்சும் உலக மக்களின் வறுமைக்கும், சமூக நீதி மறுக்கப்பட்டமையாலும் படுகின்ற துன்பத்தை நீக்குவதற்கான தேடலை மேற்கொண்டே, தமது கோட்பாடுகளை வகுத்தளித்தனர். அவ்விதமே புத்தர் தனது காலத்தில், புராதனப் பொதுவுடைமைச் சமூகத்தின் எச்ச சொச்சமான இனக்குழு வாழ்முறை யும், முற்றாகவே அழிவுற்ற காலகட்டத்தில், மக்கள்பட்ட துக்கத்தினை மாற்றுவதற்கான தேடலின் மூலமா கவே, துக்க நீக்கத்திற்கான நான்கு வழி முறைகளைக் கண்டடைந்து மக்களுக்குப் போதித்தார்.*

மிகவும் நுணுக்கமாக ஒப்பீடு செய்து, மாக்ஸிசம் பௌத்தம் பற்றிய புரிதலுக்கு கட்டுரையாளர் முயற்சி செய்துள்ளார். புத்தரின் பிரதித்ய சமுத்பாதக் கொள்கைப் படி, ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் இருக்கவேண்டும் என்ற தர்க்கவியலை அடிப்படையாகக் கொண்டே கடவுள் இல்லை என்பதையும். அநாத்மவாதத்தினையும் முன்வைக்கின்றார்.

கணத்திற்குக் கணம் மாறும் கொள்கையைப் பௌத்தத்தின் தேரவாதம், மஹாஞானப் பிரிவுகள் நிறையவே குழப்பி வைத்துள்ளன. அதேபோலவே வைதீக தத்துவாதிகளும் செய்துள்ளனர். ஆனால் மாக்ஸின் தத்துவ ஒளியில் இதனைப் பார்ப்பவர்களால் மட்டுமே, கணத்திற்குத் கணம் மாறும் தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

மாற்றம் என்பதே மாறாதது என்ற, வசனத்தை மட்டுமே எடுத்தாள்பவர்கள் எல்லோரும் மாக்ஸின் இயங்கியல் பொருள் முதல் வாதத்தினையும், சக்திக் காப்பு விதியின்படியும் பிரபஞ்சத்தில் பருப்பொருள்கள் கணத்திற்குத் கணம் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. அவை ஒன்று இன்னொன்றாக மாறுமே தவிர, அழிவதில்லை என்பதையும் அறிவார்களா?

மனிதன் என்பவன் சடப்பொருளாலும் அதுசார்ந்த உளவியல் சார்ந்த கூறுகளாலும் ஆனவன். இதில் உணர்வு அதனோடு சேர்ந்த மனம் என்பவை நிஜமானவையே. ஆனால் அவையாவும் பொருள் சார்ந்தவை. அவற்றினை நிலைக்களனாகக் கொண்டவை. பொருள் வேறொரு சக்தியாக மாறும்போது அவையும் இல்லாமல் போய்விடும். இதுவே விஞ்ஞானமும், மாக்ஸிசமும், புத்தரின் கொள்கையுமாகும். ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரமாயிரம் சொற்கள்

பெருவெளி மௌனத்தில்
மலரும் பூக்களின்
ஆர்ப்பரித்தலுக்கு ஆயிரமாயிரம்
சொற்கள் வேண்டியிருக்கின்றன.
சப்தமின்றி வழியும்
அகதியின் கண்ணீரொப்ப
சொற்களையுடைத்து மௌனமாய்
உதிர்ந்து விழுகின்ற
பூக்களுக்கு
ஒற்றைச் சொல்லே
மோட்சத்தை தந்துவிடுகிறது

•

வெய்யில் குடித்துலரும்
உதடுகளைப் போன்றது
நெடுஞ்சாலையில்
விர் விர்ரென
பறந்து கொண்டிருக்கும்
வாகனங்களை
வேடிக்கை பார்த்தல்.
மீண்டுமொரு மழைக்காக
ஏங்குகின்றன
தூசி படர்ந்து பச்சையமிழந்த செடிகள்.
கல்லெறிந்த குளத்தின் மீதெல்லாம்
தார் ஊற்றி ஒய்யாரமாய் செல்கிறார்கள்.
ஈரம் சுகிர்த்த கற்கள் எப்போதும்
சாலையோடு ஒட்டாது ஒதுங்கியேயிருக்கின்றன
நீர்மை வற்றிய
நினைவு வட்டங்களில்
என்றோ எறிந்த கற்களைத்
தேடிக்கொண்டிருக்கும்
பிறழ்வு மனிதரைப்போல்
நின்றும் நடந்தும்
அமர்ந்தும் படுத்தும்
வேடிக்கை பார்க்கிறேன்
வீசிய சொற்களைப்போல்
சேகரித்த கற்கள் என்னிடமுள்ளன
நீருள்ள குளத்தைக் காட்டுங்கள்
நினைவின் பசிய வளையங்களை மீட்கலாம்

•

ஒரு பைத்தியக்காரனின்
புல்லாங்குழலுக்குள்
விளங்கமுடியாச் சொற்கள்
உதிர்ந்துகொண்டிருக்கின்றன.
அச்சொற்களை சேகரிக்கும்
என்னை நீங்கள்
பைத்தியக்காரனென விளிப்பதைத்தான்
விளங்கிக்கொள்ள முடியவில்லை

•


பசி தீரா அலகு
தானியங்கள் சேகரிப்பதை
நிறுத்துவதில்லை
புதிய
சொற்களை கண்டடைவதுபோல்

•

ஒரு
நாடற்ற ஏதிலிபோல்
தம் சொற்களை
இழந்து நிற்கும்
துர்ப்பாக்கியவாதிகள்
அதிகாரம் எறிந்த
சொற்களால் உழல்பவர்களும்
நிராகரிப்பின்
சொற்களுக்குள் உழல்பவர்களும்

•

அதிகாரம்
அச்சமூட்டும் சொற்களை மட்டுமே
எறியும்



**சுகன்யா ஞானசூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கடந்துபோகும் யாழ் நூலக எரிப்பின் நினைவுகள்

**நூலக எரிப்பின் வழியாக எமது இனத்தின் கலாசாரத்தை, முதுசொத்தை அழித்துத் துடைத் தெறிய முனைந்த கயவர்களின் விருப் பத்தை இன்று எங்களது அறியாமையாலும் அக்கறை யின்மையாலும் நாங்களே எங்களது கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கிறோம்.**

என்.செல்வராஜா
நூலியலாளர்-லண்டன்

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையம் கயவர்களின் தீக்குச்சி உரசலால் எரியுண்டுபோன எமது கலாசாரப் பெட்டகத்தின் நாற்பதாவது ஆண்டின் சம்பிரதாய நினைவுகூரல்கள் இதோ எம்மைக் கடந்து போகின்றன. மீண்டும் ஒரு நினைவுகூரலுக்காக அடுத்த ஆண்டும் மே, ஜூன் மாதங்களில் நாங்கள் விழித்துக்கொள்வோம். அதற்கிடையில் மேலும் பல கிடைத்தற்கரிய அரிய ஆவணங்களை நாங்கள் தொலைத்துவிட்டிருப்போம்.

1970 வரைக்குமான யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆரம்பகால வரலாறு க. சி. குலரத்தினம் அவர்களால் ஆவணமாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி வந்த 'ஈழநாடு' நாளிதழில் 20.07.1982 முதல் 19.08.1982 வரை தொடர்ச்சியாக இக்கட்டுரைத்தொடர் வெளிவந்தது. இடப்பற்றாக்குறை காரணமாக 19.08.1982 அன்று 'இனித் தொடராது" என்ற முடிவுக்குறிப்புடன் ஈழநாடு நிர்வாகத் தால் இவ்வரலாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அமரர் க.சி.குலரத்தினம் அவர்கள் 1981இல் எரியூட்டல் வரை அத்தொடரை எழுதத் தயாராகியிருந்தார் என் பதை நான் அறிந்திருந்தேன். பத்திரிகைத்தாள் தட்டுப் பாடு என்ற போர்வையின்கீழ் ஒரு வரலாற்றுத் தொடர் பொறுப்பற்ற விதத்தில் பத்திரிகை நிர்வாகத்தினரால் முடி வுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அமரர் குலரத்தினம் அத்தொடரை பின்னர் தொடர்ந்து எழுதி முடிக்கவே யில்லை. இத்தொடர் கட்டுரையே யாழ்ப்பாணப் பொது நூலக ஆரம்பகால வரலாற்றை விரிவாகக் கூறும் முதலாவது ஆவணமாகும். இது பின்னர் எஸ். பொ., கலாநிதி வே. இ. பாக்கியநாதன் ஆகியோரின் கட்டுரை களுடன், 'யாழ்ப்பாணம் நூல்நிலையம் - ஓர் ஆவணம்" என்ற தலைப்பில் அவுஸ்திரேலியா- மித்ரா வெளியீட் டகத்தினூடாக பெப்ரவரி 1997 இல் வெளியிடப்பட்டிருந்தது.

ஈழநாடு தொடரின் பின்னர் யாழ்ப்பாண மாநகர சபையால் ஜூன் 1984இல் 'மீள்விக்கப்பெற்ற கட்டடத் திறப்பு விழா ஞாபகார்த்த மலர்" என்ற ஆவணம் வெளிவந்தது. பின்னர் 1989இல் சார்ள்ஸ் ஜங்கரன் என்ற அன்றைய பாடசாலை மாணவனின் 'அணையாத அறிவாலயம்" என்ற நூலக எரிப்பு தொடர்பான சிறிய கவிதைத் தொகுப்பொன்று வெளிவந்தது. அதன் பின்னர் நீண்ட கால இடைவெளியில் 2001இல் 'யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு" என்ற என். செல்வராஜாவின் ஆவண நூல் வெளிவந்து ஈழத்தமிழர் களை மாத்திரமல்லாது உலகத் தமிழர்களையும் யாழ் நூலகம் பற்றிய வரலாற்றுத் தேடல்களுக்கு உட்படுத்தி யிருந்தது.

யாழ்.பொது நூலக வரலாறு தொடர்பான பல்வேறு நினைவுப் பதிவுகளின் எழுச்சியை 2001இன் பின்னர் பல்வேறு நூல்களின் வழியாகவும், ஆவணப் படங்களின் வழியாகவும் அறியமுடிகின்றது. Rising from the Ashes (என். செல்வராஜா, 2003), யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது, Public Library Rises from it's Ashes (வி. எஸ். துரைராஜா, 2009), தீ தின்ற தமிழர் தேட்டம் (என். செல்வராஜா, 2013), உயில்: நூலகக் கவிதைகள் (க. நவநீதகிருஷ்ணன், 2015), யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள் 01. 06. 2015 உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு (தங்க. முகுந்தன், 2015), யாழ்ப்பாணப் பொது நூலகம் அன்றும் இன்றும் (ரூபவதி நடராஜா, 2019), Memorable Tidbits including the Jaffna Library Fire (Edward Gunawardena) ஆகிய நூல்கள் நானறிந்தவை. நானறியாதுபோன இன்னும் சிலவும் ஆங்காங்கே இருக்கக்கூடும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அழிப்பின் அதன் மூலம் நிகழ்த்தப்பெற்ற கலாசாரப் படுகொலையின் அரசியலை, அந்தச் சூழல் பற்றிய விழிப்புணர்வினை, எமது மக்களிடம் நீங்காத நினைவுகளாக வருடாந்த நினைவுகூரல்களின் வழியாக எடுத்துச்செல்வதில் நாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைவரும் இன்றுவரை வெற்றிகண்டு வந்திருக்கின் றோம். இந்த ஆறாவடு நீண்டகாலம் எமது மனங்களில் நிலைகொண்டிருக்கும் என்பதை நாமறிவோம்.

இருப்பினும், இந்த நினைவு கூரல்களிடையே நாம் முக்கியமானதொரு விடயத்தை, யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் அழிப்பின் மூலம் நாம் கற்றிருக்க வேண்டிய ஒரு முக்கிய வரலாற்றுப் பாடத்தை, நாற்பதாண்டு காலமாக கற்றுக்கொள்ளத் தவறிவிட்டோமோ என்ற மனக்குறை எனக்கு இன்னமும் உண்டு. இத்தகைய நூலக எரிப்பின் வழியாக எமது இனத்தின் கலாசாரத்தை, முதுசொத்தை அழித்துத் துடைத்தெறிய முனைந்த கயவர்களின் விருப்பத்தை இன்று எங்களது அறியாமை யாலும் அக்கறையின்மையாலும் நாங்களே எங்களது கரங்களில் ஏந்திக்கொண்டிருக்கிறோம். இன்றளவில் வெள்ளம், சுனாமி போன்ற இயற்கை அழிவுகளாலும், போரினாலும், புலப்பெயர்வுகளினாலும், முறையான பராமரிப்பின்றியும் நாம் இழந்தவை கணக்கற்றவை என்பதை கண்டறியும்போது இந்த மனக்குறை பூதாகார மாக எழுந்து நின்று எம்மைப் பயமுறுத்துகின்றது. நூலகம் எரிக்கப்பட்டு நாற்பதாண்டுகள் கடந்த நிலையில் இன்றுவரை நாம் இழந்தவை எவ்வளவு என்பதை, தாயகத்தின் நூலகங்களிலும் தனியார் இல்லங்களிலும் பழைய நூல்களைத் தேடி அலைந்துவரும் என்னைப் போன்றவர்கள் தான் நன்கறிவர். 'தோலிருக்கச் சுளை இல்லாது போகும்" ஒரு நிலை அது.

ஒவ்வொரு படைப்பாளியும் தனது நூல்கள் எங்கோ ஒரு நூலகத்தில் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனேயே வாழ்ந்து மறைந்து விடுகிறார். நூலகம் வேறு, ஆவணக் காப்பகம் வேறு என்ற உண் மையை அந்த அப்பாவி எழுத்தாளர் மாத்திரமல்லாது எம்மில் பலரும் இன்றளவில் அறிந்திராதது கவலைக் குரியது. பட்டியலாக்கம், பகுப்பாக்கம், 'டிஜிட்டைசேஷன்" என்று நூலகத் தொழில்நுட்பங்களில் அக்கறை செலுத் தும் அளவிற்கு எமது நூலகக் கல்வியியலாளர்கள் கூட நூலகமும் சமூகமும் பற்றிய அடிப்படை கல்வியை எதிர்கால நூலகர்களின் மனதில் விதைப்பதில் வெற்றி கண்டுள்ளார்களா என்பதை அவர்களால் உருவாக் கப்பட்டு வரும் புதிய நூலகர்களின் செயற்பாடுகளின் வழியாக நாம் அறிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் அரசாங்கம் சட்டபூர்வமாக ஆவணக் காப்பகத்தையோ சுவடிச்சாலையையோ மாகாண அரசின் பொறுப்பில் இயங்கவிடாமல் மத்திய மயமாக்கி வைத்திருப்பதன் அரசியல் உள்நோக்கம் என்ன என்பதையும் நாம் உணர வேண்டியவர்களாயுள்ளோம்.

இன்றுவரை, தமிழ்ப் பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான பொதுசன நிறுவனங்கள் தனிநபர்களின் கூட்டு முயற்சி யினால் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக ஒரு காலத்தில் இயங்கி கால ஓட்டத்தில் இயக்கமின்றி மறைந்து மறக்கப்பட்டுவிட்டன. அவற்றின் வரலாற்று ஆவணங்கள் இன்று எங்கே பாதுகாக்கப்பட்டு வருகின்றன? அரச நிறுவனங்களின் பெறுமதிமிக்க வரலாற்றாவணங்கள் கொழும்பு சுவடிகள் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதுபோல, எமது உள்ளூர் நிறுவனங்களின் ஆண் டறிக்கைகள், வரலாற்று முக்கியத்துவமான கடிதங்கள் போன்ற வரலாற்றாவணச் சேர்க்கையினை தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கிவரும் பல்கலைக்கழக நூலகத் தினதும் மாநகர பொது நூலகங்களினதும்; சுவடிக் காப்பகப் பிரிவுகள் தேடிப்பாதுகாத்து வைத்திருக்க வேண்டுமல்லவா? செய்கிறார்களா? தேடிப்பாருங்கள்.

இனியொரு நூலகம் அழிக்கப்பட்டால்கூட அந் நூலகத்தில் இருந்த ஆவணம் மின்வருடல் செய்து உலகின் எங்கோ ஒரு இடத்தில் பாதுகாக்கப்படுகின்றது என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் எம்மிடையே இயங்கும் 'நூலகம் நிறுவனம்;" போன்ற இணையவழி நிறுவனங்களை நிதித்தட்டுப்பாடின்றி தொடர்ந்து வேகமாக இயங்கவைக்க எம்மிடையே உள்ள தனவந்தர்கள் சிறிய அளவிலாவது நிதியுதவி வழங்க முன்வரவேண்டும். அதனால் அவர் களது ஆவணமாக்கல் பயணத்தை விரைவுபடுத்தலாம் என்பது வெளிப்படை. இதனை நாம் அனைவரும் செய்யவெண்டும் என்றும், அது எம் ஒவ்வொரவரினதும் தார்மீகப் பணி என்றும் நினைத்துப் பார்த்திருக்கிறோமா? அது அடுத்தவரின் வேலை என்றல்லவா கடந்து சென்றிருக்கிறோம்.

2001இல் நான் 'யாழ்ப்பாணப் பொது நூலகம் - ஓர் ஆவணம்" என்ற நூலை தொகுத்திருந்த வேளை, யாழ்ப்பாண நூலகம் புனரமைக்கப்பட்டிருக்கவில்லை. இழுபறிகளுடன் அதற்கான ஆயத்தங்களே மேற் கொள்ளப்பட்டு வந்திருந்தன. இன்று அந்த நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த அரைகுறை நிலைமையை விடவும், 1950களில் அமரர் வி.எம். நரசிம்மன் அவர்கள் யாழ் மாநகரசபைக்கு வழங்கிய வரைபடத்துக்கமைய முழுமையான கட்டிட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு, 2,50,000 இற்கும் அதிகமான நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் புதுப்பொலிவு பெற்றுக் காணப்படுகின்றது. இன்றைய தலைமுறையினருக்கு அந்த நூலகம் சாம்பல் மேட்டிலிருந்து பீனிக்ஸ் பறவையாக எழமுயன்ற பழைய வலிமிகுந்த வரலாறு சொல்லப்படவில்லை. அழிப்பின் அடையாளமே தெரிந்துவிடாமல்; திட்டமிட்டு பூசி மெழுகப்பட்டே அவர்களுக்கு அந்த நூலகம் பின்னாளில் வழங்கப்பட்டிருப்பதும் தெரிய நியாயமில்லை. இந்நிலையில் நூலகத்தை எரித்தவர்களாலேயே புதிய வரலாறு எழுதப்பட்டு வருகின்றது என்ற செய்தி எமக்குள் எச்சரிக்கை மணியை எழுப்பியிருக்கவேண்டும். நூலக எரிப்பில் நேரடிப் பங்காளனாக இருந்த எட்வர்ட் குணவர்த்தன என்ற முன்னாள் டி. ஐ. ஜீ. எழுதிய சுயவரலாற்று நூலான Memorable Tidbits including The Jaffna Library Fire, என்ற நூலில் தமிழீழ விடுதலைப் புலிகளே 1981இல் யாழ்ப்பாண நூலகத்தை தீயிட்டுக் கொழுத்தினார்கள் என்று புதிய வரலாற்றை எழுதுகின்றார். இனி எதிர் காலத்தில் இத்தகைய அபத்தங்களே எமது வரலாறாகும்.

நூலகத்தின் எரிப்பு இரு பக்கங்களைக் கொண்டது. எரித்தவர்கள் ஒரு பக்கம், எரியுண்டதை உணர்ந்தறிந்த பாதிக்கப்பட்டவர்கள் மறுபக்கம். பலரும் பார்க்கத் தக்கதாக நூலகம் எரிக்கப்படவில்லை என்பது வரலாற்று உண்மை. அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட அரசியல்வாதிகளை அரச பாதுகாப்புப் படைகள் கொலை வெறிகொண்டு தேடி அலைந்து திரிந்த அன்றைய இரவிலும் மறுநாளும்; செய்தி சேகரிக்கவோ, பார்வையிடவோ எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இப்பொழுதுதான் எரித்தவரின் சாட்சியங்கள் படிப்படியாக வெளிவருகின்றன.

யாழ்ப்பாண நூலகத்திற்கு அருகில் தீயணைப்பு இயந்திரங்களையே கொண்டு செல்ல அங்கிருந்த வெறிகொண்ட அரச படைகள் அனுமதிக்கவில்லை. நூலகம் எரிக்கப்பட்ட செய்தியறிந்த மாநகர ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம் துப்பாக்கிமுனையில் திருப்பியனுப்பப்பட்டார். யோகேஸ்வரன் தம்பதியினரைத் தேடிச்சென்ற படையினர் அவர்கள் மதிலால் பாய்ந்து மயிரிழையில் தப்பிச் சென்றதால் அவர்களது வீட்டைக் கொழுத்தினார்கள். அரசியல்வாதிகளைத் தேடி கட்சி அலுவலகத்திற்குச் சென்ற அவர்கள் அவர்களை அங்கு காணமுடியாதுபோன ஏமாற்றத்தால் கட்சி அலுவலகத்தையே தீவைத்துக் கொழுத்தினார்கள். உள்ளூர் ஊரடங்கு நகரில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஜூன் 1 ஆம் திகதி காலையில் நூலக எரிப்பின் எச்சங்களைக் காணச்செல்ல அன்றோ

***இந்த நினைவு கூரல்களிடையே நாம் முக்கியமானதொரு விடயத்தை, யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் அழிப்பின் மூலம் நாம் கற்றிருக்க வேண்டிய ஒரு முக்கிய வரலாற்றுப் பாடத்தை, நாற்பதாண்டு காலமாக கற்றுக்கொள்ளத் தவறிவிட்டோமோ என்ற மனக்குறை எனக்கு இன்னமும் உண்டு.***

மறுநாளோ பார்வையாளர்களை அனுமதித்திருக்கவில்லை. அனைத்தும் இருட்டினுள்ளேயே சாட்சியமற்று மேடையேற்றப்பட்டுவிட்டது. இந்தச் செய்தியை மக்களுக்குத் தெரிவித்திடக் கூடுமென்றே அதனைத் தடுக்கும் முயற்சியாக, ஈழநாடு பத்திரிகை காரியாலயமும் மறுநாள் எரித்து அழிக்கப்பட்டது. மே மாதம் நள்ளிரவு அச்சிடப்பட்ட ஜூன் 01ம் திகதிக்குரிய ஈழநாடு இதழ் யாழ்நகர் எரியூட்டப்பட்ட செய்தியைக் கூட மேலோட்டமாகக் கடைகள் எரிக்கப்பட்டன என்பதுடன் 'இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை (31.05.1981 நள்ளிரவு) யாழ் நகரில் பல கடைகள் தீக்கிரையாகிக்கொண்டிருந்தன. தியேட்டர் ஒன்றும் தீக்கிரையாகியுள்ளது" என்றே குறிப்பிட்டுள்ளது. அதன் பின்னர் ஜூன் 6ம் திகதிதான் பத்திரிகையின் அடுத்த இதழ் வெளிவந்துள்ளது. அதில் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டதாக ஒரு செய்தி கூட இருக்கவில்லை. செய்தித் தணிக்கை பற்றிய முதற் பக்கக் குறிப்பே எமக்கு பத்திரிகையின் பக்கங்களில் சொல்லப்படாத சேதியை சொல்லி வைத்திருந்தன.

யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டதை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாடியில் தன் அறையிலிருந்து கண்ட தாவீது அடிகளார்; அதனை தொலைபேசியின் ஊடாக கொழும்பு நண்பரொருவருடன் உரையாடியபோது வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த உரையாடலே யாழ். நூலக எரிப்புச் செய்தியினை கொழும்புக்கு எடுத்துச் சொன்னது. அவரது மரணமும் யாழ்ப்பாண நூலக எரியூட்டல் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது. அவரின் மறைவு தொடர்பான கண்ணீர் அஞ்சலியில் 01. 06. 1981 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது கல்லறை வாசகமொன்றில் அது 02.06.1981 என்ற குறிப்பிடப்பட்டுள்ளதை 'தனிநாயகம் என்னும் தமிழ்நாயகம்" என்ற தலைப்பில் அமுதன் அடிகளாரினால் தொகுக்கப்பட்டு சென்னை உலகத்தமிழர் பதிப்பகத்தால் வெளியிடப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நூலில் (268ஆம் பக்கத்தில்) உள்ள புகைப்படம் ஒன்றின் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது. தாவீது அடிகளார் மாரடைப்பால் ஜூன் 1ஆம் திகதி மரணமானார் என்று ஒரு செய்தியே இன்றளவில் பரவலாக அறியப்பட்டு வந்துள்ளது. இதனை இன்றும் உயிருடன் வாழும் அமரர் தாவீது அடிகளாருடன் நெருங்கிப் பழகியவர்கள் தெளிவுபடுத்தாவிட்டால் யாழ்ப்பாண நூலகத்தின் எரிப்பு மே 31 இரவா, ஜூன் 1ம் திகதி இரவா என்ற குழப்பம் நிலவுவது போலவே இவரது மரணத் திகதியும் வரலாற்றில் தெளிவற்றதாகி விடும்.

வரலாற்றை முறையாக ஆவணப்படுத்துவதில் எமக்குள்ள அசமந்தப் போக்கு இத்தகைய குழப்பங்களுக்கு வித்திடுகின்றன. கட்டுரையாளர்கள் தெளிவான சிந்தனையுடனும் சமூகப் பொறுப்புணர்வுடனும் தமது படைப்பாக்கங்களை எதிர்காலத்தில் வெளியிட வேண்டும் என்பது வரலாற்றுக் கடமையாகும்.

எமது பண்பாட்டு / கலாசாரப் படுகொலையின் திட்டமிட்ட அழிப்பினை நினைவுகூர்வதுடன் எமது பணி நிறைவடைந்தவிட்டதாகக் கருதாமல், எமக்கானதொரு வரலாற்று ஆவணச்சேர்க்கையினை புகலிடத்துத் தமிழர்களின் உதவியுடன் இனவிரோதிகளால் தேடியழிக்க முடியாதபடி பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை நாம் உடனடியாகத் தொடங்கப் போகிறோமா அன்றேல் அடுத்த ஆண்டு நினைவுகூரலை எதிர்பார்த்து மீண்டும் எமது மற்றைய வழமையான 'அத்தியாவசிய' வேலைகளுக்குள் எம்மை ஈடுபடுத்திக்கொண்டு இதனையும் மௌனமாகக் கடந்துசெல்லப் போகின்றோமா? ▣

அஞ்சலி :

## எழுத்தாளர் மாத்தளை கார்த்திகேசு



*மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளரும் கலைஞருமான கார்த்திகேசு இருபத்தைந்துக்கு மேல் மேடை நாடகங்கள் எழுதி இவரை சார்ந்த கவின்கலை மன்றத்தின் மூலம் மேடையேற்றியும் குணசித்திர பாத்திரங்களில் நடித்தும் பாராட்டும் பெற்றார்.*

*1974ம் ஆண்டில் 'களங்கம்' என்ற நாடகமும், 1975ம் ஆண்டில் 'போராட்டம்' என்ற நாடகமும், 1976ம் ஆண்டில் 'ஒரு சக்கரம் சூழல்கிறது' என்ற நாடகத்தினையும் இவர் எழுதி நடித்தார். நாடகங்கள் நாடக விழாவில் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளன.*

*இவரது 'காலங்கள் அழிவதில்லை' என்ற நாடகமே இவருக்குப் புகழைத் தேடித்தந்த நாடகமாகும் மறைந்த பேரா. க. கைலாசபதி அவர்களாலும் பேரா. கா. சிவத்தம்பி அவர்களாலும் பாராட்டப்பட்டு விமர்சிக்கப்பட்டது.*

*இலங்கை மத்திய வங்கி நடத்திய நாடக விழாவில் 'காலங்கள் அழிவதில்லை' நாடகத்தின் மூலம் சிறந்த நாடகம், சிறந்த நாடக ஆசிரியர், சிறப்பு நடிப்புக்குரிய பரிசைப் பெற்றவர். யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வண பிதா. தனி நாயகம் அடிகளார் தலைமையில் பிற நாட்டு அறிஞர்கள் மத்தியில் 'காலங்கள் அழிவதில்லை" நாடகம் மேடையேறியது. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய திரைக்கதை,வசனம் எழுதும் போட்டியில் இவருடைய 'ஈட்டும் சுடர்கள்' என்ற திரைக்கதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. இது தவிர 'அவள் என் ஒரு ஜீவ நதி' என்ற திரைப்படத்திற்குத் திரைக்கதை வசனம் எழுதி இவரே தயாரித்துள்ளார். தொலைக்காட்சியில் 'காலங்கள்' என்ற இவரது நாடகம் தொடர்நாடகமாக ஒளிபரப்பப்பட்டது. குடும்பம் ஒரு கலைக் கதம்பம்" என்ற நாடகத்தையும் தொலைக்காட்சிக்காக எழுதி நடித்ததோடு. இலங்கை மலையக பாரம்பரிய காமன் கூத்தையும் அமைத்தளித்தார். காமன் கூத்தையும் தொலைக்காட்சிக்கு அமைத்தளித்தார்.*

*'இளம் கலைஞர்களுக்கு ஒரு உந்து சக்தியாக திகழ்கின்ற இவர் தனது குறிஞ்சி வெளியீடு மூலம் 1991ல் 'கதைக்கனிகள்' இரண்டாம் பதிப்புடன் ஆரம்பித்து பல நூல்களை வெளியிட்டவர். கலை இலக்கியத்துறையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதற்காக 1993ல் சாகித்திய விழாவின் போது இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு 'கலாஜோதி' விருதளித்துக் கௌரவித்தது.*

*ஜூன் 95 மல்லிகை அட்டைப்படம் போட்டுக் கௌரவம் செய்தது. அத்தோடு 'வழி பிறந்தது' என்ற ஒரு நாவலையும் இவர் நூலுருவில் தந்துள்ளார். உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் நலன்கள் பிறப்பதற்குத் தேவையான வழிவகைகள் குறித்து வெகுவாக யோசித்திருக்கின்றார். அதன் விளைவு தான் வழி பிறந்தது என்ற இந்நூல் எனவும் வல்லிக்கண்ணன் அணிந்துரையில் குறிப்பிடுகிறார். இவ்விதம் மாத்தளை மண்ணுக்கு புகழ் சேர்த்த எழுத்தாளர் கலாஜோதி மாத்தளை கார்த்திகேசு அவர்களின் மறைவு ஈழத்து இலக்கியத்துறைக்கு பேரிழப்பாகும்.*

*தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் தமது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரது குடும்பபத்தவர்கள், கலை இலக்கிய நண்பர்களுடன துயரைப் பகிரந்துகொள்கிறோம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தோழர் எங்கட பக்கம் நீதியும் மக்கள் பலமும் இருக்கு, போராட்டத்த மட்டும் நாங்க கைவிட்டிடக் கூடாது" என்று திரவியத்துக்கு தோழர் ஜனகன் ஆறுதல் கூறினார்.*

# ஒயிலும் தண்ணீரும்

க. லக்ஷன்



மக்களுக்காக போராடுபவனை இந்த உலகம் சூரியனைப் போல சுட்டுப் பொசுக்கி விடுகின்றனவே. அது ஏன்?...

ஒரு மனிதனால் வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டு வர்க்கங்களைக் கடந்து நிற்க முடியாது. யுத்தமுனையில் உள்ள ஒருவனால் யுத்தத்தைப் புறக்கணித்துவிட்டு தனித்திருக்க முடியாது என்று லூசுன் என்ற அறிஞர் கூறியதைப் பள்ளியில் படித்த காலத்தில் இருந்து இன்று வரை அறியாது இருந்தவனல்ல திரவியம்.

ஆனால்,... இன்று கடும் தாழமுக்கத்தில் சிக்குண்டு தத்தளிக்கும் படகினைப் போல் அவன் மனம் திண்டாடியது.

"தோழர் எங்கட பக்கம் நீதியும் மக்கள் பலமும் இருக்கு. போராட்டத்த மட்டும் நாங்க கைவிட்டிடக் கூடாது" என்று திரவியத்துக்கு தோழர் ஜனகன் ஆறுதல் கூறினார்.

சாய்வு நாற்காலியில் படுத்திருந்து யோசித்துக் கொண்டிருந்த செந்திலின் மனதில் நேற்றைய போராட்டத்தில் நடந்தவை நிழலாடின.

'ஏன்? இந்த மக்களின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் அநீதிக்கு விலைபோகின்றார்கள். தண்ணீரில் கழிவோயில்படிவு தெள்ளத்தெளிவாகத் தெரிந்தும் அதனை இல்லையென்று பத்திரிகைகளில் பிரசுரித்து அறிக்கை விடுக்கிறார்களே...! உழைக்கும் மக்களின் துன்பம் இவர்களுக்கு ஏன் விளங்கவில்லை... இப்படியே இந்தப் பிரச்சினையை விடக்கூடாது. நிச்சயமா விடவே கூடாது' என்று நினைத்தவாறு இருந்தார்.

அடுத்த நாள் இடம்பெறவிருக்கும் போராட்டத்திற்கு தேவையான பதாதைகளை தயாரிக்குமாறு தன்னுடைய சகபாடிகளுக்கு பணித்ததல்லாது தானும் அவர்களுடன் இணைந்தார்.

மறுநாள் ஊர்ப் பொது மண்டபத்தடியில் மக்கள் கூட்டம் அலைமோதியது. அவர்களில் அனேகமானோரின் முகமானது சிவந்து கோபத்தின் உச்சியில் இருந்தது. குடிக்கவும் குளிக்கவும் மாத்திரமன்றி பயிர்ச்செய்கைக்கும் நிலத்தடி நீரை நம்பி வாழும் மனித ஜந்துக்கள் அவர்கள். போராடுவதைத் தவிர வேறு என்னதான் பண்ண முடியும். ஒருசிலர் இனி எதுவுமே செய்யமுடியாது என விரக்தியில் இருந்தனர். ஒருசிலர் தனக்கும் இப்பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை என ஒதுங்கி நடந்தனர். ஏனெனில் யாவரும் மனிதர்களே.

"தோழர்களே! நிலத்தடி நீரில் கழிவோயில் கலந்துவிட்டது. நாங்கள் இப்பிரச்சினைக்கு தீர்வு வேண்டிப் போராடுகின்றோம். நம் எதிர்கால சந்ததியினர் இந்நிலத்தில் வாழ வேண்டும். எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளை யுத்தம் அழித்தது; சுனாமி அழித்தது; அவையெல்லாம் போதாதென்று நிலத்தடி நீரையும் நாசமாக்கிறான்கள். இதயெல்லாம் தட்டிக் கேட்க நாமே நமக்காக ஒன்றிணைந்து போராடுவோம். அதிகாரிகள் வந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை நாங்கள் ஓய மாட்டோம்" என ஆவேசமான பேச்சொன்றை நிகழ்த்திவிட்டு இறங்கினார் செந்தில்.

மதியம் 12 மணிக்குப் பிறகு சொகுசு வாகனம் ஒன்று காற்றைக் கிழித்தபடி வந்தது.

எல்லார் முகங்களும் பிரச்சினைக்கு தீர்வு கிடைக் கும் என்று சந்தோசத்தில் இருந்தன.

மக்களுக்கு அருகில் கார் நிறுத்தப்பட்டு அதிலிருந்து புழுதி படியாத வேஷ்டியோடு ஒரு அமைச்சர் இறங்கினார். அவருக்கு அருகில் நாலு பொலிஸ்க்காரர்களும் உடனிருந்தனர்.

"என் இனிய மக்களே! ஏன் போராட்டம் நடத்திறீங்க. தண்ணில ஓயில் கலந்தது எண்டது பச்சப் பொய். அதனை நீங்கள் நம்ப வேண்டாம். நான் சுகாதார அமைச்சர். என்னை நீங்கள் முழுமையாக நம்பலாம். இப்ப எல்லாரும் கலைஞ்சு போங்க" என்று முழங்கி விட்டு அமைச்சர் காரில் ஏறினார். சற்று நேரத்தில் எல்லாம் முடிந்து விட்டது.

"யோ இனி என்னையா செய்யப் போறீங்க. அமைச்சரே சொல்லிட்டாரில்ல. எல்லாரும் போய் வேலையப் பாருங்கப்பா" என்று வெறுப்புடன் முதியவர் ஒருவர் எழுந்து கூறிவிட்டு நடையைக் கட்டினார்.

திரவியத்துடன் மக்கள் சிலர் பதாதைகளுடன் வீற்றிருந்தனர். "நாங்கள் கோட்டுக்கு போவம் ஜனங்களே! உழைக்கும் மக்களின் இப் போராட்டத்திற்கு நியாயம் அந்த நீதிதேவதைக்கு முன்னால கிடைக்கும்" என்று மக்களுடன் நீதிமன்ற வாசல்படி ஏறினார் திரவியம். ஆனால் அங்கும் ஏமாற்றமே மிஞ்சியது.

இரண்டு நாட்கள் கழித்து ஒரு பரபரப்பான செய்தியுடன் ஒருவன் செந்திலிடம் ஓடிவந்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சியின் அலைகள் தாண்டவமாடின.

வந்தவனிடம் "ஏன்ரா சின்ராசு நாங்கள் கவலேல போராடிட்டு இருக்கம். நீ சிரிச்சுக் கொண்டு ஓடி வாற" என்று வினவினார் திரவியம்.

"ஐயா! எங்கட அமைச்சர் வீட்லயும் கிணத்து தண்ணியில ஓயில் கலந்திட்டாம். அமைச்சர் வீட்டுக்கு புதுசா பௌசர்ல தண்ணி கொண்டுவந்து ராங்கல நிரப்பினமாம். அதுமட்டுமில்ல தண்ணில ஓயில் கலந்திருக்கெண்டு சொல்லி அமைச்சரே அறிக்க கொடுத்ததுமில்லாம தண்ணிப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் எண்டும் சொல்லியிருக்காராம்" என்று சொல்லிக்கொண்டே ஓடினான்.

திரவியத்தின் அருகில் இருந்த பெரியவர் ஒருவர் "ஏன் தம்பி நாங்களும் ஓயில் கலந்திருக்கெண்டு சொல்லேக்க இந்த போக்கத்த பயலுக இல்லன்னுதானே சொன்னாங்க. இப்ப இவங்களே ஓயில் கலந்தது உண்மதான்னு சொல்லுறாங்களே" என்று பொருமினார்.

"ஐயா! அது ஒண்டுமில்ல. நாங்கள் எல்லாம் சாதாரண உழைக்கும் மக்கள். அவங்கள் எல்லாரும் அரச உத்தியோகத்தர்கள். அப்ப இவங்கள் முதலாளி வர்க்கத்துக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் தான் பிரச்சினை எம்பாங்க. நாம எல்லாரும் உழைக்கும் வர்க்கந்தானே நம் பிரச்சினை பெரிய பிரச்சினை இல்ல அவங்களுக்கு. அதான் அன்னைக்கே தோழர் மாக்ஸ் 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று அறைகூவல் விடுத்தார்" என்று திரவியம் பதில் வழங்கிவிட்டு மெல்ல நடக்கலானார்.

⊡




வரப்பெற்றோம்

கலாலக்ஷ்மி கதைகள்

*எழுத்தாளர் - கலாலக்ஷ்மி தேவராஜா (செம்மனச்செல்வி)*

*வெளியீடு: கலாலயம் பதிப்பகம் இல.68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.*

*பக்கங்கள் : 227*

*விலை : 400/=*

*மகரகாவியம், றோஜாப்பூ, பூமராங் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளில் வெளிவந்த சிறுகதைகளுடன் வெளிவராத சிறுகதைகளும் அடங்கிய தொகுப்பு கலாலக்ஷ்மி தேவராஜாவின் ஓராண்டு நினைவாக வெளிவந்துள்ளது. அத்துடன் 'கலாலக்ஷ்மி எனும் ஆளுமை' எனும் நூலும் வெளி வந்துள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் சகோதரி

றீஸொம் ஹய்லெ (Reesom Haile)
( முக்கியமான எரித்திரியக் கவிஞர் )

மகள் சகோதரி
உன் சொந்த இனிய மகள்
உன் தாயின்
மகள்
அவரின் சகோதரியின் சகோதரனின்
மகள்
உன் தந்தையின் மகள்
அவரின் சகோதரியின் சகோதரனின்
மகள்
உன் சகோதரியின் சகோதரனின்
மகள்
உன் அண்ணனின்
மகள்
உன் அக்காளின்
மகள்
அது எவராயிருப்பினும்
இந்த நகரின் மகள்
உன் அயலவரின் மகள்
நம் தேசத்தின்
மகளும் சகோதரியும்
உன் சகோதரி
உன் மகள்
உன் பாட்டி உன் தாய்
நீ மணக்கவுள்ளவள் உன் மனைவி
ஒவ்வொரு மகளும்
உன்னிற் பகுதி
உன் சொந்த இனிய மகள்
சகோதரிக்குச் சகோதரிக்குச் சகோதரி

அவர்களின் உரிமையை மதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லிகை ஜீவா அவர்களுக்கான அஞ்சலிக் கூட்டம் - யாழ்ப்பாணம் (06.02.2021)



மல்லிகை சி. குமார் நினைவுச் சிறப்பிதழான தாயகம் சஞ்சிகையின் 101 ஆவது இதழ் அறிமுக நிகழ்வு - தலவாக்கலை



தாயகம் சஞ்சிகையின் 101 ஆவது இதழ் அறிமுக நிகழ்வு - ஹட்டன் கொட்டகலை




சூழலிய நோக்கில் இயற்கை விவசாயமும் உரப் பாவனையும் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் - யாழ்ப்பாணம்



தாயகம் சஞ்சிகை அறிமுகமும் கலந்துரையாடலும் - மலையகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org